# பாக்குப் பட்டை

பிரமிளா பிரதீபன்



மல்லிகைப் பந்தல்

# பாக்குப் பட்டை

– பிரமிளா பிரதீபன் –

மல்லிகைப் பந்தல்
201/4 ஸ்ரீகதிரேசன் வீதி,
கொழும்பு - 13.
தொலைபேசி: 2320721

இது ஒரு மல்லிகைப் பந்தல் வெளியீடு :

முதற் பதிப்பு : மே 2010

உரிமை : ஆசிரியருக்கே

பக்கங்கள் : xvi+83

விலை : ரூபா: 150/=

அட்டைப்பட வடிவமைப்பு : மேமன்கவி

அட்டை அச்சமைப்பு : Happy Digital,
75 1/1, Sri Sumanatissa Mw,
Colombo- 12.

கணினி அச்சமைப்பு : எஸ். சாந்தகுமாரி

ISBN : 978-955-8250-46-4

அச்சிட்டோர் :
**Lakshmi Printers**
103A, விவேகானந்தா மேடு,
கொழும்பு 13.

## சமர்ப்பணம்:

என் அண்ணா-
திரு. S. துரைராஜா அவர்களுக்கு....

# முன்னுரை

இது திருமதி பிரமிளா பிரதீபனின் இரண்டாவது சிறுகதைத் தொகுதி என்பதுவும்: அதுவும் மல்லிகைப் பந்தலினூடாக வெளிவருகின்றது என்பதுவும் எனக்கு இரட்டிப்பு மகிழ்வைத் தருகின்றன.

பிரமிளாவின் முதல் தொகுதியான **'பீலிக்கரை'** புரவலர் புத்தகப் பூங்காவின் முதல் நூலாக 2007ல் வெளிவந்துள்ளது. மூன்றே வருடங்களில் மல்லிகைப் பந்தல் இவருடைய இரண்டாவது தொகுதியினை வெளியிடுகிறது.

புரவலரின் கை ராசியான கைதான்!

பிரமிளா எழுதிய முதல் கதை **'பீலிக்கரை'**. 2006 செப்டம்பர் ஞானம் இதழில் வெளி வந்திருக்கிறது.

புதிய தலைமுறைப் படைப்பாளர்கள் என்னும் வரிசையில் ஞானத்தில் முதல் அறிமுகமும் பிரமிளாதான். என்னைக் குதூகலிக்கச் செய்த செய்தியும் அதுதான்.

பிரமிளா ஊவாக்கட்டவளையில் பிறந்தவர் என்பதை அறிந்து கொண்டதும் அதன் மூலம் தான்.

நான் பிறந்து வளர்ந்த மண். விளையாடித் திரிந்த மண். விழுந்தெழுந்த மண்.

அந்த மண்ணிலிருந்து ஒரு படைப்பாளி. அதுவும் பெண் என்பது எத்தனை மகிழ்வான செய்தி.

அந்த ஊவாக்கவட்டவளைத் தோட்டத்து மண்ணிலிருந்து மேற்கிளம்பிய இன்னொரு படைப்பாளி **பரிபூரணன்.** எனது கடைசித் தம்பி.

1983 ன் இனக்கலவரக் கொடூரங்கள் பதுளையையும் விட்டு வைக்கவில்லை. பெற்றோருக்குத் துணையாக்கி தமிழ்நாட்டிற்கு அனுப்பிவிட்டோம். கப்பலேறும் போது ஊவாக்கட்டவளையின் ஆசிரியராக இருந்தவர், பரிபூரணன்.

இப்போது அதே ஊவாக்கட்டவளை மண்ணிலிருந்து பிரமிளா பிரதீபன்.

ஈழத்து இலக்கியத்துக்கும் பொதுவாகவும் மலையக இலக்கியத்துக்குக் குறிப்பாகவும் அந்தத் தோட்டத்து மண் தந்திருக்கும் புதிய நம்பிக்கை இந்தப் பிரமிளா.

'பீலிக்கரை' என்கின்ற அவருடைய கதைத் தலைப்பு என்னைப் பெரிதும் ஈர்த்தது. நான் எழுத ஆரம்பித்த அந்த அறுபதுகளில் நானும் ஒரு கதை எழுதி இருந்தேன், **'பீலி மேலே போகிறது'** என்னும் தலைப்பில். அறுபதுகளில் சிந்தாமணியிலும் சிலகாலங்களின் பின் இந்தியா டுடே யிலும் பிரசுரம் பெற்ற கதை 'பீலி மேலே போகிறது'.

ஒரு நாற்பது நாற்பத்தைந்து வருடங்களின் பின் அதே ஊவாக் கட்டவளைத் தோட்டத்துப் பீலி பற்றி பிரமிளாவின் 'பீலிக்கரை' பேசுகிறது.

பீலி என்ற சொல்லும், அது குறிக்கும் பொருளும் மலையகத்துக்கே உரித்தானவை. பிரத்தியேகமானவை.

ஒரு சில தமிழ் அகராதிகள் பீலி என்ற சொல்லுக்கு 'மயில்' மயில் தோகை: பெண்களின் கால் விரல் அணி; பனங்குருத்து என்றெல்லாம் அர்த்தம் கூறுகின்றன. ஆனால், தண்ணீரூற்றும் குழாய் என்பது போன்ற எதையும் காணவில்லை.

மலையகத்துக்கே உரித்தான தனித் தன்மைகளுடன் மேற்கிளம்பும் வாழ்வியற் பண்புகள் வெகு இயல்பாகவே பிரமிளாவின் எழுத்துக்களில் பிரதிபலிக்கின்றன.

'வெள்ளை மண் சந்தியின் மணம் நுகர்ந்து....' என்று ஒரு வரி வருகின்றது.

அந்த வெள்ளை மண் சந்தியில் நின்று கீழே பார்த்தால் குடு குடு பள்ளமும் அடிவானமும், மலைகளும் இணைந்தமிழும் அந்தத் தொலைவில் மின்னலிட்டு மறைந்து கொள்ளும் ஊமை ஆறும்.....

ஒரு நல்ல நாள் பெருநாளுக்கு லயத்துச் சுவருக்கு சுண்ணாம் படித்துக் கொள்ள முடியாதவர்கள் இந்த வெள்ளை மண் வாங்கியில் இருந்து மண் தோண்டி லயத்துச் சுவருக்கடித்து வெள்ளையாக்கிக் கொள்வதை என்னுடைய கதைகள் கூறி இருக்கின்றன.

அந்த மண்ணின் நினைவுகளை நெஞ்சு நிறைய மலரச் செய்கின் றன, பிரமிளாவின் எழுத்துக்கள்.

குழந்தையாயிருந்து மாணவியாகி, குமரியாகி, மனைவியாகி, தாயாகி, அனைத்துக்கும் அப்பால் ஒரு பொறுப்புள்ள ஆசிரியையுமாகி சூழ்நிலைகள் தளர்த்த மறுக்கும் அழுங்குப் பிடிகளின் மத்தியிலும், எழுதும் எழுத்தை நேசிக்கும், கனம் பண்ணும் ஒரு பெண்ணாக எழுந்து நிற்கின்றார் பிரமிளா.

நேசிக்கத் தெரியாத எவராலும் ஆட்கொள்ளவும் முடியாது. ஆட்சி செய்யவும் முடியாது.

எழுத்தை ஆள வேண்டுமெனில் அதை நேசிக்கத் தெரிந்திருக்க வேண்டும். அது இவருக்குத் தெரிந்திருப்பதால் எழுத்தை ஆளுகின்ற வல்லமை தன் இருகரம் நீட்டி இந்தப் பிரமிளா பிரதீபனை வரவேற்றுக் கொண்டே இருக்கிறது.

புத்தகம் ஒன்றின் பக்கங்களைப் புரட்டுவது போல, மனதைப் புரட்டப் புரட்ட வந்து நிற்கும் அநுபவங்கள் கதையாடலாக மாறுகின்ற தன்மை, அந்த அநுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் லாவகம், அந்தப் பகிர்தலினூடாக முனைப்புறும் சுயவிமர்சனப் பரவசம்..... போன்ற வைகள் இவருடைய எழுத்தைச் செழுமைப்படுத்தும் சக்திகள்.

பிரமிளா ஒரு கலைப் பட்டதாரி.

ஒரு மனைவியாகித் தாயுமாகப் போகும் சுக நினைவுகளுடனிருக் கையில் தான் வெளிவாரிப் பட்டப் படிப்பு.... பிறகு பரீட்சை.

**'சுமைகளுடன் ஒரு சிறகு'** இந்தப் பரீட்சை எழுதிய அநுபவத்தை ஒரு பரவசத்துடன் தருகிறது.

'கையும் ஓடாமல் காலும் ஓடாமல் ஒரே பதற்றம். எவ்வளவு இருக்கிறது படிக்க? சோம்பேறித்தனத்தால் பின் போட்டு பின்போட்டு..... நாளைக்குப் பரீட்சை..... ஒரே நாளில் எப்படி இவ்வளவையும் படித்து.....

திருமணத்துக்கு முன்பென்றால் அக்கடாவென்று ஒரு மூலையில் அமர்ந்து விடிய விடிய படிக்கலாம்'

'தாலி கட்டிக்கிட்டா படிக்கேலாதுன்னு யாரு சொன்னது?' அம்மாவின் கம்பீரக் குரல்.

'ஆனால், அதன் பின் ஒன்று ஒன்றாய் எத்தனை சிக்கல்கள்....? மன உளைச்சலுடன் தடுமாறிக் கொண்டிருக்கும் போது, டெலிபோன் அடிக்கிறது.'

'எரிச்சலுடன் தான் எடுக்கிறேன். வேறு யாரும் இல்லை. அண்ணா தான்.... வந்து கொண்டிருக்கின்றாராம். உள்ளம் ஆனந்தக் கூத்தாடினா லும், 'இன்று தானா வரவேண்டும்?' என்ற மன ஏக்கத்தையும் காட்டத் தவறவில்லை கதை.

இந்த அண்ணன் தான் பிரமிளாவின் உயிர்! ஆற்றில் மூழ்கி அகாலமாக மரணமடைந்து விட்ட செய்தியை இந்த நூலின் ஆரம்பத்தி லேயே கூறுகின்றார். நூலையும் அவருக்குத் தான் அர்ப்பணம் செய்துள்ளார், இந்த அன்புத் தங்கை. எத்தனை வேதனையாக இருக் கின்றது? அந்த அண்ணன் பார்த்து வைத்த கணவர் தான் பிரதீபன் அவர்கள். பெற்றவர்களுக்கொப்பாகவும், தனக்கு உற்ற துணையாகவும், ஆறுதலாகவும் இருக்கும் அவர் 'கடவுள் எனக்குத் தந்த வரம்!' என்கின்றார், பிரமிளா.

'இரவு பதினொரு மணி. களைப்பும், சோர்வும் கண்ணீருமாக படித்துக் கொண்டிருக்கின்றேன். ரூமுக்குள் வந்தவர் என் கண்ணீரைக் கண்டிருக்க வேண்டும். காரணம் கேட்கின்றார். நாளைக்கு எக்ஸாம் என்கின்றேன். 'சோ வாட்...... டேக் இட் ஈஸி! என்கின்றார்.'

'என் பயமும், தவிப்பும் அவருக்குப் புரிய வாய்ப்பில்லை தானே?'

'நின்றபடி, நடந்தபடி. அமர்ந்தபடி, கால்களை நீட்டி, கால்களை மடித்து..... எப்படி எப்படி எல்லாமோ படிக்க முயல்கின்றேன். முடிய வில்லை. கண்கள் மூட விளைகின்றன.'

'என் கணவர் கட்டிலில் புரண்டு புரண்டு விதம் விதமாகத் தூங்கு வதை சகிக்க முடியாத என் தூக்க உணர்வு என்னை உந்துகிறது.'

'புத்தகங்களையும் பயத்தையும் மூட்டை கட்டிப் போட்டு விட்டு லைட்டை அணைக்கின்றேன்.'

'நிச்சயமாய் எனக்குத் தெரியும். இன்று ஒரு கனவு வரும். அதில் நான் முதல் மாணவியாய்ப் பாராட்டப்பட்டுக் கொண்டிருப்பேன்....!' என்று தன்னுடைய 'சுமைகளுடன் ஒரு சிறகு' கதையை முடிக்கின்றார்.

பெண்மைக்கேயுரிய ஒரு திவ்வியமான மென்மை பிரமிளாவின் எழுத்துக்கள் மூலம் ஒரு வாசிப்பு அநுபவத்தைத் தருகின்றன.

**'நான் தாயாகப் போகிறேன்', 'சபலம்', 'புரியவில்லை', 'குளியல்', 'செண்டாக்கட்டிச் சாமி'** போன்ற கதைகளிலும் இந்தப் பண்பு தூக்கலாகவே நிற்கின்றது.

சபலத்தில் வரும் பெண் இப்படி எண்ணுகின்றாள். திருமணமாகாதவள், திருமண வயதை நிறைய ஏக்கங்களுடன் தாண்டிக் கொண்டிருப்பவள், ஒரு ஆணின் தகாத ஸ்பரிசத்தால் சபலமடைகின்றாள்.

'ஒரு ஆணிடம் இத்தனை இன்பங்களா? முன்பு கிடைத்த ஓரிரு ஸ்பரிச சந்தர்ப்பங்களைக் கற்பைக் காரணம் காட்டி மறுத்திருக்கின்றேன். இனியும் அப்படி வேண்டாமே!..... பாவம் என் உடலும் கொஞ்சம் அனுபவித்துப் பார்க்கட்டுமே.... கற்போடு இருந்தென்ன....? சிலையா வடிக்கப் போகின்றார்கள்?'

அதிர்வுகளைக் கூட ஓர் அனாயாசமான எளிமையுடன் வெளிப்படுத்தி விடுகின்றார் இவர்.

பிரமிளாவின் எழுத்துக்களின் வெளிப்படையான தன்மையும் எளிமையும் கூட அவருக்கான ஒரு பலம் தான்.

ஒரு எழுத்தாளனை யாராலும் உருவாக்கிவிட முடியாது. அப்படி உருவாக்க, உருவாக்கிக் கொள்ள முனைந்தது தான் நமது மார்க்ஸீய விமர்சகர்களுக்கு ஏற்பட்ட முதல் தோல்வி. ஆனால் எழுத்து வளமும், ஆளுமையும் கொண்ட ஒரு படைப்பாளியை ஊக்குவித்து, நெறிப்படுத்துவதன் மூலம் இலக்கியத்துக்கு வளம் சேர்க்கும் ஒருவராக அவரை செப்பனிட்டுக் கொள்ளலாம். இலக்கியம் என்பது மனித சமூகத்தை உள்ளடக்கியதே.

அப்படிச் செப்பனிடக் கூடிய சகல தகுதிகளையும் கொண்டவராகத் திகழ்கின்றார், பிரமிளா பிரதீபன் அவர்கள்.

தமிழகத்தின், ஈழத்தின், மலையகத்தின் சிறந்த படைப்புக்களை வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். எழுத்தை நேசிக்கும் ஒருவருக்கு அவைகளுக்கான நேரம் தானாகவே வரும்.

இந்தத் தொகுதியின் முதற் கதைக்கு அடுத்ததான கதை **'சஞ்சும்மா'**. சஞ்சும்மா என்பது ஒரு பசுவின் பெயர். பசு மாட்டைப் பற்றிய கதை இது.

நான் எழுத ஆரம்பித்த அறுபதுகளில் நாங்கள் வளர்த்த பசு மாட்டைப் பற்றி ஒரு கதை எழுதி இருந்தேன். கதையின் பெயர் **லில்லி.** பசுவின் பெயரும் அதுதான்.

கன்றுகள் ஈன்று, பால் கறந்து, துள்ளிக் கிடந்த காலங்கள் எல்லாம் போய், அது ஈன்ற கன்றின் கன்றும் சினையாகி நிற்கும் காலத்தில் லில்லி சினை பிடிக்கவில்லை, என்ற ஏமாற்றத்தில், அதை இறைச்சிக் கடைக்காரனுக்கு விற்று விடத் தீர்மானித்து, அதை பட்டியில் வைத்தே வெளிப்படையாகவும் பேசியாகிவிட்டது. கடைக்காரன் வரப்போகும் மறுநாள் அதிகாலையில் பட்டிக்குப் போனால், லில்லி செத்துப் போய்க் கிடக்கிறது.

'லில்லி செத்துப் போய் விட்டது' என்று தான் கதையை ஆரம்பித்திருந்தேன்.

சுந்தர ராமசாமியின் மிகவும் சிலாகித்துப் பேசப்பட்ட **'கிடாரி'**யுடன் ஒப்பிட்டுப் பேசப்பட்ட கதை **லில்லி.** இங்கே மனிதர்கள் சாகின்றார்கள். இவன் மாட்டைப் பற்றி எழுதிக் கொண்டிருக்கின்றான் என்று ஏசப்பட்ட கதை 'லில்லி'.

பிரமிளாவின் இந்த 'சஞ்சும்மா'விற்கு ஒரு அறுபது வருடங்களுக்கு முன்பிருந்த எங்களது ஊவாக் கட்டவளையின் மாட்டுப் பட்டியில் என்னைக் கொண்டு போய் நிறுத்தி வைக்கும் சக்தி இருந்திருக்கிறது.

ஒரு ஆச்சர்யம் கலந்த ஆனந்தம் என்னை ஆட்கொண்டது.

பிரமிளாவின் சஞ்சுவின் அந்த நாக்கு, அதன் சொர சொரப்பு; உரசி

உரசி பாசம் காட்டும் அதன் கண்கள்..... எங்களது லில்லியினுடையதைப் போலவே!

ஊவாக்கட்டவளையின் வாத்தியாரான எங்கள் **ஆஞாதான்** லில்லியிடம் பால் கறப்பார்கள்.

சென்ற வருடம், ஒரு மாலைப் பொழுதில் எனக்கொரு தொலைபேசி அழைப்பு வந்தது.

''ஐயா, நான் பிரமிளா..... அப்பா வந்திருக்கின்றார். உங்களுடன் பேச ஆசைப்படுகின்றார்.....''

பிரமிளா தெளிவத்தையுடன் பேசுவதற்குக் காரணம் உண்டு. அர்த்தம் இருக்கிறது. அப்பா ஏன் என்ற ஆச்சர்யத்துடன் ''கொடுங்கள்'' என்றேன்.

''ஐயா நான் செல்வராஜா..... பிரமிளாவின் அப்பா.... உங்களைப் பார்க்க ஆவலாக இருக்கிறது..... இந்த முறை முடியவில்லை. பேரனின் பிறந்த நாளைக்காக ஓடி வந்தேன். நாளை காலை போய் விடுவேன்....'' என்றெல்லாம் பேசியவர், ''உவா கட்டவளையில் உங்கள் அப்பாவிடம் படித்திருக்கின்றேன்.....'' என்றார்.

எங்கள் ஆஞாவின் மாணவரின் மகள், பிரமிளா செல்வராஜா. மலையகத்தின் புதிய தலைமுறைப் படைப்பாளரின் முன் வரிசைப் படைப்பாளி. எத்தனை மகிழ்வாக இருக்கிறது.

இந்தத் தொகுயில் **'புரியவில்லை'** என்றொரு கதை இருக்கிறது. என்னுடைய சிறுகதைத் தலைப்புக்களில் இதுவும் ஒன்று.

ஒரு பெண் தான் பெரியவளாகும் அந்த மகத்தான மாற்றத்தை எந்தப் பெண்ணால் தான் அந்த நேரத்தில் புரிந்து கொள்ள முடிந்திருக்கிறது?

அம்மாவுக்குச் சொன்னதும், தடுமாறிப் போகின்றாள்.

'இந்தச் சடங்கு தனக்குத் தேவை தானா?' என்றும் நினைக்கின்றாள்.

சடங்கு கொண்டாட்டங்களினூடாக ஒரு பெண் அவளுடைய வாழ்க்கைப் படி முறையின் பெண்மைத் தன்மையினை அடைந்துள் ளமை ஒப்புக் கொள்ளப்படுகிறது. ஆனால், பெரியவளான பெண்ணை விடவும், தங்களுடைய மகள் திருமணத்துக்குத் தகுதியுடையவளாக வந்துவிட்டாள், தன்னுடைய பெண்மையின் நேர்நிலையாக உறுதிப் படுத்தி விட்டாள் என்று அவளுடைய பெற்றோரும் குடும்பத்தினரும் பெருமைப்படுவதாகவே இந்தச் சடங்குகள் அமைந்து விடுவதை ஒரு கண்டிப்புடன் முன் வைக்கின்றார் 'கிறேஸ் புவர்' தன்னுடைய ஆங்கிலச் சிறுகதை மூலம்.

Purification என்னும் அந்த ஆங்கிலக் கதையினை **'தூய்மை யாக்கல்'** என்று மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளது 'பெண்' சஞ்சிகை.

அநுபவங்கள் கதையாடலாக மாற்றப்படுவதற்கான ஒரு அருமை யான உதாரணம், இச் சிறுகதை. நாமெல்லாரும் வாசிக்க வேண்டிய கதை.

ஈழத்துச் சிறுகதை உலகில் பிரமிளாவுக்கான ஒரு இடம், ஒரு ஆசனம் காத்திருப்பதையும் அதற்காக உழைத்து அதில் அமரும் பக்கு வத்தை அவர் ஏற்கும் அறிகுறிகளையும் இந்தக் கதைகள் உறுதிப் படுத்துகின்றன.

அவருக்கும் அவரூடாக மல்லிகைப் பந்தலுக்கும் எனது வாழ்த்துக் கள். பாராட்டுக்கள்.

**123-1/B, Alwis Place,**
**Averiwatte Road,**
**Wattala.**
**25.05.2010**

என்றும் அன்புடன்
தெளிவத்தை ஜோசப்.

**பதிப்புரை**

# மலையக மண்ணிலிருந்து புதியதொரு வரவு

இந்தத் தொகுதியின் ஆசிரியையை நான் கண்டு பழகிய காலங்கள் சொற்ப காலங்களே. அதற்குள் இவரது ஆற்றல்களைப் புரிந்து கொண்டுவிட்டேன்.

அப்பொழுது இவரொரு மாணவி. செல்வி. **பிரமிளா செல்வராஜா** என்பது தான் அப்போதைய எழுத்துப் பெயர். இவரது வாழ்வில் அதன் பின்னர் பல மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன.

மாணவியாக இலக்கிய உலகில் அப்போது காலடி எடுத்து வைத்து வளர்ந்து வந்தவரைப் பின்னர், ஆங்கில ஆசிரியையாக இவரைக் கண்டு பழகினேன். காலம் தேங்கிப் போய் விடவில்லை. இவருக்கு இந்தக் காலத்திலேயே திருமணமும் நடைபெற்று முடிந்தது. தொடர்ந்தாற் போல, ஓர் ஆண் குழந்தைக்குத் தாயாகவும் இன்று இவர் திகழ்ந்து வருகின்றார். இத்தனை எதார்த்த நெருக்கடிகளுக்குள்ளும் இன்று இவர் பட்டதாரியாகி, பட்டதாரி ஆசிரியையாகவும் திகழ்வது இவரது திறமைக்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

மலையகத்தைச் சார்ந்த இந்த இளம் இலக்கியக் குருத்தோலையை முதன் முதலில் சந்தித்த போதே, இவரிடம் ஏதோவொரு ஆக்கபூர்வமான திறமை குடி கொண்டுள்ளதை உள்மனதில் மட்டிட்டுக் கொண்டேன். இவரைத் தொடர்ந்து அவதானித்து வந்தேன்.

இந்த இடைக் காலத்தில் தான் புரவலரின் புத்தகப் பூங்கா வெளியிட்டுள்ள இவரது சிறுகதைத் தொகுதியும் பார்க்கக் கிடைத்தது.

என் அடி மன நிர்ணயிப்புக்கு ஏற்ப அத்தொகுதி சாட்சியமாகவும் அமைந்திருந்ததை மட்டிட்டு, அவதானித்துக் கொண்டேன்.

**'பீலிக்கரை'** என்ற அந்தச் சிறுகதைத் தொகுப்பு நூலில் இவரையும் இவரது இலக்கிய ஆற்றலையும் மட்டிட்டு அவதானித்துக் கொண்டிருந்த நான், வளரும் மலையகத்து இலக்கியப் புதுக் கொழுந்து என இவர் பற்றிய எனது முன் மதிப்பீடுகளை இன்னும் கொஞ்சம் விசாலித்து ஆழப்படுத்திக் கொண்டேன்.

இவரது படைப்புக்கள் தொடர்ந்து மல்லிகையில் இடம் பெற்று வந்தன. இளம் பரம்பரையை ஊக்குவிப்பது எனது நோக்கம்.

இவரது இரண்டாவது சிறுகதைத் தொகுதியை அடுத்து **மல்லிகைப் பந்தல்** வெளியீடாக வெளியிட வேண்டும் என என் வரைக்கும் வரையறுத்து நிச்சயத்துக் கொண்டேன்.

**'பாக்குப்பட்டை'** என்ற சிறுகதைத் தொகுதியை இலக்கிய நெஞ்சங்களுக்கு **மல்லிகைப் பந்தல்** வெளியீடாகச் சமர்ப்பிக்கின்றேன்.

மலையகத்தில் உலகில் இன்று அரசியல் மட்டத்தில் மாத்திரமல்ல, இலக்கிய மட்டத்திலும் புதுப் புதுத் திருப்பங்களும் புதிய மாற்றங்களும் ஏற்பட்டு வருவதை அந்த மண்ணினது சமூக மாற்றத்தை ஆழமாக உற்று அவதானிப்போர் வெகு சுலபமாகப் புரிந்து கொண்டுவிடுவார்கள்.

இளந்தலைமுறை கல்விச் சமூகமாக மாறிவருகின்றது. முழு நாட்டினது பொது நீரோட்டத்தில் தன்னையும் ஓர் அங்கமாகப் பிணைத்துக் கொள்ள அரும்பாடுபட்டுச் சகல பொதுத் துறைகளிலும் தன்னையும் அர்ப்பணித்து உழைத்து வருகின்றது. அதன் பெறுபேறு இன்று கல்வித்துறையிலும் அரசியல் துறையிலும் பொதுவாகக் கலை இலக்கிய வெளிப்பாடுகளிலும் நாம் துல்லியமாகக் காண முடிகின்றது.

வயதுக்கும் மேம்பட்ட ஆற்றலும் படைப்புத் திறனும், மொழித் தேர்ச்சியும் இயல்பாகவே அடையப் பெற்றுள்ள இவர், பின்னொரு காலத்தில் மலையகத்தில் குறிப்பிடத்தக்க ஒரு படைப்பாளியாகத் திகழ்வார் என்பதை, இவரது படைப்புக்களை மேலோட்டமாகவே படித்துப் பார்ப்பவர்கள் மெய்யாகவே புரிந்து கொள்வார்கள் என்பது மட்டும் திண்ணம்.

**16. 04. 2010**

# என்னைப் பற்றி நான்....

குழந்தையாய்..... குமரியாய்.... மனைவியாய்..... பின் தாயாகியது..... இது நான்! நானே தான்!

சூழ்நிலை இறுக்கிப் பிடித்துத் தளர்த்த மறுக்கும் நேரத்திலும் கட்டாயமாய் எழுத்தை நேசிக்கத் துணிந்ததும் நானே தான்.

ஆயிரம் மாற்றங்கள் என் பயண வேகத்தில்.... ஒரு சாதாரண நடுத்தரக் குடும்பத்தின் இரண்டாவது பிள்ளையாய், மலைநாட்டின் வெளியெங்கும் ஓடிக் களைத்து...... தேயிலை நுனிக் கொழுந்தை ஆய்ந்து மணந்து..... கொச்சைத் தமிழ் இரசித்து.... வெள்ளை மண் சந்தியின் மணம் நுகர்ந்து..... என்னை எழுதத் தூண்டியதும் என் சூழ்நிலை தான்.

மலையகத்தின் குறையே, எங்கும் பேசப்படுவதாய் எனக்குப் பட்டது. நியாயம் தான். அந்தக் குறைகளையே அழகாய்ச் சொல்ல ஒரு சிறு முயற்சி என் கதைகளின் கருக்களில்.....

முயற்சி வெற்றியளித்ததாவென நானறியேன். இருந்தும் என் முயற்சித் திரியை அடிக்கடி தூண்டிவிடும் பெரும்பங்கை எப்போதும் செய்யும் மல்லிகை ஜீவா, என் ஆரம்பத்தை அங்கீகரித்து என்னை அழகாய் உருவாக்கிய ஞானசேகரன் ஐயா காணும் போதெல்லாம் தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்தும் கவிஞர் மேமன்கவி மற்றும் பலர்..... பலர்..... என் தீவிர முயற்சிக்கு நீர் வார்த்தனர். வளர்த்தெடுத்தனர்.

மூத்த எழுத்தாளர்களின் பரந்த மனம் கண்டு வியப்புற்றிருக்கி றேன். நெஞ்சம் நெகிழ்ந்திருக்கின்றேன்.

2007.11.18 அன்று இலக்கியப் புரவலர் அல்ஹாஜ் ஹாசிம் உமர் அவர்களின் 'புரவலர் புத்தகப் பூங்கா' எனும் அமைப்பில் எனது **'பீலிக்கரை'** எனும் சிறுகதைத் தொகுதியே முதலாவது வெளியீடாய் வெளியிடப்பட்ட ஒரு திடீர் நிகழ்வு..... அது நான் எதிர்பாராமல் கிடைத்த சந்தர்ப்பம்... இன்னும் என்னைக் கிள்ளிப் பார்க்கிறேன், அது நிஜம் தானாவென்று.....! அவ்வகையில் புரவலர் ஹாசிம் உமர் அவர்களை எப்போதுமே நன்றியுடன் நினைவு கூரக் கடமைப்பட்டுள்ளேன்.

எழுத்தில் எனக்கு ஆர்வம் இருந்த போதிலும் கூட, 2006ஆம் ஆண்டு தான் நான் முதன்முதலில் பத்திரிகைகளுக்கு எழுத ஆரம்பித்தேன். **'சலனம்'** எனும் முதற் கவிதை தினமுரசில் பிரசுரமான பொழுது எத் தனை ஆனந்தம் எனக்குள்..... ஒரு குழந்தையை ஈன்றெடுத்துக் கொஞ் சிக் குலாவுவது போல..... அத்தனை வாஞ்சையுடன் அப்பத்திரிகை யைத் தடவிக் கொடுத்தது, இன்னும் எனக்கு ஞாபகத்தில் இருக்கிறது.

தொடர்ந்தும் தினக்குரல், வீரகேசரி, மித்திரன், சுடரொளி முதலிய பத்திரிகைகளும் மல்லிகை, ஞானம், ஜீவநதி முதலிய இலக்கியச் சஞ்சிகைகளும் என் ஆக்கங்களைப் பிரசுரித்து என்னை ஊக்கப்படுத் தியமையை மிகப் பெரிய விடயமாகக் கருதுகிறேன்.

எனது எழுத்துப்பணியின் அடுத்த முக்கிய கட்டமாய்க் கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்களால் நடத்தப்பட்டு, கம்பன் கழகத்தால் வழங்கப்பட்ட 2008ஆம் ஆண்டின் **'மகரந்தச் சிறகு'** விருது எனக்குக் கிடைத்தமை என்னைப் பல வழியில் உற்சாகப்படுத்தி, ஊக்குவித்தது.

நான் மெதுவாய் வளர்ந்து வருகையில் என் குடும்பத்தை மரமாய்த் தாக்கிய என் உயிர் அண்ணன் 2009.04.17. அன்று எம்மைப் பிரிந்து, இறையடி சேர்ந்து விட்டார். அந்தப் பாதிப்பின் தாக்கம் இதோ எழுதிக் கொண்டிருக்கும் இந்நொடிவரை என்னை அழுத்திப் பிடித்து மனதை வலிக்கச் செய்கிறது.

திருமணம், குழந்தை, தொழில், குடும்பம்..... என்று பெண்கள் பாவம் என சில நேரங்களில் நான் நினைப்பதுண்டு. ஒரு வகையில் நாங்களும் ஆமையினம் தான். நாமும் ஓட்டைச் சுமந்தபடியே திரியும் ஆமைகளாய்ச் சதா வீட்டின் நினைவுடனேயே திரியும் பெண்கள்.

'பால்மா டின்னைச் சரியாக மூடினேனா....? சீனிக்குள் எறும்பு போய்

விடுமோ....? மழை வந்தால், கொடியில் காயும் உடைகள் நனைந்து விடுமோ.....?' இந்த நினைவுகளுக்கிடையில் குழந்தையின் நலம்..... தொழிலின் சுமை..... பிரயாண அலுப்பு..... எழுத்துலகில் தாக்குப் பிடிக்க முடியாதோ? என்ற சந்தேகம், எனக்குள்ளே......

முடங்கிப் போனேன், சில சந்தர்ப்பங்களில்.....மூர்ச்சித்துப் போனேன், வரிசையாய்த் தெரியும் வேலைகளுக்கு நடுவில்.....

அப்போதெல்லாம் எனக்கு ஆறுதல் சொன்ன என் பெற்றோர், அவர்களுக் கொப்பாய் எனக்கமைந்த கணவன்..... இவர்கள் கடவுள் எனக்குத் தந்த வரங்கள்..... வரங்கள்!

இடைநடுவில் என் சூழ்நிலைப் பாரத்தில் நான் அமுக்கி வைக் கப்பட்டது என்னவோ உண்மைதான்.

வயிற்றில் கருவை சுமந்தபடியே வெளிவாரிப் பட்டப்படிப்பை முடித்து, இன்று நான் ஒரு கலைப்பட்டதாரியாகவேனும் நிற்பதற்கு என் கணவனின் தாராள மனதே நிச்சயமாகக் காரணமாகும்.

ஓரளவு என் பாரம் குறைந்து வருகையில் தான் இந்த சிறுகதைத் தொகுப்பை வெளியிடும் படி மல்லிகை ஜீவா அவர்களின் தொடர்ச்சியான தூண்டலும் உற்சாகப்படுத்தலும் என்னை இயங்க வைக்கின்றன.

இந்தத் தொகுப்பின் சிறுகதைகளில் அநேகமாய் எனது ஊரான ஊவாகட்டவளையின் நிகழ்வுகளும், அந்த மனிதர்களின் நிஜங்களுமே பதிவாகியிருக்கின்றன...... யாவுமே இல்லையெனினும், ஓரளவு உண்மையையே தான் எழுதியிருக்கிறேன்.

இப்போது வளர்ந்து வரும் புதியவள் நான். என் இந்தச் சிறு கதைகளைப் படித்து, என் குறை, நிறைகளை விமர்சித்து என்னைச் செதுக்க வேண்டும் என உங்கள் ஒவ்வொருவரிடமும் பணிவன்புடன் வேண்டுகிறேன்.

**பிரமிளா பிரதீபன்**

**142/17, Don Bosco Mw,
Palliyawatta,
Wattala.**

## என் அண்ணாவிற்கு......

**அண்ணா....!**

**உன்னிடம் சொல்ல நிறைய நிறைய இருக்கிறது. நிறையவே இருக்கிறது..... ஒரு ஆறேழு மாதங்களாய் உன்னுடன் பேசாததால் மனது பாரம் நிரம்பியதாய் ஓர் உணர்வு.......**

**அது போகட்டும், நீ இப்போது எங்கேயடா இருக்கிறாய்.....? உன்னைப் பார்க்கவென்று எனக்கு எத்தனை துடிப்புத் தெரியுமா? எனக்கு மட்டுமல்ல, அம்மா உன்னை நினைத்து அழாத நாளேயில்லை. நீ எங்களை விட்டுப் பிரிந்ததாய் நாங்கள் யாருமே நம்பவில்லை. சதா உன் படத்துடன் பேசுகின்றோம். அடிக்கடி உன் நினைவுகளை மீட்டுகிறோம்.**

**இப்படித் திடீரென எங்களை விட்டு போய்விட்டாயே...! உனக்குத் தெரியுமோ தெரியவில்லை. நான், அம்மா, டடா, தங்கைகள் யாருமே இப்போது நிம்மதியாய் இல்லை. அடி மனதில் எப்போதும் ஒரு வலி இருந்து கொண்டே தான் இருக்கிறது.**

**வழமையாக நீ தனியாக எங்கும் போவதில்லையே...... அன்று மட்டும் எங்களைக் கட்டாயமாய்த் தவிர்த்து விட்டுக் குளிக்கப் போனது இதற்காகத்தானா....?**

**ஆற்றோடு நீ போனதாய் வந்த அந்த நரகச் செய்தியை என்னால்**

ஜீரணிக்கவே முடியவில்லை. உன்னைச் சடலமாய் பார்க்கும் வரை நான் அதை நம்பவும் இல்லை.

உன் தலையின் நெற்றி ஓரத்தில் ஒரு காயம் இருந்தது. கொஞ்சம் கறுத்திருந்தாய். மற்றபடி அதே என் தங்க அண்ணன் தான். உன் கால் விரல்களை சொக்ஸ் போட்டு மூடியிருந்தார்கள். உன் விரல்களைத் தொட்டுத் தொட்டுப் பார்த்தேன். நான் நகம் வெட்டிவிடும் விரல்களது. உன் தலைமுடியை நிறையத் தடவை தடவிப் பார்த்தேன்.

அந்த நிமிடங்களை என் உயிர் பிரியும் வரை மறக்கவே முடியா தடா... நீ சிரிக்கவில்லை, பேசவில்லை. நடுவீட்டில் காட்சியாய் கிடந் தாய். அம்மா கத்திக் கதறித் தொண்டை வரண்டு, மூர்ச்சையாகிப் போயி ருந்தாள்.

யாருக்கு யார் ஆறுதல் சொல்வது? டடாவிற்கு நெஞ்சு வருத்தம் இருப்பதால், நீ ஒரு வார்த்தை தானும் எதிர்த்துப் பேச மாட்டாயே. எங்களையும் பேசவிட மாட்டாயே.....! அன்றென்றால் ஆறேழு தடவைகள் டடாவிற்கு நெஞ்சு வருத்தம் கூடிப் போய்...... நாங்கள் பதறிப் போனோமடா.

இன்னொரு விடயம் தெரியுமா? இதுவரை நடக்காத ஒரு புதுமை நடந்தது. அதை மட்டும் நீ பார்த்திருந்தால், நிறையச் சந்தோஷப்பட்டிருப் பாய். நம் சொந்தக்காரர்கள் அனைவருமே நம் வீட்டில் கூடி இருந் தார்கள்.

ஆயிரம் காரணங்கள் சொல்லி நம் விஷேசங்களை, தவிர்த்த அவர்கள் உன்னைப் பார்க்கக் குடும்ப சகிதம் வந்திருந்தார்கள்.

அம்மாவின் முகத்தில் ஒரு நம்பிக்கை. தன் ஆறு சகோதரர்களும் தன்னைத் தாங்குவார்கள் என்று எண்ணியிருப்பாள் போல......

நானும் அப்படித்தான் நினைத்துவிட்டேன். நீ இருக்கும் வரை நெஞ்சு நிமிர்த்தித் திமிருடன் நடந்து திரிந்த நாங்கள், எல்லோர் தயவையும் நாடிக் குன்றிக் குறுகிப் போய்விட்டோம்.

நீ எனக்குக் கலியாணம் கட்டி வைத்தவன்...., அது தான் உன்

மச்சான் நல்லவனாய் அமைந்து விட்டான். அவன் தான் உன் எல்லாத் தேவைகளையும் கவனித்துச் செய்திருக்கிறான். அவன் மட்டும் இல்லாதிருந்தால் நம்ம குடும்பம் நடு ஆற்றில் தத்தளித்த நிலையாகிப் போயிருக்கும்!

எல்லாமே ஒரு இரண்டு கிழமைகளுக்குப் பிறகு தான் தெரிய வந்தது! நம் மாமன்மார்களின் பரந்த உடம்பு, மனதில் இல்லையென்று பிறகுதான் அண்ணா தெரிய வந்தது.

பெரிய மாமாவும் மாமியும் ஒரு நாளேனும் வீட்டில் தங்கவில்லை. காரியம் முடிந்து அன்றே கிளம்பியவர்கள் தான், உன் எட்டாம் நாள், முப்பதாம் நாள் என்று எதற்கும் தலைகாட்டவே இல்லை. குறைந்த பட்சம் ஒரு போன் பண்ணுவது கூட இல்லை.

மற்றவர்களும் அப்படித்தான். பெரிதாய் எங்களிடம் ஒட்டவில்லை. ஒருவேளை எல்லாச் செலவும் தங்களுக்கு வந்துவிடுமென்று எண்ணி ஒதுங்கினார்களோ என்னவோ....!

எங்களைத் தாங்கிய நீ அடியோடு சாய்ந்துவிட்ட போதிலும், நாங்கள் நம்பிக்கை தளரவில்லையடா..... உன்னிடத்தில் நான் இருந்து எல்லாம் செய்ய வேண்டுமென்று எண்ணினாலும், சில நேரங்களில் உடைந்து போய் விடுகிறேன். அப்போதெல்லாம் அழ மட்டுமே என்னால் முடிகிறது.

உன் கருமாதி நேரம் தான், உனது இழப்பு, வலியை அதிக மாக்கியது.

ஆயிரம் செலவுகள் இருக்குமே...... ஏதாவது செய்ய வேண்டுமா வென ஒப்புக்காகவேனும் யாரும் கேட்கவில்லையடா.

இனி எப்போதுமே சொந்தங்களை நம்பக் கூடாதென்று தெளிவாய் உணர்ந்து கொண்டேன்.

இல்லையென்று சொல்வதற்கில்லை, பாதிக்குப் பாதியாய் உன் கருமாதியன்றும் வந்திருந்தார்கள். ஏதோ அவசரம் என்று இடையில் கிளம்பிப் போனவர்களுமுண்டு.

தனித்துப் போனோம் அண்ணா...... அநாதையாகிப் போய் விட்டோம். என் தங்க அண்ணாவே, உன் ஒருத்தனுக்குத் தான் எத்தனை பெரிய ஆற்றல்!

உன் இடத்தை நிரப்ப எங்களால் முடியவில்லை. எங்களில் எல்லாமே தொலைந்தே போனது.

எல்லாமே இருந்தாலும், ஒன்றுமே இல்லாமல் இருப்பதாய் உணர்கிறோம்.

எங்களின் எதிர்பார்ப்பெல்லாம் ஒன்றே ஒன்றுதான். நீ மீண்டும் எங்களிடமே வந்துவிடடா.....

வருவாயா அண்ணா......?

எங்களுக்குப் பிள்ளையாகவேனும் வந்து பிறப்பாயா.....? அனுதினமும் அதையேதான் பிரார்த்திக்கின்றோம், கூடிய விரைவில் என் அண்ணன் வந்துவிட வேண்டுமென்று...... அந்த நம்பிக்கையில் தான் அம்மாவும் உயிருடன் இருக்கிறாள்.

வீட்டிற்கு வரும் புழு, பூச்சிகளிடம் கூட, நீயென்று எண்ணி அம்மா உறவாடிக் கொண்டிருப்பது இப்போவெல்லாம் வழமையாயிற்று.

இதையெல்லாம் எப்படிப் படிப்பாய் என்று எனக்குத் தெரியவில்லை. படிப்பாயென்ற நம்பிக்கையில் எழுதி விட்டேன்.

அன்புடன்
உன் தங்கை.

# சஞ்சும்மா

எனக்குக் கவலைதான். இருந்தாலும், வேறு வழியில்லை. உயிரோடு இருந்து அவஸ்தைப்படுவதை விட, செத்துப் போதல் உசிதம் தானே. இதனைக் கருணைக் கொலையென்றும் சொல்வார்களாம். ஆனால், இப்பொழுது நடக்கப் போவதென்றால், நிச்சயமாய்க் கருணைக் கொலையல்ல. இதிலும், ஒரு வருமானத்தைத் தேடும் வழியைத் தான் என் அப்பன் செய்திருக்கிறார்.

"அடேய், ஐஞ்சு மணிக்கு அந்த மொதலாளி வருவது...... மாட்டைக் கட்டிவை...."

அப்பா மூன்றாவது முறையாகவும் கத்துகிறார். இனியும் தாமதித்தால் போச்சு...... போன கிழமை பட்ட அடி இன்னுமே வலிக்கிறது. சடாரென எழும்பி மாட்டை இழுத்து வந்து பட்டிக்குள் கட்டிப் போடுகிறேன். மாடென்றோ, பசுவென்றோ எப்பொழுதுமே அதை நான் நினைத்ததில்லை. செல்லமாய்ச் சஞ்சு என்றுதான் அழைப்பேன். வழமை போல் அதனுடன் விளையாட இப்பொழுது என்னால் முடியாதிருந்தது. சஞ்சும்மாவின் கண்களிலும் கண்ணீர். அதன் தலையை லேசாய் வருடிக் கொடுக்கிறேன். என் தலையை அதன் முகத்தோடு ஒட்ட வைக்கும் போது, என் கண்ணீர்த் துளிகள் சஞ்சுவின் முகத்தில் பட்டிருக்க வேண்டும். லேசாய் அசையப் பார்க்கிறது.

"என்ன மன்னிச்சிடு சஞ்சும்மா... உன்னக் காப்பாத்த முடியல்லடா..."

பேசாமல் சஞ்சுவையும் கூட்டிக் கொண்டு எங்காவது ஓடிவிட்டால்.....? சாத்தியப்படாது. சஞ்சுவிற்கு எப்போதோ காலில் பட்ட காயத்தில் புழு வைத்து விட்டதாம். இனி எப்படியும் காப்பாற்ற முடியாதாம்.

தான் சாகப் போவது தெரிந்தோ என்னவோ? சஞ்சு சோகமாகவே இருந்தது. முதலாளி வருவதற்கு இன்னும் இரண்டு மணித்தியாலங்கள் தான் இருக்கிறது. அதற்குள் சஞ்சுவிற்குப் பிடித்த தண்ணீர்க் கொடியைக் கொண்டு வந்தால் தின்னக் கொடுக்கலாம்.

இடுப்பில் கத்தியையும், கயிற்றையும் செருகிக் கொண்டு பத்தாம் நம்பர் மலைக்கு வேகமாய் ஓடுகிறேன்.

அநேகமாய் இந்த மலைக்குத்தான் சஞ்சுவை மேயக் கூட்டி வருவேன். தண்ணீர்க் கொடியென்றால் அதுக்கு மிகவும் பிடிக்கும். சஞ்சு புல் மேய்ந்து முடியும் வரை ஒரு கல்லில் அமர்ந்து கொண்டு கத்தியால் நோண்டி நோண்டி எனக்குத் தெரிந்த எல்லாப் பெயரையும் எழுதி வைப்பேன். பொழுது போவதே தெரியாமலிருக்கும். சஞ்சுவைக் கட்டிப் போடவோ, கவனிக்கவோ அவசியமே இல்லை. ஒரு குரல் கொடுத்தால் போதும், ஓடி வந்து விடும். நான் என்ன சொன்னாலும் சஞ்சுவிற்கு விளங்கும். அழத் தெரியும். சிரிக்கத் தெரியும். முறைக்கத் தெரியும். ஏன்? உரசி உரசிப் பாசத்தைக் காட்டக் கூடத் தெரியும். சிலநேரம் நாக்கால் கையை நக்கிவிடும். அம்மாடி....! அந்த நாக்கு இருக்கே, எவ்வளவு சொர சொரப்புத் தெரியுமா? இறுக்கமா இரும்பு மாதிரி. ஒருதடவை நக்கினா ரெண்டு நிமிசம் வலிக்கும். இருந்தாலும், என் கையை நக்க விட்டுட்டுச் சிரிப்பேன். சஞ்சுவின் கண்ணைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம். எப்பவும் அதில் ஒரு சாந்தம் தெரியும். அந்த உணர்வை வேறு எந்தக் கண்ணிலுமே நான் கண்டது கிடையாது.

யாருக்காவது பசுவோட மடிக்கிட்டப் போய் இருக்க முடியுமா? யாராவது இருந்தால் எத்தி விரட்டிடும். பழகினவங்கக் கிட்டக் கூட முரண்டு பிடிக்குமாம். ஆனா, நான் என்ன செய்தாலும் சஞ்சும்மா எதிர்க்காது. ரெண்டாம் நம்பர் மலையில் வெயிலுக்கு ஒதுங்க ஒரு பெரிய மரம் கூட இல்லை. அப்போ வெயில் சுட்டெரிச்சது. வேறு வழியில்லாமல் சஞ்சும்மா புல்மேயுற இடத்துக்கிட்டப் போய் அது மடிக்கிட்ட உட்கார்ந்துட்டேன்.

எனக்கு நிழல் தர வேண்டி ஒரே இடத்திலேயே சஞ்சு புல் மேய்ஞ்சத, எப்பவுமே என்னால மறக்க முடியாது.

மாடு மேய்க்கிறது ஒன்னும் நினைக்கிற மாதிரிச் சாதாரண விஷயமில்லை. ரசித்துச் செய்தால், அது ஒரு கலை. வெறுத்தால் அதுவே பெரிய ரணம். என்கென்றால், இது சுகமான அநுபவம்தான். அது புல் மேயும் அழகு.... மேய்ந்த புல்லை அசைபோடும் விதம்..... அமர்ந்திருக்கும் பாவனை..... ஒவ்வொன்றுமே வெவ்வேறு அபிநயங்கள். நீர் குடிக்கும் போது முகமெல்லாம் நீர்படிய, முகம் சுளிக்கும் அத்தருணத் தில் கொள்ளை அழகாய்த் தெரியும். சாணம் போடும் நேரத்தில் வால் தூக்கி உடலை நெளிக்கும். சிறுநீர் கூடத் தாளச் சுருதியோடு தான் தரையில் விழுந்து தெறிக்கும். மொத்தத்தில் சஞ்சு, நான் ரசிக்கும் செல்லக் காதலி.

பாவம் என் சஞ்சு, எத்தனை வருஷமாப் பால் தருது. எந்த எதிர்பார்ப் பும் இல்லாமத் தன் ரெத்தத்தைக் கொடுக்க வேற எந்த ஜீவனால முடியும்?...... புனிதம், தெய்வீகம், தாய்மை, கருணை, அழகு, லட்சுமி கரம் இவற்றிற்கெல்லாம் ஓர் உருவம் கொடுத்தால், நிச்சயம் அது பசுவாகத்தான் இருக்கும். அதைக் கடவுளாய் வணங்க ஒரு கூட்டம், அடித்துப் பயனெடுக்க ஒரு கூட்டம், வெட்டித் தின்னவும் ஒரு கூட்டம். பசுக்களைப் புரிஞ்சளவு கூட இந்த மனுஷங்களைப் புரிஞ்சிக்க முடியல்ல.

மாட்டுப் பொங்கலெல்லாம் வந்தா, சஞ்சுக்கு ஒரே குஷிதான். அன்றைக்குக் கொஞ்சம் அதிகமாகவே தேய்த்துக் குளிப்பாட்டுவேன். முத்துப்பழனிக்கிட்டக் கொடுத்துக் குளிப்பாட்டினாப் பத்து ரூபா கொடுக்கணும். அந்தாளுக்குச் சரியாக் குளிப்பாட்டத் தெரியாது. கயிறால தேய்ச்சு ஏனோதானோன்னு தண்ணிய ஊத்தி அனுப்பிடும். அதுதான் சஞ்சுவ நானே குளிப்பாட்டிடுவேன். ஒரு சிறிய சிரட்டை வச்சிருக்கேன். அதால வலிக்காம அழுத்தித் தேய்ப்பேன். கால் தொடைப் பகுதியில் அப்படியே களிமண் ஒட்டிக் காய்ஞ்சு போய் இருக்கும். அதை வரண்டி வரண்டி எடுக்கணும். அப்புறம் வயிறெல்லாம் கூட, மண்ணு மண்ணாத்தான் இருக்கும். எப்படியும் முழுசாத் தேய்ச்சுக் குளிப்பாட்ட ஒரு மணித்தியாலமாவது வேணும். குளிச்சவுடன சும்ம

புதுப்பொண்ணு மாதிரி..... பொட்டு வேற வச்சுவிட்டுட்டா சொல்லவா வேணும். அவ்வளவு அழகா இருக்கும். பூசையெல்லாம் பண்ணி, பொங்கல் வச்சி, பறங்கிக்காய்க் கறி போட்டு அப்பிடியே பிசைஞ்சு அம்மா ஊட்டும் போது, சின்னப்பிள்ள மாதிரிச் சாப்பிடும். எனக்குமே மாட்டுப் பொங்கல் தான் விருப்பம். பட்டியைச் சுத்தித் தோரணம் போட்டு, மாவிலை, கரும்பெல்லாம் கட்டி..... இப்போ நினைக்கையில் நெஞ் செல்லாம் ஏதோ செய்கிறது.

சஞ்சுவை பிரிஞ்சு இனி என்னால இருக்க முடியுமான்னு, தெரி யல்ல. ஒருவகையில் இதற்குக் காரணமும் நானேதான். ஒரு சரிவில மாட்டைக் கட்டிப்போட்டுட்டு ஸ்டோர் லயத்திற்கு விளையாடப் போயிட் டேன். நான் வரும் போது சஞ்சு பள்ளத்தில் விழுந்து படுத்திருந்தது. பின்முதுகில் ஒருகட்டை குத்திச் சிறிய காயமும் இருந்தது. ஆண்ட வனே....! அதை அப்போதே கவனித்திருந்தால் ஒருவேளை சஞ்சுவைக் காப்பாற்றியிருக்கலாமே? தப்புப் பண்ணிட்டேன். இப்போ அந்தப் புண்தான் கொதிச்சு புழு வச்சிடிச்சாம்.

சஞ்சு, அதுவாச் செத்துப் போயிருந்தால், எப்படியோ சமாதானமா யிடலாம். ஆனால், எங்கப்பா இறைச்சிக்கடை முதலாளிக்கு அரை விலைக்குக் கொடுக்கப் போறாராம். அதுதான் அழுகை அழுகையா வருது.

தண்ணீர்க்கொடி மலையெங்கும் பரந்து கிடந்தது. இழுத்து அறுத்து ஒரு கட்டுச் சேர்க்கிறேன். கண்ணீருடன் விம்மலும் சேர்ந்து கொள்கிறது. யாருமே இல்லாத தனிமையில் 'சஞ்சு சஞ்சு'வெனச் சத்தம் போட்டுக் கத்துகிறேன். இருக்கும் கொஞ்ச நேரத்தையும் வீணாக்கிவிடக் கூடாதே. தண்ணீர்க்கொடியைக் கட்டி எடுத்துக் கொண்டு ஓடும்போது, ஒரு கல்லில் கால் தடுக்கித் தடுமாறி விழப்போய்..... ஒருவாறு சுதாகரித்துக் கொள்கிறேன். ஆனாலும், அந்தக் கல் பெருவிரல் தசையைப் பிளந்துவிட்டிருந்தது. ரெத்தம் தாராளமாய் வழிய...... சஞ்சுவை வெட்டும் போதும் இப்படித்தான் ரெத்தம் வழியுமோ.....? வலி மறந்து ஓடிப் போய்த் தண்ணீர்க்கொடியை சஞ்சுவிற்குப் போடுகிறேன்.

ஐந்தறிவு ஜீவன்கள் என்றாலும், அன்பு காட்டுவதில் பேதமில்லைத்

தான். பேசமட்டுமே அவைகளுக்குத் தெரிவதில்லை. சில நேரங்களில் மிருகங்கள் மனிதர்களையும் மிஞ்சி விடுகின்றன. எந்த மிருகமுமே மறைந்திருந்து தாக்கிக் கொள்வதில்லை. நேருக்கு நேர் மோதிடும் பேராண்மையும், உணர்வாற்றலும் அவைகளுக்குத்தான் அதிகம் உண்டு. சஞ்சுவுக்கும் ஏதோவொன்று புரிந்திருக்க வேண்டும். புல்லைத் தின்னாமல் பார்த்த இடத்தையே பார்த்துக் கொண்டு அழுகிறது. அந்தக் கண்ணீரின் அடர்த்தியும், செறிவும் எனக்கு மட்டுமேதான் புரிகிறது.

இப்போது நான் என்ன செய்ய வேண்டும்? எதுவுமே புரியவில்லை. ஐந்து மணியாகப் போகிறது. முதலாளி லொறியில் வருவார். அப்பா கை யில் ஒரு தொகைப் பணத்தைத் திணிப்பார். பின் இருவரும் சிரித்தபடியே சஞ்சுவை முரட்டுத்தனமாய் இழுத்து லொறிக்குள் அடைப்பார்கள். சஞ்சு என்னைத் தேடும். அவர்களோடு போகாமல் முரண்டு பிடிக்கும். அலைமோதியபடியே லொறிக்குள் அடைப்பட்டுத் தூரமாய்த் தூரமாய்ப் போகும். அதற்குப் பின்........? என்னால் நினைக்க முடியவில்லை. அதைச் சகித்து முகம் கொடுக்கும் தைரியம் எனக்கில்லை. எதிர்த்தும் பலனில்லை.

என்ன செய்யப் போகிறேன்? ஏதும் தெரியாமலேயே பத்தாம் நம்பர்மலைக்கு மீண்டும் ஓடுகிறேன். சஞ்சுவுடன் நான் கழித்த நாட்களை அசை போட்டு அழுதிட...... தனியாய்ப் புரண்டு தேம்பிட........ வேகமாய் ஓடுகிறேன்.

இப்போது என்கையில் கயிறோ, கத்தியோ இல்லை.

# பாக்குப் பட்டை

"சின்னையா கங்காணி சேனையில் ஒரு பாக்குப் பட்டை விழுந்திருக்குடா......"

"பாக்குப் பட்டையா?......" காந்தி ஆவலுடன் கேட்டான்.

"ஆமாண்டா. நல்ல பெரிய்...ய பாக்குப் பட்டை." ராஜன் தன் கைகளை அகல விரித்துப் பாக்குப் பட்டையின் அளவைக் காட்டிக் கொண்டிருந்தான்.

"நெஜமாலுமே நீ பாத்தியா?......." இது சுலுத்தான்.

"சத்தியமாப் பார்த்தேண்டா..... வா காட்டுறேன்."

ராஜனுடன் அனைவரும் சேர்ந்து சின்னையாக் கங்காணியின் சேனையை அடைந்தனர்.

"அந்தத் தொங்கல்ல பாருங்கடா...."

"சரிதான் எப்படி எடுக்குறது?"

"நீ போய் எடுத்துட்டு வாறியா காந்தி?....."

"வேண்டாண்டா சாமி..... போன தடவையும் நான்தான் மாட்டிக் கிட்டேன்."

"அப்ப சுல்தான் போ...."

''மாட்டேன் நீயே போ......''

ராஜனுக்குக் கோபம்.

''சரி நான் எடுக்கிறேன். ஆனா, யாருக்கும் சவாரி தரமாட்டேன்.''

யாருமே இதற்குச் சம்மதிக்கவில்லை.

அவர்களுக்கு ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு வகையான விளையாட்டு. அதில், இந்தப் பாக்குப் பட்டைச் சவாரிக்குக் கொஞ்சம் போட்டி அதிகம். காரணம் அவ்வளவு எளிதாகப் பாக்குப் பட்டை கிடைப்பதில்லை. அப்படியே கிடைத்தாலும், இவர்கள் சவாரி செய்யும் வேகத்தில் இரண்டு நாட்களுக்குக் கூடத் தாங்காது.

ஆள் நடமாட்டம் குறைந்த ஒற்றையடிப் பாதையில் அல்லது, பொட்டல் தேயிலைச் சரிவில் தான் இந்தப் பாக்குப் பட்டைச் சவாரி சூடு பறக்கப் பறக்க நடக்கும்.

ஒரு தடவை ராஜனுக்குக் கால்சட்டை கிழிந்து, குண்டியெல்லாம் உராய்ந்து , உட்கார முடியாமல் தவித்தும் கூட...... அவ்விளையாட்டில் அத்தனை ஆர்வம் அவனுக்கு.

பாக்குப் பட்டையின் இலை உதிர்க்கப்பட்ட காம்புப் பகுதியைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டு, அதன் பரந்திருக்கும் பட்டையில் அமர்ந்து கொள்ள வேண்டும். நீண்டிருக்கும் காம்புப் பகுதியின் நுனியை யாராவது படு வேகமாய் மண் பாதையில் இழுத்துக் கொண்டு போவார்கள். இதுதான் பாக்குப் பட்டைச் சவாரி.

சவாரி செய்யும் போது படு ஜோராய் இருக்கும். காற்று முகத்தைக் கிழித்துக் கொண்டு போகிற வேகத்தில், தூசு துகள்களெல்லாம் அதிருண்டு பறக்க, மூச்சு முட்ட முட்டச் சவாரி போவதற்கு அந்தத் தோட்டத்தில் எல்லாச் சிறுசுகளுக்குமே நல்ல விருப்பம்.

இந்தப் பாக்குப் பட்டைகளைத் திருடப்போய் உதைபட்டு விழுந்தெழும்பி வந்த சம்பவங்களும் அநேகம் உண்டு. அதுவொன்றும் அத்தனை கஷ்டமல்ல..... என்றாலும், காய்ந்து போய்த் தானாக அந்தப் பாக்குப் பட்டை விழும்வரை காத்திருக்க வேண்டுமே, அதுதான் கஷ்டம்.

சில நேரம் இலவு காத்த கிளி கதையாயும் ஆனதுண்டு. இந்தச் சிறுசுகளுக்குப் போட்டியாய், ஏதாவது ஒரு பெரிசு சோறு கட்டவென்று அந்தப் பட்டையை வெட்டித் தோல் போல உரித்துக் கொண்டு போய்விடும்.

பாக்குப் பட்டையை உரித்து அதை மெல்லிய தாள் போல அளவாய் வெட்டிச் சூடு காட்டிப் பின், அதில் சாப்பிடுவதும் அநேகருக்குப் பிடித்த ஒன்றுதான்.

மொத்தத்தில், உதவாத ஒரு குப்பைப் பொருள் பல்வேறு விதங்களில் பயன்படுகிறது. மேலதிக தேவையாயும் இருக்கிறது.

தன் சேனையில் எத்தனை தான் பாக்குப் பட்டை விழுந்து கிடந்தாலும், யாரையும் தொடவிடக் கூடாதென்று சின்னையாக் கங்காணி நினைத்துக் கொள்ளுவார். நினைப்பது போலவே, வேலியோரமெல்லாம் கறல் பிடித்த ஆணிகளையும், போத்தல் ஓடுகளையும் போட்டு வைத்தும் விடுவார்.

வேறு எதற்காவது அவரது சேனைக்குள் நுழைந்தாலும் கூடக் காலைக் குத்திக் கிழித்தெடுத்து விடும்.

தோட்டத்தில் பாதிப் பேருக்குக் காலில் போத்தலோடு கிழித்த தழும்பு உண்டு. கூடவே சின்னையா கங்காணியின் சேனைக்குள் புல் மேயவென்று போன மாடுகளின் கயிற்றையும் விட்டு வைக்காமல் அறுத்து வைத்துக் கொள்ளுவார்.

இப்படியெல்லாம் பட்ட அநுபவங்கள் மனதில் பதிந்து போயிருக்க...., இப்போ எப்படிப் பாக்குப் பட்டையை எடுப்பது?.....

ராஜன் மனம் தளராதவன். புத்திசாலியும் கூட......

ஆணிகளையும், போத்தலோடுகளையும் அப்புறப்படுத்தி விட்டு, மெதுமெதுவாய் அடியெடுத்து வைத்தான். பாக்கு மரத்தை எக்கி எக்கிக் காய்ந்து தொங்கிய பட்டையை சரக்கென்று இழுத்தான்.

“எவண்டா அது......? நாசமாப் போறப் பயப்புள்ள.....”

ராஜன் சின்னையாவின் கண்களுக்கு அகப்பட்டு விடாமல், குனிந்து ஓடி வந்து வேலியைத் தாவுகையில் தவறி விழுந்து, தொடையில்

லேசாய் ஆணி கிழித்து விட..... ஒருவாறு எல்லோருமே தப்பித்துக் கொண்டார்கள்.

"ஏண்டா எடுக்கலயா?......"

"அந்தக் கெழமுண்டம் உள்ளுக்கு இருக்குது."

"ச்சேய்...... சொதப்பிட்டியே......" சுல்தான் சலித்துக் கொண்டான்.

"அந்தாளுக்கு என்னவாவது பண்ணணும்டா....."

"அப்படீன்ற?......"

மூவருமாய் யோசித்தனர்.

"பின்ன என்னடா.... வீணாப் போற பாக்குப் பட்டையைக் குடுத்தாக் கொறஞ்சுடுவாங்களா?......"

"காந்தி சொல்றதும் சரியாத் தான் இருக்கு... என்னத்தைச் செய்றது?"

ராஜன் யோசித்தான்.

"கல்லடிக்கலாமா?......"

"வேணாம்.... தலையில பட்டாப் பிரச்சினையாயிடும்." ராஜன் அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை.

ஒரு மூன்று நாட்கள் கூட நகர்ந்திருக்காது..... யாரோ கத்திச் சத்தமிட்டார்கள். அடி இற்றுப் போயிருந்த பாக்குமரமொன்று சின்னையாக் கங்காணி தலையில விழுந்து விட்டதாம். அவர் கத்திக் கொண்டு கிடக்கிறாராம்.

மனதில் கோபமிருப்பினும், போனால் போகட்டுமென்று ஒரு நாலைந்து பேர் அவரைத் தூக்கி வர ஓடினர். அவர்களுடன் ராஜன், சுல்தான், காந்தி மூவருமாய்ச் சேர்ந்து கொண்டனர்.

மெய்தான் அதுவொரு பெரிய பாக்குமரம். ஒன்றுக்கு இரண்டு பாக்குப் பட்டைகள் அதில் இருந்தன.

சரக் சரக் என்று இரண்டையும் இழுத்துக் கொண்டு, மூவருமாய் நாலாம் நம்பர் தேயிலைப் பொட்டலுக்கு அவசரமாய் ஓடினர்.

# மறையைத் தேடி...

அவனவனுக்கு ஆயிரம் பிரச்சினை... இருந்தாலும், எங்க ளுக்கு வரும் பிரச்சினைகளே ஒரு தனிரகம் தான்.

கலியாணம்னா சொந்த பந்தம் வந்து போகத்தான் வேணும். அதுக்காக வாற வீட்டிலேயா கிடையாக் கிடக்குறது?.... டசன் கணக்குல புள்ளக்குட்டிகளையும் இழுத்துக்கிட்டு...... வெளியே சொல்லவும் முடியாமல், சகித்துக் கொள்ளவும் முடியாமல் தடுமாறிக் கொண்டிருந் தாள் அம்மு.

அது எட்டுக் காம்பறாக்களைக் கொண்ட லயம் என்பதால், கொஞ் சம் வசதியாய்ப் போயிற்று. கடவுள் புண்ணியத்தில சண்டை, சச்சரவுகள் இல்லாதிருந்ததால் ஒவ்வொரு இஸ்தோப்பையும் பாவனைக்கு எடுத்து எல்லோருமாய்ச் சமாளித்தனர்.

ஆண்கள் அவிழ்ந்த சாரத்தைக் கூடக் கட்டிக் கொள்ளாமல் குடி போதையில் கிடக்க..... சில இளம் பெண்கள் பாத்திரங்கள் கழுவுவது போல் கதையளந்தார்கள்.

சிறு குழந்தைகளைக் காரணம் காட்டி, தலையணை, பாய், போர் வைகளையெல்லாம் அபகரித்துக் கொண்ட 'தடித்த' பெண்கள் சிலர் குறட்டை விட்டுக் கொண்டிருந்தார்கள்.

இரண்டு ராத்திரிகள் பொறுத்தாயிற்று. இனியும் பொறுப்பதற் கில்லை. அம்மு தன் புதுக்கணவன் ராசுவை ரகசியமாய் கண்களால்

தேடினாள். அவன் அவனையொத்த சிலருடன் ஏதோ சுவாரசியமாய்ப் பேசிக் கொண்டிருந்தான்.

மணி பதினொன்றையும் தாண்டி விட்டது. ஒரு பெண்ணாகிய அவள் என்னவென்று அவனை வா தூங்கலாம் என்று அழைப்பது?......

அவனிலும் தவறில்லைத் தான். இத்தனை சின்னஞ் சிறுசுகள் இருக்கையில் நாங்கள் என்னவென்று படுப்பது? அதுவும் முதன் முதலாய்!

மூன்றாவது இரவும் ஒற்றையில் கழிந்து கொண்டிருந்தது. மனதில் ஒருவித ஏக்கம்.... தாகம்.... ஆற்றாமை... ச்சே....! இந்தக் கிழடுகளுக்குக் கூடவா அறிவில்லை. அம்மு ரகசியமாய் மூக்கை உறிஞ்சிக் கொண் டாள். தன் அத்தனை ஆசைகளையும் பெண்மையின் தன்மை மறைத் துப் பாதுகாத்ததைக் கண்டு அவளே ஒருகணம் வியந்து போனாள்.

நெடுநேரம் யோசித்துக் கொண்டிருந்ததால், விடிய்லில் தான் தூக் கம் அதிகமாக வந்தது.

"அடியேய்... இவ்வளவு நேரமாவா பொட்டப்புள்ள தூங்குறது? அது வும் புதுப் பொண்ணு... எழுந்திரிச்சி தேத்தண்ணியக் கொண்டு போய்த் தம்பிக்குக் கொடு...."

சடாரென எழும்பிக் கொண்டாள். கலியாண நேரம், தீ வலம் வருகையில்..... அவன் முரட்டுக் கைகளைப் பற்றியது தவிர..... இதோ! அவனை அணுக இன்னொரு சந்தர்ப்பம்.

தன்னை நினைக்கத் தனக்கே அவமானமாக இருந்தாலும், அவன் தனிமையாகும் வரை காத்திருந்து தேநீருடன் அவனருகில் செல்ல.......

வாஞ்சையுடன் அவன் பார்த்த அந்தப் பார்வையில் அவள் வெகு வாய்க் கூசிப் போனாள். காதுமடல்கள் ஜிவ்வென்று சூடாகிச் சிவந்து போயின. ஏன் இவன் மீது எனக்கு இத்தனை தாபம்?.... மூன்று நாள் இடை வெளியின் விளைவோ?..... தரையைப் பார்த்தபடி தேநீரை நீட்டினாள்.

அவன் மெதுவாக அவளது விரல்களை ஸ்பரிசித்தான். அவள் மறுக்கவில்லை. கண்களை மூடிச் சிலிர்த்துப் போனாள்.

"இங்கயா இருக்க?...... உன்னை எங்கெல்லாம் தேடுறது?......."

ராசுவின் தம்பி திடீரென வந்து ராசுவை இழுக்க....., அவள் தடு மாறிக் கைகளை எடுத்த மறுநொடி, அவன் காணாமல் போனான்.

அவள் சிலையாய்ச் சிறிது நேரம் அவ்விடத்திலே நின்று தனக்குத் தானே சிரித்துக் கொண்டாள். நிச்சயமாய் அவனும் என்னைப் போலவே தான் அவஸ்தைப்படுகிறானாயிருக்கும்!

நாட்கள் மெதுவாய் நகர..... சொந்த பந்தமெல்லாம் அகன்றனர். ஆனாலும், பிரச்சினை பிரச்சினை தான்.

ராசுவின் குடும்பம் கொஞ்சம் பெரியது. அம்மா, அப்பா, இரண்டு தம்பிகள், ஒரு தங்கை, வயது போன ஒரு பாட்டி, போதாக் குறைக்கு ஆறேழு கோழிகள்..... இரண்டு மாடுகள்..... என்று இந்தப் பெரிய்...ய்ய குடும்பத்திற்கு ஒரு லயக்காம்பிறாவில் எப்படி இடமிருக்கும்?......

நல்லவேளை மாடுகள் வீட்டுக்குள் அடைவதில்லை. கோழிகளென்றால் இரவில் குசினிக்குள் தான் தஞ்சம் புகும். அப்படி இவர்கள் பழக்கியிருந்தார்கள்.

வீடென்ற சொல்லுக்குச் சற்று அப்பாற்பட்ட இந்தக் காம்பிறாவில் தன்னைப் போல் இப்படி எத்தனையாயிரம் பேர் அவஸ்தைப்பட்டார்களோ? என்றாலும், வாழ்ந்து பிள்ளைகள் பெற்று... சண்டைகள் பிடித்து... கூடிக் குலாவி.. குதூகலித்து... என அவர்களும் சந்தோஷங்களை அநுபவிக்கத்தானே செய்தார்கள்......!

திறந்த வெளியாட்டம் ஒரு நீண்ட அறை. அதை மூன்றாகப் பிரித்து முன் பகுதி இஸ்தோப்பாகவும், நடுப்பகுதி கட்டில், துணி மணிகள் போடுமிடமாகவும், கடைசிப் பகுதி குசினியாகவும் பாவிக்கப்படுவதுதான் இங்கு வழமை.

இந்த வீட்டில் ஆறேழு பேருடன் எப்படி ஒரு புதுமணத் தம்பதிகள் இருக்க முடியும்?.....

வேலைக்குச் செல்ல இன்னும் இரண்டு நாட்கள் தான் பாக்கி. வெட்கத்தை விட்டு, இன்று எப்படியாவது கணவனிடம் தன் ஆசையைச் சொல்லிவிட வேண்டியதுதான். அம்மு தீர்க்கமாய் முடிவு செய்து கொண்டாள்.

ஒவ்வொரு இளம் பெண்ணுக்கும் தன் திருமணம் பற்றியும், கணவன் பற்றியும் கனவுகள் இருப்பது நியாயம் தானே....! அம்முவும் அதற்கு விதிவிலக்காய் இல்லை. என்ன, இன்னுமே அது கனவாகவே இருந்தது.

தனக்குத் தெரியாமல் தன்னை அவன் பின்னால் வந்து அணைத்துக் கொள்ள வேண்டும்..... தன்னுடன் கூடச் சேர்ந்து சமையலுக்கு உதவ வேண்டும்..... ஒன்றாகக் குளிக்க வேண்டும்..... அவனுக்குத் தன் கையால் முதுகு தேய்த்துவிட வேண்டும்..... பரஸ்பரம் உணவை ஊட்டிக் கொண்டு ஆசுவாசப்பட வேண்டும்..... இப்படி இன்னும் எத்தனையோ தாகங்கள்.

அவனுக்கும் தான்.

அதை அவனின் அந்தத் திருட்டுத் திட்டம் வெளிப்படுத்தியது.

ராசு, தன் தாயிடம் பேசிக் கொண்டிருந்தான்.

''அம்மா வெறகு முடிஞ்சிரிச்சே, கொண்டாந்து போடவா?.......''

''வேணாம்ப்பா. நானும் தம்பியும் கொண்டு வாறோம்..... ஒனக்குக் களப்பா இருக்கும். நீ பேசாம இரு.....''

''அட களப்பு என்ன களப்பு..... அம்மு! கயிறும், துணியும் எடுத்துட்டு வாப்புள்ள..... மூணாம் நம்பர் மலைக்குப் போயிட்டு வருவோம்.....''

முதலில், என்னயிது?..... என்று யோசித்தாலும், பிறகு அம்முவிற்கு அவனது திட்டம் புரிந்தது.

''என்ன?...... ஒரு கெழம கூட முடியல்ல..... அதுக்குள்ள வெறகுக்குப் போறிங்களே?''ன்னு நாலைந்து பேர் கேட்டார்கள். ராசு ஏதோவெல்லாம் சொல்லி மழுப்பிவிட்டு அவளைக் கூட்டிச் சென்றான்.

தேயிலைக் காண்களைப் போல் மறைவான...... பாதுகாப்பான இடம் வேறெங்கே கிடைக்கப் போகிறது? அடர்ந்து வளர்ந்த கடும்பச்சை நிறத் தேயிலைகள் அவளுக்கு உல்லாச விடுதியாய் தெரிந்தது.

ஆள் அரவமற்ற நடுப்பகுதிக்குச் சென்றதும், அவன் கயிற்றையும், துணியையும் ஒரு பக்கமாய் வீசினான். அவளது கைகளை மெதுவாகப் பற்றிக் கொண்டு கண்களில் எதையோ தேடத் தொடங்கினான்.

அவ்வளவு பொறுமை அம்முவிற்கு இருக்கவில்லை. படாரென அவனது கைகளை உதறிவிட்டு, அவனை இறுக்கமாகக் கட்டிக் கொண்டாள்.

# கூலி....

**சி**ல விடயங்களை அத்தனை எளிதாக விபரித்து விட இயலுவ தில்லை. எவ்வளவுதான் எழுதியோ, சொல்லியோ விளக்கினாலும் அநுபவித்து உணர்வதில் உள்ள இன்பம் கிட்டுமா என்ன?........

நாங்கள் விறகு பொறுக்கப் போவது கூட, அப்படியொரு இன்பமான விடயம் தான். நினைப்பது போல, அது ஒன்றும் சாதாரணமான விடய மல்ல. இரக்கமில்லாத சூரியன் ஒரு பக்கம் பொசுக்கித் தள்ளும். உடல் ஒரு விதமாய்ச் சோர்ந்து, கால்களில் தளர்வு ஏற்பட்டும். இருப்பினும், நாங்கள் விரும்பியே அதைச் செய்கிறோம் என்றால், அதற்குக் காரணம் ஒன்று, அது எங்களுக்கு அவசியமாகிறது. மற்றது அதில் சொல்லத் தெரியாத ஏதோ ஒரு இன்பம் அடங்கிக் கிடக்கிறது.

விறகு பொறுக்கவென்று காலடி எடுத்து வைத்துவிட்டால் போதும், ஒரு வித போட்டி மனப்பான்மை.... வேகம்..... விவேகம்..... இப்படி ஒரு பரீட்சை எழுதும் மனப்பான்மையில் தான் நாங்கள் செயற்படுவோம். சும்மாவா.....! ஆறு பேரது விறகுக் கட்டிலும் யாருடையது அளவில் பெரி யதோ, யாருடையது தரமானதோ அவர் தான் அன்றைய பொழுதின் கதாநாயகன். நானென்றால் கடும் சோம்பேறி. கடைசியில் விறகு போதா மல் யாரிடமாவது கடன் வாங்கிக் கொள்ளுவேன்.

ஒவ்வொரு விடுமுறை தினங்களிலும், விடியவே புறப்பட்டு விடு வோம். ஒரு சுருள் கயிறும், தலைக்கு ஒரு துணிச் சும்மாடும் எடுத்துக் கொண்டு, வேண்டுமென்றால், கொஞ்சம் சாப்பாடு..... சின்னவா

கட்டாயமாய்த் தண்ணீர் கொண்டு வருவாள். தொர பயல் எவ்வளவு சரி காசு திருடிக் கொண்டு வருவான். போகும் வழியில் ராஜாகடையில் பிஸ்கோத்தும், சீனியும் வாங்கிக் கொள்ளுவோம். இப்படி ஒவ்வொன்றாய் முடித்து ஏதாவது ஒரு மலையைத் தெரிவு செய்து போய்ச் சேரவே எப்படியும் ஒன்பது மணியாகிவிடும்.

எங்களது முதல் வேலையே இடம்பிடிப்பது தான். ஏதாவது ஒரு பொட்டல் இடமாய்த் தெரிந்து அங்கே துணியை வைத்துவிட்டு, ஆளுக் கொரு திசையில் விறகு தேடிச் செல்வோம். கவ்வாத்து மலைக்குச் சென் றால், அது மிகவும் லேசாய்ப் போய்விடும். பக்கம் பக்கமாய் நின்று கூடக் கதைத்துக் கொண்டே விறகு கழிக்கலாம். மிலார் பொறுக்கப் போகும் போதுதான் சிக்கல். எங்கே மிலார் இருக்குமென்று தேடிக் கண்டு பிடிக்க வேண்டும். சரோஜாவுக்கு அது அத்துப்படி. மிகத் துல்லியமாக மிலார் நிறைந்து கிடக்கும் ஒரு கானைப் பிடித்துக் கொள்ளுவாள்.

சில கான்களில் தேயிலை இலை விழுந்து குவிந்து கருகிப் போய்க் கிடக்கும். ஆங்காங்கே மழைத்தண்ணீர் தேங்கியும், கற்கள் நிறைந் தும்..... இப்படி மேலோட்டமாகத் தெரியும் அந்தக் கானைக் கொஞ்சம் நோண்டிப் பார்த்தால் பெரும் புதையலே கிடைக்கும்.

நல்ல பெரிய பெரிய தேயிலை வாதுகள் இலை காய்ந்து அமுங்கிப் போய் இருக்கும். அவற்றை எடுத்து ஒரு தட்டுத் தட்டினால் போதும், இலைகள் அகற்றிய ஒரு பிடி மிலாறு கைவசமாகும். இவ்வாறே பிடி பிடியாகச் சேர்த்து அவை ஒரு கட்டு விறகாக எப்படியும் இரண்டு மணித் தியாலமாவது வேண்டும்.

விறகு சேர்ப்பது எளிதான விடயமா என்ன?...... அது எங்களுக்கே யுரிய தனிக் கலை. அத்தனை சீக்கிரமாய் எவராலும், செய்ய முடியாத வேலையது. சரோஜா கவ்வாத்துக் கழிக்கும் அழகைப் பார்க்க வேண் டுமே.....! அந்த லாவகமே தனிதான். ஒரு கை அனிச்சையாய் வாது களை எடுக்க, மறுகை அவற்றைப் படபடவெனக் கழித்து ஒருபுறம் விறகாய் ஒதுக்க..... அப்பப்பா! பார்த்துக் கொண்டிருக்கும் எனக்குத் தலை சுற்றிப் போய்விடும்.

பளபளவெனத் தீட்டப்பட்டிருக்கும் அந்தக் கத்தி கொஞ்சம் தவறி னால் போதும், விரல்கள், கை எல்லாம் வெட்டி வீசப்பட்டு விடும்.

அத்தனை வேகமாய் விறகு கழிக்க அவளுக்கு மட்டுமேதான் முடியு மாயிருக்கும். நிச்சயமாய் அவளைப் பாராட்டித்தான் ஆகவேண்டும்.

நான் கூட, ஒரு தடவை முயற்சித்தேனே...! கையை ஓங்கி ஓங்கி இலைகளைக் கழிப்பதற்குள், போதும் போதும் என்றாகி விட்டது. அடுத்த, ஓங்கு ஓங்குகையில் இடதுகை கழண்டு விடுவதுபோல, ஒரு வலி..... அதனால் தான் கவ்வாத்து மலைப்பக்கம் தலை வைத்தே படுப்ப தில்லை. எப்போதுமே மிலாறுதான்.

அம்மா அடிக்கடி சொல்லுவாள், நான் கொண்டுவரும் மிலாரு ஒரு சதத்திற்கும் பிரயோசனம் இல்லையாம். பொசுக்கென்று எரிந்து விடுகிற தாம். சிலநேரங்களில் அம்மாவிடம் நல்லபேர் வாங்கவென்றே தேடித் தேடிப் பொறுக்குவதுமுண்டு.

இன்றும் அப்படித்தான். நான் சேர்த்த விறகு நல்ல பெரிய பெரிய விறகாய் இருந்தது.

சரோஜா சொன்னாள்:

''காரியமில்லையே.... இன்னைக்கு நல்லாத் தானே பொறுக்கியி ருக்கீங்க......!''

எனக்குள் உள்ளுக்குள்ளே சந்தோசம். பெருமையாகச் சிரித்துக் கொண்டேன்.

தொரப்பயல் மூன்று கயிறு போட்டு, நீளமாக விறகை அடுக்கிப் பெரிய கட்டொன்றைக் கட்டிப் பிரட்டிக் கொண்டிருந்தான். நானென் றால், இரண்டு கயிறு போட்டு அவ்வளவு விறகையும் தடிப்பான ஒரே கட்டுக்குள் அடக்கிவிட்டேன்.

பெரியபுள்ள விறகை வித்தியாசமாக அடுக்கியிருந்தாள். கயிற்று நடுவில் விறகின் அடிப்பக்கமும், ஓரங்களில் நுனியும் தெரியுமாறு இறுக்கிக் கட்டியிருந்தாள். முள்ளம் பன்றியைப் போல அந்த விறகுக் கட்டு முரண்டு பிடித்துக் கொண்டிருந்தது.

அப்பாடாவென்று அத்தனை பேரும் வேலையை முடித்தாயிற்று. ஒரு வாங்கியில் எங்கள் கட்டுகளைச் சாய்த்து வைத்துவிட்டோம்.

இப்போது சின்னவாவின் தண்ணீர் போத்தல் பிஸ்கோத்து பேக்,

கட்டுச் சோறு எல்லாம் எடுத்துக் கொண்டு, ஒரு சவுக்கு மர நிழலில் தேயிலைக் கானுக்குள் அமர்ந்து கொள்கிறோம்.

பசியென்றால் அப்படியொரு பசி. கட்டையா பயலின் முட்டியில் இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. ஏதோ ஒரு கட்டை மேல் விழுந்து விட்டானாம். கானில் இருந்த அலவாங்குப் புல்லை நசித்து அவன் காயத்தில் பூசி விடுகிறேன்.

வாங்கி வந்த பிஸ்கோத்தைப் பங்கிட்டு அனைவரும் சாப்பிட ஆரம்பிக்கிறோம். இடையிடையே, சீனியையும் நக்கிக் கொண்டு......

எனக்குத் தெரியும், இதோ இந்தச் சுவைக்கு ஈடான உணவு வேறு எங்குமே கிடைக்கப் போவதில்லையென்று....... இதில் கிடைக்கும் இனம்புரியா இன்ப உணர்வை விளக்கிவிட முடியாதென்று...... பொசுக்கும் இந்த வெயில் நேரத்தில் நாங்கள் அமர்ந்திருக்கும் இந்தமர நிழல் அமிர்தமாய்த் தெரிகிறது. இடையிடையே வீசிப் போகும் மென்காற்று..... மெதுவாய்ச் சாய்ந்து ஆசுவாசப்படத் தேயிலைக் கானில் குப்பைகளின் மெத்தையுமாய், எனக்கு எல்லாமே பிடித்திருக்கிறது. எதையுமே நல்ல விதமாய் அழகான கண் கொண்டு பார்க்கும் போது, அழகாய்த் தான் தென்படுமோ.......?

சின்னவா கட்டுச் சோறை அவிழ்த்து, உருட்டி உருட்டி எங்கள் கைகளில் வைக்கிறாள். அவசர அவசரமாய்த் தின்றுவிட்டு, சட்டையில் கையைத் துடைத்துக் கொள்கிறோம். அந்தச் சோறு நல்ல வாசமாய் இருக்கிறது. வாழையிலையைச் சூடாக்கி அதில் பழைய சோறையும், தேங்காய்ச் சம்பலையும் வைத்துக் கட்டியிருக்கிறாள். கூடவே, ஊறுகாயையும் சேர்த்து அவள் பிசைந்து உருட்டித் தருகையில்..... ச்சூ.....! சொல்லி வேலையில்லை. சூடாக்கப்பட்ட அந்த வாழையிலை கரும்நிறமாகி, அதிலிருந்து வரும் ஒரு வாசனை சுண்டி இழுத்துக் கொண்டிருந்தது.

நாங்கள் விறகுக் கட்டுகளைத் தூக்கிக் கொள்ளுகிறோம். வரிசையாய் ஒருவர் பின் ஒருவராகப் போய்க் கொண்டிருக்க..... பின்னால் பயங்கரமான சிரிப்புச் சத்தம். சின்னவாதான் சிரிக்கிறாள். திரும்பாமலேயே ஏன் என்று கேட்கின்றேன்.

“திரும்பிப் பாரு.....! திரும்பித் தொரப் பயலப் பாரு......” சிரிப்பினூடே விக்கி விக்கிச் சொல்கிறாள்.

எனக்கும் தாங்கமாட்டாத ஆவல். என்னவாயிருக்கும்?

விறகுக்கட்டையும் என்னுடன் சேர்த்துத் திருப்பிக் கொண்டு, திரும்பிப் பார்க்கிறேன்.

படாரென வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரித்து விடுகிறேன். என் விறகு கீழே சரிகிறது. எனக்கும் தாங்க முடியாத சிரிப்பு. தொரப்பயலின் விறகுக்கட்டு இருபக்கமாயும் கழண்று தொங்குகிறது. அவன் தலையில் ஒரு ஐந்தாறு மிலாறு தான் மிச்சமாய் இருக்கிறது. அவற்றைக் கையில் பிடித்தபடி பேந்தப் பேந்த விழித்துக் கொண்டு நிற்கிறான்.

''கடவுளே......! கடவுளே......!''

சரோஜா திட்டிக் கொண்டே, அதை மறுபடியும் கட்டி அவன் தலை யில் ஏற்றுகிறாள்.

ஒருவாறு நாங்கள் வீடு போய்ச் சேர்கையில் மணி மூன்றோ, நான்கோ. அப்படியே அவற்றைத் தூக்கிக் கொண்டு நாட்டுக்குள் இறங்கிப் பியதாச வீட்டின் குசினிப் பக்கம் போடுகிறோம்.

விறகை உற்றுப் பார்த்துவிட்டு, பியதாசவின் மனுசி சொல்கிறாள்.

''தறனங் எச்சற வெடாக் நே!......''

விறகில் வேலையில்லையாம். எனக்குப் பற்றிக் கொண்டு வருகிறது. காசு கொடுக்காமல் விட்டுவிடுவாளோ?.... அந்த இருபது ரூபாய்க் காகத்தானே இவ்வளவு நேரச் சிரமமும்.

முகத்தைச் சுளித்தபடியே உள்ளே போனவள், கொஞ்சம் பணத் தைச் சரோஜா கையில் கொடுத்து, ஆளுக்குப் பதினைந்து கணக்கில் பிரித்துக் கொள்ளச் சொல்கிறாள்?

'ஐந்தைக் குறைத்து விட்டாளே......! பாவிப் பொம்பள......'

எனக்கு அந்தப் பணத்தை வாங்கப் பிடிக்கவில்லை. ''காசு வேண் டாம்'' என்று சொல்லிவிட்டு, ஓடிவிடுகிறேன்.

சரோஜாவும் என்னை ஏன் என்று கேட்கவில்லை.

அடுப்பில் உலைப் பானை ஏற்றிவிட்டு, வீட்டில் என்னுடைய வரவுக் காக அம்மா காத்துக் கொண்டிருப்பாள் என்பது எனக்குத் தெரியும்!

## நான் தாயாகப் போகிறேன்...

**நா**ன் முழுதாய் அப்படியே மாறிப் போயிருக்கிறேன். எப்படியெல் லாம் இருந்த நான்..... எனக்குள் இருந்த.... நான் கூடத் தொலைந்து போயிற்றே.....!

தாய்மையின் மகத்துவத்தை அநுபவித்து உணர்கிறேன். தனிமை யில் பேசி..... எதிர்பார்ப்புக்களைச் சேகரித்து, வலிகளைச் சுகித்து........ நிச்சயமாய் நான் நானாக இல்லை.....

திசைமாறிப் போன என் வாழ்க்கையை அர்த்தப்படுத்தியிருக்கிறது இந்தச் சிசு. என்னை ஆனந்தப்படுத்த மட்டுமே வந்த முதல் ஜீவன் இது.

இந்தக் குழந்தைக்காகவே, என் உடையில், நடையில், உணவில், எண்ணத்தில், என்று நான் இத்தனை நல்லவளாகிப் போனது எப்படி?.....

கர்ப்பமாய் இருக்கும் போது, மனதில் குறைகள் இருக்கக் கூடா தாமே?....... அப்படித்தான்......

ஆனால், எனக்கும் குறையிருப்பதாய் நான் எண்ணத் தொடங்கியது ஒரு ஐந்து ஆறு மாதங்களுக்குப் பிறகுதான். அதுவும் யாருக்கும் தெரியா மல்...... இரகசியமாக.......

நான் எதையோ ஒன்றை அதிகமாகத் தேடத் தொடங்கியிருக் கிறேன். அந்த அது- வேறு யாரிடமும் இல்லை. என்னவனிடம்..... என்

கணவனிடம் மட்டுமே அது இருப்பதைத் தெளிவாய் உணரத் தொடங்கினேன்.

நான் அபாக்கியசாலி. அது எனக்கு முழுமையாகக் கிடைக்கவில்லையோ?... தாகம் சூடுகிறது. தனிமை சுடுகிறது. சரியா முதற் காதலின் செயற்பாடுகளைப் போல.

இப்பொழுதெல்லாம் எல்லாத் தாய்மார்களையும் என் கண்கள் விட்டு வைப்பதில்லை. நன்றாக அலசி ஆராய்கிறது.

தம் கணவன்மாரைத் துணைக்கழைத்துக் கொண்டு சந்தோஷமாய் நடமாடும் நிறைமாதப் பெண்கள்...... கிளினிக் வருகையில் கணவனுடன் அமர்ந்திருக்கும் அதிர்ஸ்டசாலிப் பெண்கள்..... தன் துணையின் தோளில் எல்லாக் கவலையும் மறந்து சாயும் சில பெண்கள்.....

எனக்கு எவ்வளவு பொறாமையாய் இருக்கிறது. இந்த விடயத்திலென்றால் நான் கெட்டவள் தான்.

எப்பொழுது பார்த்தாலும் வேலை வேலையென்று ஓய்வே இல்லாத என்னவன்.... என் துணைவன் பாவம். அவனும் என்னதான் செய்வான்?..... அத்தனை ஈடுபாடு வேலையில் அவனுக்கு.

எத்தனை அன்பு என்மீது இருந்திடினும் அதில் என்ன பயன்?......

பசி நேரம் கிடைக்காத உணவு, வேறு எப்போது கிடைத்தால் என்ன?...... கிடைக்காவிட்டால் தான் என்ன?....

"எனக்குப் பசிக்கிறது."

"கொஞ்சம் பொறு பிறகு சாப்பிடலாம்" என்கிறான். இந்தக் காத்திருத்தல் அத்தனை உசிதமாக எனக்குத் தெரியவில்லை.

எது என் தேவை?... எது என் குறை?.... அதற்காக வேலை செய்யாமல் சதா என்னுடனேயே இருந்து விட முடியுமா?.... அப்படியும் இல்லை.

என்றாலும், தனிமையில் அழுகை வெடிக்கிறது. மனதில் தேம்புகிறேன்..... ஏங்குகிறேன்....

எப்படியாவது இவற்றை விளக்கிவிட எத்தனிக்கையில், "என்னை ஏன் புரிஞ்சிக்கல்ல?......" என்கிறான்.

போகட்டும் புரிந்து கொள்கிறேன். உனக்கு என் நிலை புரியாததைப் புரிந்து கொள்கிறேன்.

எல்லாமே சமாளித்து நாட்களை நகர்த்துகிறேன். விடிய முன் கிளம்பி விடுகிறாய். இரவாகி..... இரவாகி..... திரும்புகிறாய். அதையும் கூடச் சகிக்கிறேன்.

வந்ததும் நேரகூசியாய் நாலு வார்த்தை உதிர்த்து விட்டு, உண்டு பின் உறங்கிவிடுகிறாயே.......!

எத்தனை தடவைதான் நானும் எழுப்பி எழுப்பிக் கதைப்பது? உன் களைப்பு, என் வார்த்தைகளைக் கேட்கத் திராணியற்றவனாய், உன்னை ஆக்கி விடுகிறது.

சதா உனக்குக் களைப்புத் தான்.

சில நேரம் மெலிதாய் என்னைக் கடிந்து கொள்கிறாய். உனக்குத் தெரிய வாய்ப்பில்லை. எத்தனை இரவுகளில் நான் தனியாக அழுகிறேன் தெரியுமா?.......

எல்லோருக்கும் தெரியும். என் புறத்தேவைகளில் எதுவித குறையும் இல்லையென்று...... நீ அதற்கு இடம் வைக்கவும் இல்லை. பின் ஏன் என் அகத் தேவை உனக்குத் தெரியவில்லை?

பெரிதாய் ஒன்றும் வேண்டாம். தினமும் ஒரு மணிநேரம் எனக்காக ஒதுக்கு. அன்பாய் ஏதாவது பேசு... ஆதரவாய்த் தலைதடவு... உன் மடியில் என்னைச் சாய்த்துக் கொள்... ஒரு பிடி சோற்றை அன்பாய் ஊட்டிவிடு... பழங்கள் வெட்டித்தா...

இது போதும் எனக்கு. இது மட்டும் போதும் எனக்கு. அதற்காக நீ இவற்றைச் செய்யவில்லையென நான் முழுதாய்க் கூறவில்லை. உன் இயந்திரத் தனத்தை எனக்காக இல்லாமலாக்கு.

அழுவதற்குப் பிடிக்கவில்லை. உன்னையும், என் குழந்தையையும் நிறையவே பிடிக்கிறது. முன்னிலும் அதிகமாக உன்னை நேசிக்கத் தொடங்கியிருக்கிறேன்.

ஒருவேளை இது என்னையொத்த எல்லோருக்குமே கூட நடக்கலாம்.

இன்னும் இரு மாத இடைவெளிக்குள் ஒரு பிஞ்சு இந்த உலகிற்குள் பிரவேசிக்கப் போகிறது. அதுவரையாவது என் தாகத்தைத் தணி.

எனக்குத் தெரியும். நீ நல்லவனென்று. என்னை உனக்குப் பிடிக்கு மென்று. நம் குழந்தையை நீ நேசிக்கிறாய் என்று.....

என்றாலுமே, அந்த அது நிறைவாக இல்லையே.....!

இடைநேரங்களில் உன் தொலைபேசி அழைப்பிற்காய்த் தவம் கிடக்கிறேன். நீ அழைக்கத் தவறுவதில்லை தான். ஆனால், மனனம் செய்து ஒப்பிக்கும் சிறுபிள்ளையாய்த் தினமும் ஒரே வார்த்தைகளையே உதிர்த்துவிட்டுப் படாரெனத் துண்டிக்கிறாயே.....!

நானே துண்டிக்கப்பட்டு விட்டதாய் துடித்துப் போவேன்.

இத்தனைக்கும் அப்பால், என் பிரசவம் நடக்கத்தான் போகிறது. நானும், நீயும், ஏன் நம் உறவுகளும் எதிர்பார்த்துக் காத்திருக்கும் அந் நிகழ்விற்குப் பின் நான் தாயாகி விட்டதாய்ப் பெருமைப்பட்டுக் கொள் வேன்.

நீ கூடத் தந்தை ஸ்தானம் பெற்றதாய் மார்தட்டி ஆனந்தக் கூத்தாடுவாய்..... எதுவித வலிகளுமின்றி.....

தவறு உன்னில் அல்ல..... இயற்கையில்......

# இளிச்சான்

**மா**ட்டுக்கும் இளிச்சானுக்கும் பெரிதாய் வித்தியாசமில்லை. மாட்டுக்கு நாலு கால், இளிச்சானுக்கு இரண்டு கால் அவ்வளவே தான்.

படிக்காதது, வசதியில்லாததெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். சுத்தமாக் கூடவா இருக்க முடியாது?....

சும்மா சாணத்துல புரண்டு எழும்பின மாதிரி ஒரு தோற்றம். ரொம்ப நாட்களாய் வெட்டப்படாத கேசம்.... அகலமான பாதங்கள்..... பார்க்க ஒருவித அசிங்கமாய்த் தான் இருப்பான். ஆனால், எப்பவுமே அவன் முகத்தில் ஒருவித புன்னகை தவழும். அதனாலோ, என்னவோ அவனுக்கு அப்படியொரு பெயர். இவன் மட்டும் ஸ்டைலா இருந்தான்னு வச்சுக்குங்க..... கமலஹாசன் தோத்தான்.

ஒரு ரெண்டு மூணு நாட்களாய் இளிச்சான் பற்றித் தான் ஊரெல் லாம் பேச்சி..... சந்திக்குச் சந்தி இளிச்சான் பெயர் தான் அடிபடுது.

இளிச்சானுக்குக் கல்யாணமாம்!

கங்காணியார் தான் இளிச்சானுக்குப் பொண்ணு பார்த்திருக்கிறார். நாளைக்குப் பெண் பார்க்கப் போகவென்று இளிச்சான் ரெடியாகிக் கொண்டிருந்தான்.

கிணற்றடியில் கூட்டம் குறையும் வரை பொறுத்துப் பொறுத்துப் பார்த்தவன் பொறுமையிழந்து, வாளியும், ஒரு கட்டி சன்லைட்டும் எடுத்துக் கொண்டு கிணற்றடிக்கு வந்தான்.

பெண்கள் சிலர் அவனை வியப்புடன் பார்த்தவாறு வழிவிட்டனர்.

"அட.....! இளிச்சான் பாருங்கடா......" என்று சிலர் கேலி பேசினர்.

இளிச்சான் எதையுமே கண்டு கொள்ளவில்லை. அவனுக்கு ஒரே சந்தோஷம். ஏதோ ஒரு பாட்டை முணுமுணுத்தவாறே அவன் குளிக்க ஆயத்தமானான்.

நாலைந்து வாளி தண்ணீரைத் தலையில் ஊற்றிக் கொண்டான். சில்லென்று ஆனந்தப் பரவசமாய் இருந்தது. ச்சே....! அடிக்கடி குளித்தாலும் பரவாயில்லையோவென்று அவனுக்குத் தோன்றியது.

சன்லைட் பேப்பரை ஒரு பக்கமாய் உரித்துப் போட்டு விட்டு, பரட் பரட்டென்று மேல் காலெல்லாம் சோப்பைத் தேய்த்தான். அது அவனுக்குத் திருப்தி அளிக்கவில்லை. ஒரு கயிற்றுத் துண்டைச் சுருட்டி அதில் சோப்பை அப்பித் தேய் தேயென்று தேய்த்தான்.

ஓரளவு சுத்தமாய்க் குளிப்பதாய் அவனுக்கு நினைப்பு, கூடவே பக்கத்தில் கிடந்த ஒரு கரித்துண்டை நசித்துப் பற்களைப் பளிச்சென்று துலக்கினான்.

ஒரு கற்பாறையில் கால் பாதங்களை அழுத்தித் தேய்த்து அழுக்கு களை அகற்றிக் கொண்டான்.

மெய்யாகவே அவனுக்கு நல்ல சுகமான அநுபவமாய் இந்தக் குளி யல் இருந்தது.

வழமைக்கு இரண்டு வாளி தண்ணீரை மட்டும் தலைக்கு ஊற்றித் துவட்டிக் கொள்பவனுக்கு, இந்தக் குளியல் ஒரு சாதனையாய்த் தெரிந்தது.

மனமெல்லாம் சந்தோஷத்துடன் குளித்து முடித்துத் துவட்டிக் கொண்டான். கங்காணியார் வாங்கிக் கொடுத்த இரண்டு சாரங்களுள் ஒன்றை உதறிக் கட்டிக் கொண்டான்.

அவனது நடையிலும் கொஞ்சம் மாற்றம்.

சதா கங்காணியின் வீட்டிலும், மாட்டுப் பட்டியிலும் உழைத்து உழைத்துச் சலித்துப் போன அவனுக்கு இந்த உணர்வும், அநுபவமும் புதிதாய் இருந்தது..... பிடித்திருந்தது.

கங்காணி கூறிய ஒவ்வொரு வார்த்தையும் மீண்டும் மீண்டும் அவனுள் நிழலாடியபடியே இருந்தன.

விடியும் வரை அவனுக்குப் பொறுமையே இல்லை. தனக்கு எவ்வளவு பெரிய எடத்துல கலியாணம் பேசிட்டாரு கங்காணி. வாழ்க்கையில் கொழும்பையே பார்க்காத அவனுக்குக் கொழும்புல பொண்ணு கிடைக்குன்ன.....!

பொண்ணு சொல்லிச்சாம், நல்லா வேலை செய்யுற மாப்பிள்ள தான் வேணுன்னு.... அங்கேயே வீடெல்லாம் கூட இருக்காம்.

இளிச்சானுக்குக் கையும் ஓடாமல் காலும் ஓடாமல் கங்காணியின் காலில் விழுந்து ஒரு மூச்சு அழ வேண்டும் போல் தோன்றியது.

கல்யாணத்திற்கு அப்புறம் தினமும் குளிக்கணும், நல்ல உடுப்பு உடுத்தணும், அழகாய்ப் பேசணும் இப்படி நிறையவே திட்டங்கள் வைத்திருந்தான் இளிச்சான்.

ஆனாலும், கங்காணியாரை விட்டுப் போவதில் ஒருபக்கம் அவனுக்கு வருத்தம். தொட்ட அத்தனை வேலையையும் செய்வது இளிச்சான் தான். மாடு மேய்ப்பதில் தொடங்கி, வீட்டு விறகு தூக்குவது வரை... இத்தனைக்கும் சாப்பாட்டைத் தவிர, ஒரு சதம் காசு வாங்க மாட்டான். அவ்வளவு விசுவாசம் அவனுக்கு.

அத்தனை தூரம் நம்பிக்கையா உழைச்சதாலோ என்னவோ, கங்காணியார் இப்படியெல்லாம் தனக்கு நல்லது பண்ணுறார்.

எது எப்படிப் போனாலும், அடிக்கடி பொண்டாட்டியோட வந்து கங்காணியாரப் பாத்துட்டுப் போகணும்.

இளிச்சான் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டான். தூக்கமே வரவில்லை.

கங்காணியார் வந்து எட்டிப் பார்த்தார். தடாரென வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தான்.

''என்னடா..... உடுப்புக்கிடுப்பெல்லாம் எடுத்திட்டியா?...... எல்லாத்தையும் எடுத்து வச்சுக்க. அங்கேயே இருக்க வேண்டி வந்தாலும் வரும்.''

இளிச்சான் தலையை ஆட்டினான்.

'ஐயோ....! ஐயோ....! ஐயோ....!' இளிச்சான் கோடிப் பக்கத்திற்கு ஓடிச்சென்று நாலைந்து முறை அங்கும் இங்கும் நடந்தான். அங்கு நின்ற பலா மரத்தை ஓங்கி உதைத்தான்.

அவனுக்குச் சந்தோஷம் பிடிபடவில்லை.

ரொம்பவும் தாமதமாகி விடிந்ததாய் அவனுக்குப் பட்டது. அவசர அவசரமாய்த் தயாராகிப் பையையும் தூக்கிக் கொண்டான்.

முதன் முறையாய்ச் செருப்புப் போட்டான். நடக்க முடியாமல் தடுமாறித் தடுமாறிக் கங்காணியின் பின்னாலேயே சென்றான்.

பஸ் போய்க் கொண்டே இருந்தது. கங்காணி அவனை எழுப்பி இறங்கச் சொன்னார். உறங்கிக் களைத்து முகமெல்லாம் எண்ணை வடிந்து அசிங்கமாய் இருந்தான்.

கங்காணி ஒரு துவாயைக் கொடுத்தார். முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டான். கைகளாலேயே தலைமுடியை வாரிக் கொண்டான்.

இருவரும் ஒரு கடையில் சாப்பிட அமர்ந்தனர். அவனால் சாப்பிட முடியவில்லை. மனம் எப்படியெல்லாமோ இருந்தது.

இரண்டு பணிஸ் வாங்கிக் கொடுத்தார். ஒன்றை இரண்டாய்ப் பிய்த்து விழுங்கி விட்டுத் தண்ணீர் குடித்தான்.

ஒன்றைப் பையில் பத்திரப்படுத்திக் கொண்டான்.

இருவரும் கொஞ்சத் தூரம் நடந்தார்கள். ஒரு பெரிய வீடு.....

"கங்காணி.....! இவ்வளவு பெரிய வீடா?......"

"ஒண்ணும் பேசாம வா."

பின் பக்கமாய் ஒரு நாய்க்கூடு. அதனருகே இளிச்சான் நின்று கொண்டிருந்தான்.

கங்காணி மட்டும் உள்ளே சென்றார்.

அந்த நாய் இளிச்சானைப் பார்த்து உறுமியது. தன் பையில் இருந்த பணிஸை எடுத்துப் போட்டான்.

அதை லபக்கென்று பிடித்துத் தின்றது.

உள்ளே கங்காணியின் பேச்சுக் குரல் கேட்டது. இளிச்சான் கூர்மையாய்க் காது கொடுத்தான்.

''வஞ்சகம் இல்லாம வேலை செய்வான் மாத்தயா......''

''சரி சம்பளங் எவ்வளவு கொடுக்கோணும்?''

''தேவையே இல்லீங்க...... பசிக்கிற நேரம் சாப்பாடு போட்டாப் போதும். நாய் மாதிரி உழைப்பான்.''

கங்காணியார் சத்தத்தைக் கொஞ்சம் தணித்து மெதுவாய்ச் சொன்னார்.

''அவனுக்குப் பொண்ணு பார்க்கப் போறோம்னு பொய் சொல்லிக் கூட்டி வந்தேனுங்க...... கொஞ்சம் பாத்து கவனிங்க.''

''சரி உங்க கமிசன் சல்லி புடிங்க.....''

அவர் கொடுத்த ஐயாயிரம் ரூபாயை, முகமெல்லாம் சிரிப்புடன் வாங்கிப் பொக்கெட்டுக்குள் போட்டுக் கொண்டு கங்காணியார் வெளியே வந்தார்.

அருகில் கிடந்த கல்லில் தொப்பென்று அமர்ந்தான் இளிச்சான்.

அவனுக்கு முதன் முறையாய் மனது வலித்தது.

''இவுங்க சொல்றபடி கேட்டு நட...... என்ன......?''

கங்காணியார் விடை பெற்றார்.

நாய் இளிச்சானின் அருகே வந்து அவன் காலை முட்டி முட்டி உரசியது.

அவன் அதைத் தடவிக் கொடுத்தான்.

# புரியவில்லை!...

என்னால் அதை விபரிக்க இயலவில்லை. ஏதோ செய்கிறது. எங்கெல்லாமோ வலிக்கிறது. படுக்க வேண்டும் போல ஒரு சோர்வு..... படுத்தாலும் கால்கள் இரண்டிலும் சொல்லத் தெரியாத வலி........ ஏன் இப்படி? அடிவயிற்றில் ஏதோ ஒன்று இழுத்துப் பிடித்தாற் போன்று. ஒருவேளை கண் விழித்துப் படிப்பதாலோ?..... இல்லையே இதற்கு முன்னும் படித்திருக்கின்றேனே. நினைக்கவே பயமாய் இருக்கிறது. நாளை சமூகக் கல்விப் பாடத்தில்தான் டெஸ்ட். உலகப்படம் வேறு குறிக்க வருவதாய்ச் சரோ மிஸ் சொல்லியிருந்தாள். என்னதான் நடக்கிறது எனக்குள்.....? வியர்வை..... அவஸ்தை..... வலி இன்னும் இன்னும் ஏதேதோ. டொய்லெட் போய் வந்தால் நன்றாய் இருக்குமோ வென்று தோன்றுகிறது. போய்ப் பார்த்த பின்.....!

மெதுவாய் அம்மாவின் காதுக்குள் சொல்கிறேன். அவளுக்கென்றால் ஒரே படபடப்பு. என்னை ஒரு மூலையில் உட்கார சொல்லிவிட்டு, யாரிடம் முதலில் சொல்வதென்று தெரியாமல் தடுமாறுகிறாள் போல..... சும்மாவா பின்னே! வீட்டிற்கு முதல் விஷேசமாயிற்றே.

எனக்கும் இப்போதுதான் கொஞ்சமாய்த் தெளிவாகிறது. நான் இனிப் பெரியவள். கமலினி, சர்மிளா, ஜீவனிட்டா எல்லோரும் அவர்களுடன் என்னைச் சேர்த்துக் கொள்வார்கள். எத்தனையோ சந்தர்ப்பங்களில் என்னை மட்டும் ஒதுக்கி விட்டு அவர்கள் பேசிச் சிரிக்கையில்

எனக்கு எப்படி இருக்கும் தெரியுமா? இனியென்றால் அந்தக் கவலையே இல்லை.

அசம்ப்ளி முடியும் போது, பெரிய புள்ளைகள் மட்டும் நில்லுங்க.... மற்றவர்கள் போகலாம் என்று மெடம் சொல்கையில் அங்கு நிற்பவர் களின் முகத்தில் தெரியுமே ஒரு திமிர்.....! உலகையே ஜெயித்துவிட்ட திண்ணத்துடன் எங்களை ஏளனமாய்ப் பார்ப்பது போல் தோன்றும். இனியென்றால் நானும் அவர்களுடன் ஒருத்தியாய் நிற்கலாம். நினைக்கும் போதே கொஞ்சம் பெருமிதமாய்த் தான் இருக்கிறது. ஒருவித வெட்கமும் எங்கிருந்தோ வந்து எனக்குள் ஒட்டிக் கொள்கிறது.

அந்தக் கொஞ்ச நேர இடைவெளிக்குள் அம்மா நாலைந்து பேரைக் கூட்டி வந்துவிட்டாள். பிள்ளை பெரியவளானால் முதன்முதலில் தாய் பார்க்கக் கூடாதாமே...! சாரதாக்காதான் என்னைத் தனியாக ரூமிற்குக் கூட்டிச் சென்றாள். எல்லோருக்குமே சந்தோஷம். வீடே களைகட்டத் தொடங்கியது. அப்பாவையோ, வேறு ஆண்களையோ பதினாறு நாளைக்குப் பார்க்கக் கூடாதென்று அம்மா கட்டாயமாய்ச் சொல்லி விட்டாள். தடபடவென்று எல்லா வேலையும் நடக்கிறது. முதல் நாள் தண்ணீர் ஊற்ற மாமிமார் தான் வர வேண்டுமாம். அம்மா பெரிய மாமிக் குச் சொல்லியனுப்பிவிட்டு அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தாள்.

முட்டையாம், நல்லெண்ணையாம் உழுந்துச் சாப்பாடாம். சொல்லி வேலையில்லை. ஓஹொவென்று ஒரே கவனிப்பு. யார் யாரோ சோறுகட்டி வந்தார்கள்...... போனார்கள்.......

எனக்கும் ஜொலிதான். சாப்பாடும், உடுப்பும் கூடவே அறிவுரைக ளும் பஞ்சமேயின்றிக் கிடைத்தன. அவ்வளவு சீக்கிரம் பதினாறு நாட்களும் ஓடிப் போனதென்று என்னால் நம்பவே முடியவில்லை.

வெளியே வரும்போது, ஒருவித மிதப்புடன்தான் நடந்து திரிந்தேன். எனக்கான சடங்குகளைச் செய்யும் ஆயத்தம் நடந்து கொண்டிருக்கிறது. பெயின்ட் அடித்துக் கொண்டிருந்த பன்னீர்செல்வம் ஒருமாதிரிச் சிரித்தபடி என் தலையில் இருந்து பாதம்வரை திரும்பத் திரும்பப் பார்த்தான். ச்சீய்! மூதேசி...... கொஞ்சம் கூட வெட்கமற்ற நாய். எனக்கு உடம்பெல்லாம் கூசிப் போயிற்று.

இந்தச் சடங்கு எனக்குத் தேவைதானா? என்று கூட ஒருகணம் தோன்றலாயிற்று. என்னோடு ஒன்றாய் கூட்டாஞ்சோறு ஆக்கித் தின்றவர்களும் வித்தியாசமாய்த் தான் பார்த்தார்கள். ஒருவேளை யாருக்கும் தெரியாமல் இவ்விடயங்களையெல்லாம் செய்திருந்தால் கணக்கில்லாமல் போயிருக்குமோ....! எனக்காவது பரவாயில்லை. இலக்கணதேவிக்குச் சடங்கு செய்கையில் ஸ்பீக்கர் எல்லாம் போட்டுத் திருவிழா மாதிரி ஆக்கிவிட்டார்களே...!

நான் பெரியவளாம். அதைச் சுட்டிக்காட்டி உணரவைக்கும் சந்தர்ப்பங்கள் இப்போதெல்லாம் அடிக்கடி நடக்கின்றன.

போன ஞாயிற்றுக்கிழமை அப்படித்தான். பிள்ளையார் பந்து அடிப்பதற்காய் நானும் ரெடியாகிவிட்டேன். லீவு நாளென்றால் போதும். பின்னரோட் சந்தியே கலங்கும் அளவிற்குப் பிள்ளையார் பந்து அதிரும்.

உக்குலி தான் பந்துகட்டுவான். பழைய சொப்பிங் பேக்..... ரப்பர் சீட் எல்லாம் சேர்த்து சடம்பு நூலில் இறுக்கிக் கட்டினால், கடையில் வாங்கும் பந்தைப் போல் சும்மா அந்தமாதிரி அடிபட்டு வரும். வேறு யார் கட்டினாலும் பந்து அவ்வளவு சரியாக இருக்காது. ஒரு பெரிய கல்லைப் பிள்ளையாராக வைத்துக் கொள்வோம். இரண்டு பிரிவாகப் பிரிந்து ஒருபக்கம் உள்ளவர்கள், குறிப்பிட்ட ஒரு தூரத்தில் நின்று, பிள்ளையாருக்குப் படும்படி பந்தை அடிப்பார்கள். பந்து கல்லில் அடி பட்டதும் அவ்வணியினர் ஒன்றுகூடி யாராவது ஒருவரின் கைக்கு, தெரியாமல் பந்தைக் கொடுத்து விட வேண்டும். ஆனால், எல்லோருமே தங்களிடம் பந்து இருப்பது போலவே தான் பாவனை செய்வார்கள்.

யாரிடம் பந்து இருக்கிறதென்று தெரியாமல், தடுமாறி அடிபட்டு அவுட்டாகி..... ஓ! அப்படியொரு ஆனந்தம். சில நேரம் சாப்பாடு கூட, மறந்து போய்விடும்.

அன்றும் விளையாடுகிற சத்தம் கேட்டுத்தான் எழுந்து ஓடப் போனேன்.

''எங்க போற?.....'' அம்மா முறைத்துக் கொண்டு கேட்டாள்.

''புள்ளையார் பந்தடிக்க......'' என்றேன்.

''ஏண்டி அறிவிருக்கா ஒனக்கு. வயசுக்கு வந்தா அடங்கி வீட்டோட இருக்கணுன்னு தெரியாதா?.....''

இது எனக்கு முதலாவது அடி. எத்தனையோ தடவை கெஞ்சிப் பார்த்தும் ம்ஹூம். பயங்கர ஏச்சு. ஆம்பிளைப் பிள்ளைகளுடன் அவ்வ ளவாகப் பேசவே கூடாதாம். விளையாட்டென்ன வேண்டிக்கிடக்கென்று செமசாத்து. சௌதம் கிழவியும் அம்மாவுடன் சேர்ந்து கொண்டு, ஆறு மணிக்குப் பின் கிணற்றடிக்குப் போக வேண்டாமென்றும் சத்தமாய்ப் பேசிச் சிரிக்க வேண்டாமென்றும் கிண்டிவிட்டுக் கொண்டிருந்தாள்.

ஏனோ தெரியவில்லை. எல்லோரையும் விட்டு ஓடிவிடலாமென்று தோன்றியது. பெரிய பெரிய இரும்புச் சங்கிலிகளால் என்னைக் கட்டிப் போடுவது போல் ஓர் உணர்வு.... பிள்ளையார் பந்து விளையாடும் சத்தம் அடிக்கடி என் காதுக்குக் கேட்கிறது. கட்டையாப் பயல் ''ஆலே.... ஆலே.... ஆலே.......'' என்றபடி பந்தால் யாருக்கோ அடிக்கிறான். தொடர் ந்து 'ஓ...'வென்ற கூச்சல். கடவுளே! என் மனது அந்த விளையாட்டுக்காய் ஏங்குகிறது. விளையாட்டில் இருந்து மட்டுமல்ல, அவர்களிடமிருந்தும் நான் ஒதுக்கப்படுவதை உணர முடிந்தது.

ஸ்கூலுக்கும் அனுப்ப வேண்டாமென்று யார் யாரோ சொன்னார் களாம். நல்லவேளை அம்மா அப்படியொன்றும் செய்யவில்லை.

எப்போதுமே நன்றாய்ப் படிக்க வேண்டுமென்ற எண்ணம் எனக்கு. இப்போதெல்லாம் மனதிற்குள் இனம் புரியாத வலி ஒன்று. ஏதோ ஒன்றிற்குள் அமிழ்ந்து போய்விட்டதாய்....... நான் தனியாக்கப்பட்ட தாய்...... மறைமுகமாய் ஒடுக்கப்படுவதாய்...... எப்படியெல்லாமோ.....! பெண்ணாகப் பிறந்திருக்க வேண்டாமோ என்று கூடச் சில நேரங்களில் தோன்றுகிறது.

சரி நடப்பது நடக்கட்டுமென்று சமாளித்து இருக்கலாம் என்றாலும் விட்டபாடில்லை.

ஒருநாள் ஸ்டோர் லயத்து ரமேசுடன் மாங்காய் அடித்துத் தின்றதைச் சௌதம் கிழவி கண்டுவிட்டாள். அப்பாடா....! ஒரு பிரளயமே நடந்து முடிந்துவிட்டாற் போன்று கூத்தாடி..... ஊரெல்லாம் சொல்லி..... அவள் வயதிற்கேனும் மரியாதை கொடுக்க எனக்கு விருப்பமில்லை.

இப்பிடியும் ஒரு பொம்பிளையா....?

பீலிக்கரையில் வைத்து எல்லோர் முன்னிலையிலும் மானமே போய்விட்டது.

"மொளச்சு மூணு எல விடல்ல.... அதுக்குள்ள ஆம்புளத் துணை கேக்குதோ?....."

கையில் வைத்திருந்த வாளியால் ஒரே சாத்தாய்ச் சாத்திவிட வேண்டும் போல் இருந்தது. கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டேன். என் கெட்ட நேரம் அம்மாவும் என்னுடனேயே குளித்துக் கொண்டிருந்தாள்.

அப்போதைக்கு அம்மா அதைப்பற்றி அலட்டிக் கொள்ளவில்லை என்றாலும், வீட்டிற்குப் போனதும் எல்லாம் சேர்த்து வைத்து ஏசினாள். சின்னப் பிள்ளையென்றால், சின்னப்பிள்ளை மாதிரி இருக்க வேண்டுமாம். பிஞ்சிலேயே முத்தின வேலை செய்ய வேண்டாமாம்.

நான் வெம்பிப் பழுக்கப் பார்க்கிறேனாம்.

எனக்குத் தெரியவில்லை...... நான் பெரியவளா..... அல்லது..........

ஒன்றுமே புரியவில்லை.

## சபலம்...

நிஜமாக நான் தூங்கிக் கொண்டுதான் இருந்தேன். அவனது முழங்கை எனது இடையில் ஆழமாகப் பதியும் வரை.

இப்போது நான் விழித்துக் கொண்டது அவனுக்குத் தெரியாது. அவனது கை மேலும் மேலும் முன்னேறுகிறது. பஸ் வளைவுகளில் சாயும் பொழுதெல்லாம் அவனது ஒருபக்க உடம்பை அப்படியே என்மீது சாய்த்துக் கொள்ள முயற்சிக்கிறான்.

அவன் யாரென்று நான் பார்க்கவில்லை. பார்க்க முயற்சிக்கவும் இல்லை. கண்களைத் திறக்காமலேயே அவனது செயற்பாடுகளை அவதானிக்கத் தொடங்குகிறேன்.

வழமையாக நான் இரவு நேரங்களில் எங்குமே பயணிப்பதில்லை. இதுதான் முதல் தடவை. இல்லையில்லை..... இதற்கு முதலும் எங்கோ போய் வந்ததாய் ஞாபகம். ஆனால், இப்படியொரு சம்பவம் நிகழ வில்லை.

ஒருவேளை இருளென்பதால் இவன் என்னைக் கவனிக்கவில் லையோ.....! இருக்கும். இந்த மெல்லிய வெளிச்சத்தில் நான் அழகாய்த் தெரிந்திருக்கக் கூடும்.

சின்ன வயதில் இருந்தே என்னை எந்த ஆணும் விரும்பியதில்லை. நானும் தான். அதற்குக் காரணம் என் கறுத்த நிறமாய் இருக்கலாம். அல்லது என் பருத்த உடல்வாகாய் இருக்கலாம்.

நானும் அதைப் பற்றிப் பெரிதாய் அலட்டிக் கொள்ளவில்லை.

வயது முப்பத்தைந்தைத் தாண்டிய பின்னும் அதைப் பற்றி யோசிக்காமல் இருக்க முடியுமா.... என்ன?

நான் இன்னும் கன்னிப் பெண்தான். அதில் சந்தேகமே இல்லை. ஆனால், வயதும் தோற்றமும் என்னை முதிர்கன்னியாய்க் காட்டிக் கொடுக்கிறது.

வரும் வரன்கள் எல்லாம் தட்டுப்பட்டுக் கொண்டே போகப் போக, நான் அவமானப்படுவதாக உணரத் தொடங்கி...... ஆண்களை அறவும் வெறுப்பதாய் வெளியில் காட்டிக் கொண்டேன்.

அதில் உண்மையில்லாததை இந்தச் சம்பவம் எனக்கு உணர்த்துவதாய்ப் பட்டது.

இப்போது அவனது கால் விரல்களால் மெதுவாக எனது கால் விரல்களை ஸ்பரிசிக்கிறான். சூடாக இருக்கிறது. இந்தக் குளிருக்கு எனக்கந்த ஸ்பரிசம் இதமாகத் தெரிகிறது. ஆக இத்தனை நேரம் நான் அவனை வரவேற்கின்றேனோ?.....

எனக்கே பெருத்த ஆச்சரியம்! நான் எப்படி இப்படியானேன். என் உடல் ஏன் இப்படி சபலப்பட்டு மழுங்கிப் போனது?........

ஓர் ஆணிடம் இத்தனை இன்பங்களா.....? வெட்கத்தை விட்டு, அதை நானே ஏற்றுக் கொள்கிறேன்.

அவனது கை மெதுவாக ஊர்ந்து என் உடையைத் தாண்டி, இடைவெளி தெரியும் இடைப் பகுதியைப் பற்றுகிறது. நான் தூங்குவது போல் பாசாங்கு செய்து அவனுக்கு நன்றாக வளைந்து கொடுக்கிறேன்.

அவனும் லேசானவன் அல்ல. ஒன்றுமே தெரியாத பாப்பா போல அமர்ந்து கொண்டு எத்தனை வேலை பார்க்கிறான்.....!

சிலநேரம் நானும் இவற்றை விரும்புவதை அவன் உணரத் தொடங்கி விட்டானோ?....

என் உள்ளம் என்னைச் சாடுகிறது. அவமானப் பொருளாய் என்னை ஒதுக்கித் தள்ளுகிறது.

என்ன செய்ய?...... நானும் ஒரு சராசரிப் பெண்தானே! எனக்கும் உடலியல் தேவைகள் இருப்பதில் பிழையில்லையே?......

நானே என்னை நியாயப்படுத்தியும் கொள்கிறேன்.

எனக்கும் திருமணம் பற்றிய கனவுகள் இருந்தது. கணவன் பற்றிய எதிர்பார்ப்புகள் இருந்தன. வயது ஏற ஏற.... எனக்கந்த நம்பிக்கை இல்லாமல் போய் விட, இப்போது நான் என்ன செய்வது?......

கிடைத்த ஓரிரு ஸ்பரிச சந்தர்ப்பங்களையும் என் கற்பைக் காரண மாக்கி மறுத்திருக்கிறேன்.

இனியும் அப்படி வேண்டாமே..... பாவம் என் உடல் கொஞ்சம் அநுபவித்து தான் பார்க்கட்டுமே.

கற்போடு இருந்தென்ன?...... சிலையா வடிக்கப் போகிறார்கள்?......

பஸ் தேநீர் பருகுவதற்காய் இடையில் நிறுத்தப்படுகிறது. நான் விழித்துக் கொண்டதாய்ப் பாவனை செய்கிறேன். அவன் தூங்குவதாகக் காட்டிக் கொள்கிறான்.

எப்படியாவது அவனை நேருக்கு நேர் பார்த்து விட வேண்டும் என்று மனது துடிக்கிறது. வெளியே பார்ப்பது போல் அவனைப் பார்க்கிறேன். ம்ஹூம்..... அவன் கண்டு கொள்ளவே இல்லை.

எனக்கு அவனைப் பிடித்திருக்கிறது. ஒருவேளை இவன் இணங்கி னால் மணம் முடிக்கவும் தான்! இவன்தான் எதுவும் நடக்காதது போல் இப்படிக் கல்லாட்டமாக இருக்கிறானே?.........

ஏதாவது பேச்சுக் கொடுக்கலாமா?......

"எக்ஸ்கியூஸ் மீ.... டைம் என்ன?....."

கைக்கடிகாரத்தைக் காட்டுகிறான். ஒருவேளை ஊமையோ?......

அவன் திரும்பியதில் கொஞ்சம் முகம் பார்க்க முடிந்தது.

அப்படியொன்றும் பெரிய அழகனல்ல..... எனக்குப் பொருத்தமாய்த் தான் இருக்கிறான்.

மீண்டும் பஸ் புறப்பட, இருவருமே ஒருவரையொருவர் அறிமுகமில்லாதது போல் பயணிக்கிறோம். மனதுதான் ஏதோவெல்லாம் சொல்கிறது.

தப்பு செய்து விட்டேனோ?......

மனதை இன்னும் கொஞ்சம் கட்டுப்படுத்தியிருக்கலாம். இதுபோல இவன் எத்தனை பேரிடம் நடந்து கொண்டானோ, என்னவோ?......

நினைக்க நினைக்க உடல் கூசிப் போவதாய் ஓர் எண்ணம். இருந்திருந்து இவனிடமா?......

எத்தனை வரன்கள் தட்டுப்பட்டுப் போயின. ஒவ்வொன்றிற்கும் இல்லாத பொல்லாத காரணங்கள். அதில் ஏதாவது ஒன்று நடந்திருந்தால் கூட இன்று இந்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்க மாட்டேனோ?......

கடைசியாய் வந்த குண்டனுக்குக் கூடவா என்னைப் பிடிக்காமல் போக வேண்டும்?.......

என் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களை வெளியே சொல்லிக் கொள்ளவும் முடியாமல், அகத்தே வைத்திருக்கவும் முடியாமல்......

நான் பிறந்ததே பாவம்.

நானும் கல்யாணம் கட்டி, பிள்ளைகள் பெற்று, ஓடி ஆடிச் சிக்கல்களைச் சமாளித்து...... எல்லாம் கனவுகளில் மட்டும்தான். கனவுகளில் மட்டுமே தான்.

பார்க்கலாம். எனக்கென ஒருவன் பிறக்காமலா போயிருப்பான்.

என் எண்ணமெல்லாம் அந்த, அவன் ஏன் இவனாக இருக்கக் கூடாது என்பதுதான்.

இத்தனை தூரம் என்னை ஸ்பரிசித்துவிட்டும் ஒன்றுமே நடக்காததாய்க் காட்டிக் கொள்கிறானே..... பாவி!

படாரென் அவன் எழும்புகிறான். இறங்குவதற்காய் இருக்க வேண்டும். எனக்குச் சப்பென்றாகி விடுகிறது.

கடைசியாக ஒரே ஒரு முறை என்னைப் பார்த்துவிட்டுப் போ...... கொஞ்சமாவது என் கறையைக் கழுவிக் கொள்கிறேன். உன் செயல் என்னை வெகுவாய் நெருடுகிறதேயடா.......

ஒரு விபச்சாரியைப் போல என்னை நடத்தி விட்டாயே?......

நானும் கூட.........

பஸ் நிறுத்தப்படுகிறது. அவன் தவறியேனும், திரும்பிப் பாராமல் இறங்கி விடுகிறான்.

எனக்கு எங்கெல்லாமோ வலிக்கிறது.

அவன் அமர்ந்திருந்த அந்த இடைவெளியில், இன்னொரு அரைக் கிழவன் வந்தமர்கிறான். என்னைப் பார்த்து அசடு வழியச் சிரிக்கிறான்.

நான் அவனையே வெறித்துப் பார்க்கிறேன்.

# செண்டாக்கட்டிச் சாமி

விடியற்காலையிலே வருமே ஒரு தூக்கம்.... அதுவும் வேலைக்குப் போகணுமேன்னு எழும்புறப்போ...... பேசாமத் திரும்பவும் படுத்துடலாமான்னு தோணும். எங்கே அதுக்கெல்லாம் கொடுத்து வச்சிருக்கணும்பா....

பாக்கியத்திற்குப் படுக்கையை விட்டு எழும்பவே பிடிக்கவில்லை. என்றாலும், விறுவிறுப்பாக இயங்கினாள். தான் வழமையாகக் கட்டும் தாவணியை விடுத்துப் புதுப் பாவாடையும் தாவணியையும் சுற்றிக் கட்டிக் கொண்டாள். எத்தனைதான் முயற்சித்தும் அந்தச் சின்னக் கண்ணாடியால் தன் முழு உருவத்தையும் அவளால் பார்க்க முடியவில்லை. பவுடர் போட்டு, பொட்டு வைத்து, வீட்டு முற்றத்தில் பூத்திருக்கும் ஒற்றைக் கனகாம்பரக் கொத்தை அப்படியே கொண்டையில் செருகிக் கொண்டாள்.

இன்று செண்டாக்கட்டி மலையில் பலி கொடுத்து சாமி கும்பிடும் நாள். பெண்கள் கூடியிருந்து பொங்கல் வைப்பார்கள்.

செண்டாக்கட்டி மலையில் இருக்கும் அந்த முக்கோண வடிவக் கல்லை நன்கு அலங்கரித்து, மாலையிட்டுப் பொங்கல் படைத்துப் போதாக்குறைக்கு ஒரு ஆட்டையோ, சேவலையோ பலிகொடுப்பதும் அந்த ஊரின் வழக்கம்.

பாக்கியம் தன் பங்கிற்கு ஒரு தேங்காயும் வெற்றிலை பாக்கும் எடுத்துக் கொண்டு அவசர அவசரமாகக் கிளம்பினாள்.

அவள் மனதிற்குள் ஓர் இனம்புரியா உவகை..... துள்ளல்...... தன் ஆடை அலங்காரம் தன்னை ஒரு தேவதையாய் வெளிப்படுத்துவதாய்த் தனக்குத்தானே நினைத்துக் கொண்டாள்.

வழமையில் தேயிலை மலையில் வேலை செய்யும் போது ஆண்க ளும் பெண்களுமாய்க் கூடியிருந்து வேலை செய்வது அரிது. அப்படியே சந்தர்ப்பம் கிட்டினாலும், யாராவது இருவர் பேசிக் கொள்வது ராசய்யாக் கங்காணி கண்களுக்கு அகப்பட்டுவிட்டால் போதும், மலை முழுவதும் கேட்குமாறு பச்சையாய் ஏசிவிடுவார்.

என்ன செய்ய?..... இவனுக்கெல்லாம் பயந்து பயந்து வேலை செய்ய வேண்டியிருக்கிறது.

ஒரு தடவை அப்படித்தான், காட்டுச்செடி வெட்டிக் கொண்டிருந்த ரத்தினம் அண்ணன் பாக்கியத்தைக் கேலி பண்ணிப் பண்ணி ஏதோ பேசியபடியே இலைகளை வெட்டிக் கொண்டிருந்தார்.

‘‘அடேய் எவன்டா அவன் மலைக்குள் குடும்பம் நடத்துறது.....?’’

பாக்கியத்திற்குத் தூக்கி வாரிப் போட்டுவிட்டது. இனி முடிஞ்சது. அவ்வளவே தான்.. நினைத்ததைப் போலவே, பலபேர் முன்னிலையில் பாக்கியத்தின் கன்னித் தன்மையை விளம்பரப்படுத்தி அசிங்கமாய் விமர்சித்துவிட்டார் ராசய்யாக் கங்காணி.

இன்றென்றால் இந்தக் கஷ்டங்கள் இருக்காது. மலையும் இல்லை, கொழுந்தும் இல்லை, அந்தப் பாவிக் கங்காணியும் இல்லை. எல்லோ ருமாய்ச் சேர்ந்து படையலிட்டுப் பலிகொடுத்து, சாமி கும்பிட்டு..... நினைக் கும் போதே பாக்கியத்திற்குச் சந்தோஷமாய் இருந்தது.

சதா கொழுந்து பறித்து மரத்துப் போன கண்களுக்கு இன்று சற்று வித்தியாசமான காட்சிகள்.... அநுபவங்கள்..... சந்தோஷங்கள்.....

நினைத்தது போலவே செண்டாக்கட்டியில் ஆட்கள் நிரம்பி இருந் தார்கள். பணியக்கணக்கு, மேற்கணக்கு, நடுக்கணக்கு என்று எல்லாப்

பகுதியினரும் ஒன்றாகக் கூடித் தங்களை அவசர வேலை செய்பவர் களாய்க் காட்டிக் கொண்டிருந்தார்கள்.

பொங்கல் வைக்கும் ஆயத்தத்தில் ஒரு பத்துப் பேர், விறகு தேடுவ தற்காய்ச் சிலர், சேவல் பலியிடும் இடத்தைத் துப்புரவு செய்வதற்காய் ஒரு சிலர் செண்டாக்கட்டிச் சாமியை அலங்கரிக்கவும் சிலர் என்று ஆளுக்காள் மும்முரமான வேலையுடன்.......

பாக்கியம் விறகு பொறுக்கும் கூட்டத்திற்குள் சேர்ந்து கொண்டாள். காய்ந்த விறகு தேடுவது கொஞ்சம் சிரமமாய்த்தான் இருந்தது. தேயி லைக் கட்டைகளையும் சவுக்குமர வாதுகளையும் மெதுவாய்ப் பொறுக் கிக் கொண்டிருந்தாள். ஒருவருக்கொருவர் ஊருப்பட்ட கதைகள்.

''என்ன பாக்கியம்.... ரத்தினமண்ணன் மாப்பிள்ளையாட்டம் வந்திருக்காரு?''

பாக்கியத்திற்குக் கூச்சமாய் இருந்தது. மெதுவாய் நழுவிப் பொங்கல் வைக்கும் இடத்திற்கு வந்துவிட்டாள்.

அங்கே அழகாய் மாக்கோலம் இட்டு, பொட்டு வைத்து மூன்று கற்களால் அடுப்புப் போட்டு..... என்ன அழகான காட்சி! பெரிய அண்டாவில் அரிசி, சீனி. சர்க்கரை எல்லாம் கலந்து..... காய்ச்சி..... சரியாகக் கூட்டாஞ்சோறு ஆக்கி விளையாடுவதைப் போல......

பாக்கியம் சிரித்துக் கொண்டாள். அலிபாக்கள் எல்லாம் சேர்ந்து விளையாடுவதாய்க் கற்பனை செய்து கொண்டாள். அவ்வப்போது ரத்தினம் அண்ணனின் ஓரப்பார்வை தன் மீது விழுவதை அறிந்தும் அறியாத பாவனையில் அங்குமிங்குமாய் வேண்டுமென்றே நட மாடினாள்.

கிட்டத்தட்ட ஒரு மூன்று மணித்தியாலத்திற்குப் பிறகு எல்லாம் ரெடியாகிற்று. பலியிடும் சேவலையும் ஒரு மரத்தில் கட்டி வைத்து விட்டு...... பூசாரியண்ணன் பூசை செய்யத் தொடங்கினார்.

''எல்லோரும் வந்தாச்சா?...... தொடங்கலாமா?......''

மீண்டும்.... மீண்டும் பூசாரி கேட்டார்.

"ஒரு மூணு பேர் வரணுங்க......" யாரோ மூலையில் நின்றபடி சொன்னார்கள்.

"எங்கப்பா போயிட்டாங்க.....?"

"தொர கூப்பிட்டனுப்பினாராம்.....

"என்னத்துக்கு?......"

"வேறென்னத்துக்கு அந்த கங்காணிப் பயல் ஏதாவது போட்டுக் குடுத்திருப்பான்....."

ஆளுக்காள் பேசிக் கொண்டார்கள். ஒரு சிறிய சலசலப்புடன் பூசை தொடங்கவும், அந்த மூவரும் வந்து சேரவும் சரியாக இருந்தது.

அவர்களின் முகத்தில் ஏதோ ஒருவித மாற்றம் இருக்கிறதா? இருந்தது.

பாக்கியம் உறுதியாய் நினைத்தாள்.

பூசை நிகழ்வுகள் கலகலப்பாய் இருந்தன. ஆண்கள் கூடிச் சேவலைப் பலியிட்டார்கள். ஒரே கூத்தும் கும்மாளமுமாய்த் தங்கள், தங்கள் மகிழ்வைப் பகிர்ந்து கொண்டனர்.

ஒருவாறு பூசை முடியப் படையல், பழங்கள் எல்லாம் பங்கிட்டு..... சுவை பார்த்து....... வீட்டுக்கும் கொஞ்சம் சேமித்து..... பொழுது இனிமையாய்க் கழிந்து கொண்டிருக்க.....

"ஏய்.... நம்மளுக்கு இன்னைக்கு பேர் போட மாட்டாங்களாம் பா......."

"என்னய்யா சொல்றீங்க?.........." பதறிப் போய் ஒவ்வொருவராய்க் கேட்க ஆரம்பித்தனர்.

"தொர தாங்க சொல்லியிருக்காரு..... நாம வேலை செய்யாம கூத்தடிக்கிறோமாம்."

"இது என்னடா அநியாயம். வருஷா வருஷம் செய்றது தானே......"

''இனிமேல் அப்படிக் கெடையாதாம்..... ஒருநாள் வேலை வீணாகுதாம்.''

எல்லோருக்குமே அதிர்ச்சி.

''அப்போ ஒருநாள் சம்பளம் இல்லையா?.....''

''என்ன அநியாயம்டி இது?......''

''எல்லாம் அந்தக் கங்காணிட மூட்டலாத்தான் இருக்கும்......'' பெண்கள் தங்கள் பங்குக்குப் பேசத் தொடங்கினர்.

''எல்லாரும் கொஞ்சம் அமைதியா இருங்க. அடுத்த வருசத்துல இருந்து செண்டாக்கட்டிப் பூசைக்கு அவங்களே ஆள் அனுப்புவாங் களாம்.''

பூசாரி எல்லோருக்கும் விளக்கிக் கொண்டிருந்தார்.

பாக்கியத்திற்கு மனது சோர்வாய் இருந்தது. ஒவ்வொருவரும் தங்கள், தங்கள் கருத்துக்களைக் கூறிக் கொண்டிருக்க, பாக்கியம் மௌனமானாள்.

அவளால் என்ன பேசிவிட முடியும்.....? ஒருநாள் பேர் இல்லாமல் போவது அவளுக்குப் பெரிதாய்த் தெரியவில்லை. எல்லோரும் கூடி மகிழும் செண்டாக்கட்டி விழாவை இப்படிச் செய்து விட்டார்களே!

இனிமேல் இந்நிகழ்வு நடக்காதோ?...... அநேகமாய் அப்படித்தான் இருக்கும்.

தன் புதுப்பாவாடையில் ஒட்டுப்புல் குத்தாமல் சிறிது தூக்கிப் பிடித்தபடி, வீட்டுக்கு நடக்கத் தொடங்கினாள் பாக்கியம்.

# கசிப்பக்காரன்

**வி**ஷயம் தெரிந்த அடுத்த நொடியிலேயே மணிவேல் பரபரப்பானான். இருந்த போத்தல்கள், கான்கள் அத்தனையையும் வாரிச் சுருட்டி அள்ளிக் கொண்டோடித் தோட்டத்து வாழைமரச் சந்துக்குள் ஒளிய வைத்தான். தேவியும் தன் பங்குக்குச் சாணியைக் கரைத்துக் குசினிப் பக்கமெல்லாம் தெளித்துச் சுத்தப்படுத்தினாள்.

எதிர்பார்த்தது போலவே, இரண்டு போலிஸ்காரர்களும் ஒரு கிழவனும் தான் வந்திருந்தார்கள்.

“மணிவேல் கவுத?” ஒருவன் அதட்டியபடியே வாசலில் நின்றான்.

“நான்தானுங்க மாத்தியா மணிவேல்” சட்டைப் பொத்தானை அவசர அவசரமாய்ப் பூட்டியபடியே மணிவேல் வாசலுக்கு வந்தான்.

“இங்க கசிப்பு விக்கிறது சொல்லித் தகவல் வந்திருக்கு.”

மூவரும் பரபரவென வீட்டுக்குள் சென்று தேட ஆரம்பித்தார்கள். எல்லா இடமும் தேடியும் ஒன்றும் அகப்படவில்லை. கட்டிலடி, அட்டில் என ஓர் இடம் விடாமல் தேடிக் கொண்டிருந்தார்கள்.

தேவி நொடிக்கொருதரம் கருப்பஞ்சாமியை நேந்து கொண்டாள். அவளுக்குப் படபடப்பு இன்னும் குறையவே இல்லை. ரங்குப் பெட்டிக்குள் இருந்த இரண்டாயிரம் ரூபாயைச் சுருட்டி, மெதுவாய்க்

கணவனின் கைகளுக்குள் திணித்தாள். ஒருவாறு விஷயம் சாதகமாய் முடிய, கோபமாய் வந்த போலிஸ்காரர்கள் தோழமையுடன் சிரித்துக் கொண்டே போய்விட்டார்கள்.

மணிவேலிற்கு நன்றாய்த் தெரியும். இது சின்னானின் வேலை யாய்த் தான் இருக்கும். நேற்றுக் கடனில்லை என்றதற்காய் இப்படியா செய்ய வேண்டும்.

“வரட்டும் அந்த மொட்டையன்..... ரெண்டுல ஒண்ணு பாக்கு றேன்...”

தேவி புருஷனின் வாயை அடக்கி வீட்டுக்குள் இழுத்துக் கொண்டி ருந்தாள். இன்று என்ன நடக்குமோவென்று அந்த லயமே எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

ஒருநான்கு மாதமாய் மணிவேலிற்கு இதுதான் தொழில். செலவை விட வரவு அதிகமாயிருந்ததால், கசிப்பு வியாபாரம் சூடுபிடித்திருந்தது. அந்தியானால் சரி தோட்டத்து ஆண்களில் அநேகர் மணிவேல் வீட்டில் தான் கிடப்பார்கள். ஒரு சிர ட்டை கசிப்புப் பத்து ரூபாய் என்ற கணக்கில் கொள்ளை லாபம் வந்து கொண்டிருந்தது. கூடமாட தேவியின் ஒத்து ழைப்பும் இருந்ததால், எந்தக் கஷ்டமும் இருக்கவில்லை. ஆனாலும், யாருக்காவது கடனில்லை என்றால் உடனே துப்புக் கொடுத்து விடுகி றான்களே...... அதுதான் கொஞ்சம் இடித்தது. ஏதாவது செய்யத் தான் வேண்டுமென மணிவேல் தீர்மானித்துக் கொண்டான்.

லேசாய் இருட்டத் தொடங்கி லயமே பரபரப்படைந்தது. வேலை முடித்து வந்து பீலிக்கும் வீட்டுக்குமாய் தண்ணீர் தூக்கியபடி சிலரும், வாசல் கூட்டியபடி சிலருமாய், எல்லோருமே மணிவேல் வீட்டைத்தான் நோட்டம் விட்டுக் கொண்டிருந்தார்கள். இன்று எப்படியும் ஒரு சண்டை இருக்குமென்று அவர்களுக்குத் தெரியும். அப்போதுதான் வேலையிலி ருந்து வந்தவளாய், தலைவேட்டியை உதறியபடியே வாசலில் நின்று கொண்டிருந்தாள் சின்னானின் புதுப்பொண்டாட்டி சரசு. அவளைக் கண்டதுதான் தாமதம். விறுவிறுவெனச் சென்று,

“ஏண்டி உம் புருசன அடக்கி வைக்க மாட்ட....? இன்னைக்கு என்ன நடக்குமுன்னு தெரியலையே. இந்த மனுசனும் வெறி புடிச்சமாரி

குடிச்சித் தொலச்சிட்டதே....'' தேவி தலையிலடித்துக் கொண்டே புலம்பத் தொடங்கினாள்.

''நாங்க ஏன் அடங்கணும். ஊருக்கே குடிக்கக் குடுத்து பொம் பளைக வயித்துல அடிக்கிறிங்களே..... நீங்கதான் அடங்கணும்.''

சரசும் விடாமல் தொடர்ந்தபடியே இடுப்புச் சாக்கை ஆறுதலாய்க் கழட்டி, பாவாடையை உதறினாள்.

''அடங்குவோண்டி....... அடங்குவோம். இன்னக்கி ஒம்புருசன கொலசெய்யாம விடமாட்டேன்....''

மணிவேல் வெறித்தனமாகச் சின்னான் வீட்டைப் பார்த்துக் கத்தினான்.

லயத்தில் உள்ள சின்ன வாண்டுகள் எல்லாம் சண்டை பார்க்க இடம் பிடித்து நின்று கொண்டார்கள். சின்னான், வீட்டில் இல்லாதபடி யால், வாய்ச் சண்டைதான் பயங்கரமாய் இருந்தது. சரசுவும் தேவியும் ஒருவருக்கொருவர் சளைக்காமல் ஏசிக் கொண்டார்கள். அவர்களது ஒவ்வொரு ஊத்தை வார்த்தைகளையும் கேட்க, சிறுவர்களுக்குச் சுவாரசியமாகவும், கொஞ்சம் கூச்சமாகவும் இருந்தது. நல்ல வேளை அன்று சின்னான் வரவே இல்லை.

அந்தச் சிறுசுகளுக்குக் கொஞ்சம் ஏமாற்றமாய்தான் இருந்தது. சின்னான் மட்டும் இருந்திருந்தால், அடிதடி வெட்டுக் குத்து என்று சண்டை வெகு ஜோராய் இருந்திருக்கும். எப்படியோ எல்லோருமே அடங் கிப் போய், தங்கள் தங்கள் வேலையைக் கவனிக்கத் தொடங்கினார்கள்.

ஆரம்பத்திலிருந்தே மணிவேல் மனதில் நல்லதொரு திட்டம் இருந்தது. அதைச் செயற்படுத்த இதுதான் சரியான சமயமென்று அவனுக்குப் பட்டிருக்க வேண்டும். மண்வெட்டியை எடுத்துத் தோட்டத் திலிருந்து வீட்டின் பின்பக்கம் வரை ஆழமாய்க் குழிவெட்டினான். அடுத்த நாளே டவுனுக்குப் போய் எஸ்லோன்பைப் வாங்கி வந்தான். யாருக்கும் தெரியாமல் ரகசியமாகவே எல்லா வேலையும் நடந்தது.

தேவி பலமுறை துருவித் துருவிக் கேட்டுச் சலித்துப் போனாள்.

இறுதியில் குசினிப் பக்கம் புதிதாய் போடப்பட்ட பைப்பைத் திறந்ததும், கசிப்பு வருவதைக் கண்டு, அவளுக்கு ஒரே வியப்பு! தன் கணவனின் கெட்டித்தனத்தை நினைத்து நினைத்துப் பெருமைப்பட்டாள்.

''எம்புட்டு அறிவு ஒங்களுக்கு.......''

''இப்ப எவ்வளவு லேசு தெரியுமா? போலிஸ்காரனுங்க வந்தா ஒடனே பைப்பைப் புடுங்கி வீசிற வேண்டியதுதான். இனிமே எவன் துப்புக் குடுக்குறான்னு நானும் பாத்துர்றேன்.''

மணிவேல் தன் வீரசாகசத்தை மனைவியிடம் வெகுவாய் விபரித் துக் கொண்டிருந்தான். எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த மணிவேலின் கடைசி மகன், இதுதான் தருணமென்றெண்ணி ஒரு கோப்பையுடன் சத்தமில்லாமல் சென்று புதுப் பைப்பைத் திறந்தான்.

# சஜீவன்

**கொ**ப்பி திருத்துவதும் கொஞ்சம் சிரமமான வேலைதான் போல. அதுவும் சின்னக் கிளாஸ் பிள்ளைகளின் கொப்பியென்றால், ஆகவும் கஷ்டம். இடத்துக்கிடம் வெட்டும் கொத்துமாய்........ எரிச்சலுடன் சிவப்புப் பேனையால் ஒரே வெட்டாய் கோடிட்டு விட்டு, நிமிர்ந்த போது தான், கவனித்தேன் சஜீவன், என்னையே கவனித்துக் கொண்டு நின்றதை.

"என்ன சஜீவன் விளையாடப் போகலையா......?"

"இல்ல ரீச்சர்" என்றபடி குனிந்து கொண்டான்.

இப்போ சில நாட்களாகவே இப்படித்தான் இவன் என்னையே சுற்றிச் சுற்றி வருகிறான். இவனது அத்தனை முரட்டுக் குணமும் என்னைக் கண்டதும் பெட்டிப் பாம்பாய் அடங்கிப் போகிறது.

இவனை யாருக்குமே அவ்வளவாகப் பிடிப்பதில்லை. அப்படியொரு முரட்டுப் பையன். ஆனால், என்னிடம் எத்தனை மென்மையாக நடந்து கொள்கின்றான் தெரியுமா...? ஒரு வேளை பாகுபாடில்லாத என் அன்பு காரணமாக இருக்குமோ...? இருக்கலாம்! விசாரித்துப் பார்த்ததில், மோசமான குடும்பச் சூழ்நிலை தான் அவனது முரட்டுத்தனத்திற்கு காரணமென்றார்கள்.

இன்னுமே அவன் என்னருகிலேயே நின்று கொண்டிருக்க, "ஏன்?"

என்கிறேன். இன்னும் கொஞ்சம் சமீபத்தில் வந்து பொத்தி வைத்திருந்த கையை நீட்டி ஒரு கொய்யாப் பழத்தைத் தருகிறான்.

எனக்கு வியப்பாய் இருக்கவில்லை. தினசரி எதையாவது ஒளித்து வைத்திருந்து யாருக்கும் தெரியாமல் தருவதையே வழக்கமாகக் கொண்டிருந்தான்.

அவனது உருவமும் சற்று வித்தியாசமாகத் தான் இருந்தது. ஒரு பதின்மூன்று பதினான்கு வயதிருக்குமென்றாலும் அதனிலும், அதிக மான வயதைக் காட்டக் கூடிய முகத்தின் முதிர்ச்சி. மெலிந்த தேகம். தொட்டுப் பொட்டு வைத்துக் கொள்ளலாம் என்றளவிற்கு கறுப்பு நிறம். முடியை மொட்டையாக வெட்டிக் கொண்டு, ஓர் ஆபிரிக்கக் குடிமக னைத் தான் அடிக்கடி ஞாபகப்படுத்துவான்.

தினசரி யாருடனாவது சண்டை. வயது வித்தியாசமின்றி அத்தனை பேரையும் அடித்துப் போட்டு விடுவான். இரத்தம் வழிய, வழிய மற்றய மாணவர்கள் முறைப்பாடு செய்கையில் எல்லா ஆசிரியர்களிடத்திலும் ஞாயமாய் அடி வாங்கி விடுவான்.

முதல் தடவையாய் அவனது வகுப்பிற்குப் போனதும், தலை சுற்றிப் போனேன். அவன் ஒருத்தனின் சேட்டையால் ஒருவருக்கும் படிப்பிக்க முடியவில்லை. அடித்துத் திருத்தி விட முடியுமென்று எனக்குத் தோன்ற வில்லை. அன்பால் கட்டுப்படுத்த முடியுமென்றும் நான் நம்பவில்லை. மாறாக, அவனையே.... அவன் கண்களையே ஒருகணம் கூர்ந்து பார்த்துவிட்டு, வகுப்பிலிருந்து வெளியேறி விட்டேன். நான் அவனை அடிக்காமல் விட்டது அவனுக்கு வியப்பாய் இருந்திருக்க வேண்டும். பின்னாலேயே ஓடி வந்தான்.

“ஏன் ரீச்சர் போறீங்க......?” என்றான்.

ஒன்றுமே பேசாமல், அவன் தலையைத் தடவி விட்டுப் போய் விட்டேன்.

அந்த ஸ்பரிசம்... அவனை இந்தளவிற்கு மாற்றும் என நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. என் அன்பு கலந்த அந்தத் தொடுகை

யில் அவன் நெகிழ்ந்து போயிருக்கிறான். அதன் பின் என் பாடத்திற்கு மணியடிக்க முன்பேயே ஓடி வந்து கையையோ, சாறி முந்தானையையோ பிடித்துக் கொண்டு வகுப்பிற்கு வரச் சொல்லுவான்.

என் வியப்பை வெளிப்படுத்தாமல், பல சந்தர்ப்பங்களில் அவனுக்கு முதலிடம் கொடுத்துப் பார்த்தேன். சத்தியமாய் ஆடிப் போனேன்! அவனில் அப்படியொரு முன்னேற்றம்.

ஆக, இவன் மனதில் தான் மந்தத்தனம் இருந்திருக்கிறது. அறிவில் அல்ல.

மொத்தத்தில் எனக்கு உள்ளூரப் பெருமை தான். ஒரு சாதாரண மாணவனையா மாற்றியிருக்கிறேன்.....?

இந்தத் தொழில் ஆண்டவன் எனக்குத் தந்த வரம். நாளாந்தம் எத்தனை குழந்தைகளுடன் உறவாட முடிகிறது. அன்பு, அரவணைப்பு, கண்டிப்பு, அறிவுரை, விளையாட்டு, சுற்றுலா..... இப்படி வாழ்வின் இன்பப் பக்கத்தையே சுழற்றும் அற்புதமான உலகமிது!

'ரீச்சர்! ரீச்சர்!' என்று பிள்ளைகள் என்னைச் சுற்றிக் கொண்டும், சாறி முந்தானையில் தொங்கிக் கொண்டுமாய்... சில நேரங்களில் எனக்குப் புல்லரித்துப் போய் விடுவதுண்டு.

என்ன புண்ணியம் செய்தேனோ, ஆண்டவனே! அன்பும் ஆபத்தாகி விடுமோவென கொஞ்சம் பயப்படவும் தொடங்கியிருக்கிறேன்.

சஜீவனது நடவடிக்கைகள் எனக்கு அத்தனை தூரம் பிடிக்க வில்லை. வேறு எந்த மாணவனும் என்னை நேசிப்பதை அவன் விரும்ப வில்லை. ஏன்? சக ஆசிரியர் ஒருவர் அதிக நேரம் உரையாடுவதைக் கண்டாலே, அவனது நடத்தைக் கோலங்களில் அசாதாரண மாற்றத் தைக் காண முடிகிறது.

இது எங்கு போய் முடியுமோ...?

சஜீவனுடனான என் நெருக்கத்தைக் குறைக்க ஆரம்பித்த பின்தான், நாளாந்தம் மறைத்து, மறைத்து எதையாவது கொடுக்கப் பழகியிருந்தான்.

யாரிடமும் இதைப் பற்றிச் சொல்லவும் முடியவில்லை. சொன்னால் ''எல்லாம் நீங்கள் கொடுத்த இடம் தான்'' என்று குற்றம் என் மீதே திரும்புகிறது.

இதெல்லாம் ஒருபுறமிருக்க, நேற்று அவனுடன் உரையாடிய போது, எனக்குத் தூக்கிவாரிப் போட்டுவிட்டது.

''ஏன் ரீச்சர் அடிக்கடி வாறீங்க இல்ல......?'' என்றான்.

நான் தொடர்ந்தும் எழுதிக் கொண்டே, ''ரீச்சருக்குக் கல்யாணம் நடக்கப் போகுது, அதனால் தான்'' என்றேன்.

சடாரென அவ்விடத்திலிருந்து அகன்று போனவன், போன வேகத்திலேயே திரும்பி வந்தான்.

''ரீச்சர் நீங்க கல்யாணம் கட்டாதீங்க''

''ஏன்?'' என்றவாறு அவனைப் பார்த்த போது தான், அவன் முகம் மாறியிருப்பது தெரிந்தது.

''வேணாண்ணா வேணாம் ரீச்சர்''

''அதுதான், ஏன்?''

''அப்புறம், என்னோட பாசமா இருக்க மாட்டீங்க'' என்றான்.

சிரித்துக் கொண்டே விளையாட்டாய்ச் சொன்னேன். ''நான் கலியாணம் பண்ணத்தான் போறேன்.''

''அந்தாளைக் கண்டா, அடிச்சே கொன்னுருவேன்'' என்று எதுவித சலனமும் இல்லாமல் சொல்லிவிட்டுப் போய் விட்டான்.

ஒரு நிமிடம் பதில் சொல்ல முடியாமல் திகைத்துப் போய் விட்டேன்.

அவன் என்னத்தை விளங்கிக் கொண்டு, இப்படியெல்லாம் பேசுகிறானென்று புரியவில்லை. அவன் என் மீது வைத்திருக்கும் அன்பின் ஆழம், ஓர் ஆசிரிய மாணவ உறவிற்கு அப்பாற்பட்டதென என்னால் உணர முடிந்தது.

நான் கடுமையானவளாகி, தண்டித்து மீண்டும் அவனை முரடனாக் குவதில் எனக்கு உடன்பாடில்லை. பின் என்னதான் செய்வது?

எனக்கு உடலிலும் சோர்வொன்று தெரிய, எழும்பி வகுப்பறையில் இருந்து வெளியே வருகிறேன். கூச்சலுடன் ஆரவாரித்துக் கொண்டு, மாணவர்கள் விளையாடுவது தெரிகிறது. கூடவே, சஜீவனும்.......

நான் அவர்களையே அவதானித்துக் கொண்டு..........

யாரோ ஒருவனின் கால் இடறிவிட சஜீவன் விழப் போய், தட்டுத் தடுமாறி தன்னைக் காப்பாற்றிக் கொண்டவன், மற்றைய மாண்வனை ஓங்கி அறைகிறான். அவனும் பதிலுக்கு ஏசிவிட்டு, மீண்டும் விளையாட் டுத் தொடர்கிறது. அவர்கள் இருவருமே மீண்டும் கட்டிக் கொண்டும், சிரித்துக் கொண்டும் தொடர.........

இப்பொழுது சஜீவனை ஒரு சராசரி மாணவனாக என்னால் பார்க்க முடிகிறது. அவனும் ஒரு குழந்தைதானே.

என் அன்பில் மாற்றம் ஏற்பட்டால் மட்டுமன்றோ, சஜீவனிலும் மாற்றம் ஏற்படக் கூடும். சற்றே மனது லேசானது போல் ஓர் உணர்வு. அடுத்த பாடத்திற்குச் செல்வதற்காய் நான் ஆயத்தமாகிறேன்.

# உண்மை சுடும்

செல்லாயிக் கிழவிக்குத் 'திகீர்' என்றிருந்தது. கொஞ்சம் அரு கில் சென்று உற்றுப் பார்த்தாள். மெய்யாகவே அந்தப் பலாப் ழத்தை அங்கே காணவில்லை. அவளுக்குக் கையும் ஓடவில்லை காலும் ஓட வில்லை. பெருத்த ஏமாற்றமாகிப் போய்விட்டது.

"ச்சீ........ மூதேசிகள்! பொத்திப் பொத்திப் பாதுகாத்த பெலாக்காயை வெளங்காம போற எந்தப் பாவியோ பறிச்சிட்டானே...."

சத்தமாகச் சபித்துக் கொண்டே, மண்ணை வாரி மரத்துத் தூரில் இறைத்துவிட்டு வேகமாய், நடக்கலானாள். கடந்த ஒரு கிழமையாய்க் கிழவிக்கு இதுவேதான் வேலையாய் இருந்தது. வருவதும் பலாக் காயைப் பார்ப்பதும் செல்வதுமாய்.... அது பழுக்கும் நாளுக்காய்க் காத்துக் கொண்டிருந்தாள். சரியான சமயத்தில் எவனோ திருடியிருக்கிறான். சனியன் பிடிச்சவன்.

அது ஒன்றும் சாதாரண பலாப்பழம் அல்ல. ஊரில் எங்கேயுமே அப்படியொரு பழத்தைச் சாப்பிட்டுவிட இயலாது. வருடத்திற்கு எண்ணி ஐந்தோ ஆறோ காய்கள் மாத்திரமே அந்த மரத்தில் காய்க்கும்.

செம்மஞ்சளும் சிவப்பும் கலந்த ஒருவித கடும் நிறத்தில் பெரிய பெரிய சுளைகளுடன், பார்க்கவே நாவெல்லாம் ஊறும், அந்தக் கனிந்த சுளையை இரண்டாய்ப் பிய்த்து நாவிற்கருகே வைத்து உறிஞ்ச, தேனை யொத்த ஒரு திரவம் வடிந்து வரும். சுவையென்றால் அப்படியொரு சுவை!

கிழவிக்குத் தெரிந்தவரையில் இந்தவகைப் பலாமரம் வேறு எங்கேயும் இருந்ததில்லை. தன் பாட்டன் காலத்துச் சொத்தாய் அந்த ஒரு மரத்தையே பாதுகாத்து வைத்திருந்தாள்.

கிழவியின் பேரப்பிள்ளைகளுக்கெல்லாமே இந்தப்பழம் காய்க்கும் பருவம் நன்றாகத் தெரியும். ஆதலால், எல்லோருமே அப்பம்மா பழம் கொண்டு வருவாளென எதிர்பார்த்துக் கொண்டிருப்பது வழமை. இனி என்ன செய்வதென்று அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை.

நிச்சயமாய் செல்லாயிக் கிழவிக்குத் தெரியும், இது சிறியாவத்தியின் வேலை தானென்று. ஒவ்வொரு முறையும் இப்படித்தான். என்ன பயிர் செய்தாலும் நாசம் பண்ணி விடுகிறாள். மரத்துக்கு மரம் மிளகுக் கொடி போட்டிருந்தும், கிழவியால் முழு விளைவையும் அனுபவிக்க முடிந்த தில்லை. இதெல்லாம் என்ன.......! பாக்கு மரத்திற்கு நடந்ததுதான் பெரிய அநியாயம். பச்சை மரத்திற்குள் பெருங்காயத்தைப் புதைத்து வேரோடு சாய்த்து விட்டாளே...... சண்டாளி!

சிறியாவத்தியை எப்படியாவது தண்டிக்க வேண்டுமெனக் கிழவியின் மனது துடித்தது. இத்தனை நாசவேலையையும் கமுக்கமாகச் செய்து விட்டு, 'ஆச்சி ஆச்சி' என்று முகம் நிறைய அவள் சிரிப்பதைத் தான் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை.

கிழவி முடிவாக நினைத்துக் கொண்டாள். இனிச் சிறியாவத்தியைத் தன் கிணற்றில் தண்ணீர் எடுக்கவிடக் கூடாதென்று. நினைத்தது போலவே படாரென்று கூறியும் விட்டாள்.

"இனிமே தண்ணி எடுக்க வேற எடம் பார்த்துக்கம்மா....... நான் சுத்தபத்தமா வச்சிருக்குற எடத்துல நீ கண்டது கடியதெல்லாம் போட்டுத் தண்ணியெடுக்கிறது எனக்குக் கொஞ்சமும் பிடிக்கல......."

"ஏன் ஆச்சி இப்படிச் சொல்றது.....? போன கெழம நான் தானே கிணறு கழுவினது......!"

சிறியாவத்திக்கு நன்றாகத் தமிழ் தெரியும். தோட்டத்து லொறி டிரைவரைக் கலியாணம் முடித்து, பத்துப் பன்னிரெண்டு வருடமாய்க் குப்பை கொட்டுகிறாள்.

‘‘அது சரி ஆத்தா............. கழுவிற மாதிரிக் கழுவிட்டு, இருக்குற கொஞ்ச நஞ்சப் பயிரையும் நாசமாக்குறியே, அதுதான் பொறுக்கல........’’

சிறியாவத்திக்குக் கொதிப்பு ஏறியது.

“இந்தா......! ஆச்சி யாரப் பார்த்து என்னாப் பேசுறது? இனிப் பாருங்க வெளையாட்ட.....’’ எனக் கூறிக் கொண்டே சிறியாவத்தி போய்விட்டாள்.

எது எப்படிப் போனாலும், இந்தப் பலாப்பழத்தைப் பறிகொடுத்த தைத் தான் கிழவியால் தாங்க முடியவில்லை. தன் பிள்ளைகளும், பேரப் பிள்ளைகளும் எத்தனை விருப்பமாக அதை சுவைத்திருப்பார்கள்?

ஒரு பக்கம் யோசிக்கையில் இப்படி நடந்தது கூட நல்லதுதான் போல... இல்லையென்றால் இந்தத் தள்ளாத வயதிலும் எல்லாவற்றை யும் அள்ளிக்கட்டிக் கொண்டு போய் வந்திருக்க வேண்டுமே........! ஐந்து பெத்தும் அநாதையாய் கிடக்கும் தன் நிலைமையைத் தானே நொந்து கொண்டாள், கிழவி.

தொழில்...... பணம்..... குடும்பம்..... என்று ஆளாளுக்கு ஒவ்வொரு பக்கம் போக, கடைசி நேரம் ஒரு தண்ணி வச்சிக் குடுக்கவாவது....

பெத்தமனம் பித்து, பிள்ளை மனம் கல்லு என்பது உண்மைதான் போலிருக்கு. தான் ஒவ்வொரு பொருளையும் பார்த்துப் பார்த்துப் பிள்ளை களுக்கென சேமிக்கும் போது, அவர்களின் ஏனோதானோவென்ற போக்குக் கிழவியின் மனதை அரித்தெடுத்தது.

‘‘போகட்டும் இந்தக் கட்டை வேகுற வரைக்கும் செய்றத செஞ்சு தானே ஆகணும். எல்லாம் அந்த ஆண்டவன் பாத்துப்பான்.....’’

தனக்குத்தானே ஆறுதல் பட்டுக் கொண்டாள் கிழவி.

அன்று காலை விடிய முன்னமேயே சிறியாவத்தியின் குரல் கேட் டது. சண்டைக்குத்தான் வருகிறாளென்று எண்ணி வேகமாய்க் கத வைத் திறந்தாள் கிழவி.

‘‘இந்தாங்க ஆச்சி...... இன்னைக்கு எங்க வீட்டுல இடியப்பம் அவிச்சது. சொதியும் இருக்கு, சாப்பிடுங்க.’’

அடிக்கடி சிறியாவத்தி இப்படி வருவதுண்டு. ஏதாவது வித்தியாச

மான சாப்பாடு செய்தால் கொஞ்சமாவது கொண்டு வந்து தந்து விடுவாள். கிழவியால் சிறியாவத்தியைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

ஒன்றுமே சொல்லாமல் வாங்கி வைத்துக் கொண்டாள். இது போன்ற சாப்பாடு கிடைத்தால் கிழவிக்கு அமிர்தமாய்த் தெரியும். தானே சமைத்துத் தான் மட்டுமே சாப்பிடும் கொடுமை இருக்கிறதே.......! அதை விட, தண்டனை வேறெதுவுமே இல்லையெனலாம்.

“ஏண்டியம்மா....! நேத்து பேசினத மனசுல வச்சிருக்கிறியா?”

“அதெல்லாம் ஒண்ணுமில்ல ஆச்சி. பக்கத்துலேயே இருக்குறம். எல்லா ஒதவியும் செய்றம். எங்களுக்கு நாலு பருக்க குடுக்கமாட்டது தானே?”

கிழவி மௌனமாய் இருந்தாள்.

“எல்லாத்தையும் புள்ளைகளுக்கே குடுக்கிறதே..... உங்கள உங்க புள்ளைகளா பாக்குறது? இல்லத் தானே.......”

கிழவியின் த்லையில் யாரோ சம்மட்டியால் அடித்தது போலொரு உணர்வு.

வெளியே சொல்லிக் கொள்ள முடியவில்லையென்றாலும், சிறியா வத்தியின் கூற்றில் உண்மை இல்லாமல் இல்லை. கடைசி நேரத்தில் பணம் இருந்தென்ன, சொத்து இருந்தென்ன.....? கடித்துத் தின்னவா அல்லது, கொண்டு போகவா? ஆளாளுக்கு ஒவ்வொரு காரணங்கள். அவர்களிலும் குறையில்லை தான். காலம் அப்படி. தானே தான் தெரிந்து கொள்ள வேண்டும், கூட இருக்கும் அயலவர்களை யாவது பகைக்காமல் இருக்க...

கிழவிக்கு ஏதோ ஒன்று உறைக்கத் தொடங்கியது. சிரித்துக் கொண்டே கிழவி சொன்னாள்.

“எல்லாமே சரிதான். பழத்துல பாதி குடுத்துட்டுச் சாப்பிட்டிருக்க லாமே....?”

சிறியாவத்தி வேறெங்கோ பார்ப்பது போல, தனக்குத்தானே சிரித்துக் கொண்டாள்.

# காற்று மாதம்

அப்போவெல்லாம் அது என்ன மாதமென்று எங்களுக்குத் தெரியாது. ஆனால், வருடத்தில் ஏதோ ஒரு மாதத்தை எங்களுக்குப் பிடிக்கும்.

காற்றென்றால் அப்படியொரு காற்று. மரமெல்லாம் சரிந்து, வாதுகளெல்லாம் முறிந்து..... எங்காவது பயணம் போய்வர, ரொம்பவே ஆசையாய் இருக்கும்.

ஸ்கூல் விட்டும் கூட, எவ்வளவுக்கெவ்வளவு மெதுவாக வர முடியுமோ, அத்தனை மெதுவாக நடந்து வருவோம். சாதாரணமாய்ப் பஸ்சில் இறங்கி ஒரு மணித்தியால தூரம் நடந்தால் தான் எங்கள் வீடுகளுக்கு வர முடியும். வழமைக்கு, எரிச்சலுடன் வேக வேகமாய் நடந்து பழகிய அதே நாங்கள், இந்த மாதத்தில் மட்டும் மாறியே போய்விடுவோம்.

வெள்ளைச் சட்டையெல்லாம் உயர உயரப் பறந்தாலும், எங்களுக்குக் கணக்கே இருக்காது. பாதை முழுதும் வழமைக்கு மாறாய்க் கிடப்பதைப் பார்த்து மனம் பூரித்துப் போகும். தலைமுடியும் குழம்பி அலங்கோலமாக....... என்னவென்று அதை விபரிப்பது!

நாங்கள் மொத்தமாய் ஒரு ஐந்து பேர். அதில் நான் மட்டும் தான் பெண் பிள்ளையாய் இருப்பேன். எல்லோருமாய்ப் பாதை வழியே நடந்து வருகையில், தோட்டத்துத் துரை பங்களா வளவிற்குள் ஒரு உயர்ந்த

மாமரம் தெரியும். அதில் நல்ல பெரிய பெரிய காய்கள். அதுவும் இந்த மாதத்திலேயே காய்ப்பது எங்கள் அதிர்ஷ்டம் தான்.

கோப்பி கொட்டைதான் குறிபார்த்து கல்லெறிந்து காய்களை விழுத்துவதில் கெட்டிக்காரன்!

அவன் பெயர் என்னவோ செல்வகுமார் தான். ஆனால், அவனைக் கோப்பிக் கொட்டையென்று பட்டப் பெயர் வைத்தே நாங்கள் அழைப்பதுண்டு.

அந்தப் பெயர் அவனுக்கு வைக்கப்பட்டதற்கு ஒரு சுவாரசியமான கதையுமுண்டு. ஒருமுறை அவனே எங்களிடம் அதை விபரிக்கப் போய் அநியாயமாய் மாட்டிக் கொண்டான்.

எப்போதோ ஒரு தடவை ஒரு கோப்பிக் கொட்டை அவன் மூக்கிற் குள் போய் விட்டதாம். எல்லோருமாய்ப் பதறியடித்து ஆஸ்பத்திரி வரை போனதும், இவன் தற்செயலாய்த் தும்மியிருக்கிறான். உடனே அந்தக் கோப்பிக் கொட்டையும் விழுந்துவிட, டொக்டர் பலமாகச் சிரித்தாராம்.

அன்றிலிருந்தே அவன் பெயர் கோப்பிக் கொட்டைதான்.

அவனுக்கு மட்டுமல்ல, எங்கள் எல்லோருக்கும் கூட, ஒவ்வொரு பட்டப்பெயர் இல்லாமல் இல்லை. என்றாலும், அதில் எங்களுக்கு வருத்தமும் இல்லை. அதுவே தான் பிடித்தமானதாயும் இருக்கும்.

'டொல்பா', 'கொத்தமல்லி', 'தொர', 'கோப்பிக்கொட்டை' என்றெல்லாம் தான் நாங்கள் ஒருவரையொருவர் விளிப்பது வழமை.

அவ்வப்போது எங்களுக்கிடையில் சிறுசிறு சண்டைகளும் வருவ துண்டு. எது கிடைத்தாலும், சரியாகப் பிரித்துத் தின்பதுதான் எங்கள் எழுதப்படாத சட்டம். சில சமயங்களில் டொல்பா அதை மீறப் பார்த்தால் சண்டை தான்.

'ஞானகத்தா' வாங்கித் தின்பதற்காய் ஒரு தடவை ஐந்தைந்து ரூபாய் சேர்த்து, டொல்பா ஏதோ ஜில்மால் பண்ணிவிட்டான் போல. தொரையுடன் அவனுக்கு ஒரே சண்டை.

பின் எப்படியோ சமரசமாகி எங்கள் குழு வழமைக்குத் திரும்பியது.

நாட்கள் போகப் போக அவர்களில் இருந்து நான் விலகுவதாய் ஒரு எண்ணம். படிப்படியாய் எங்கள் காற்று மாத வீதி அநுபவமும் குறைய....... அடுத்தடுத்த வருடங்களில் மாலை நேரங்களிலேயே ஒன்றாய்க் கூட ஆரம்பித்தோம்.

பழைய பழைய சொப்பிங் பேக், லஞ்ச் சீட் எல்லாம் நூல் கட்டி எடுத்துக் கொண்டு, வெள்ளைமண் சந்திக்குப் போய் விடுவோம். டொல்பா மட்டும் எப்படியாவது ஒரு பட்டம் செய்து கொள்ளுவான்.

காற்று ஹோவென வீசும். வெள்ளைமண் சந்தியில் உள்ள கறுப்பந் தேயிலை மரங்கள் சந்தோஷமாய் ஆடிக் கொண்டிருக்கும். அம்மரக் குலைகள் ஒன்றோடொன்று உரசுகையில் சலசலவெனத் தண்ணீர் ஓடுவதையொத்துச் சத்தம் கேட்கும்.

சரியாய்க் காற்று வீசும் திசைக்கு எதிர்த்திசை நோக்கி நூலை உயரப் பிடித்துக் கொண்டு ஓட வேண்டும். அப்போது சொப்பிங் பேக் காற்றைக் குடித்துக் கொண்டு உயரத்திற்கு மிக உயரத்திற்குப் போய் விடும். எல்லோருமாய்ச் சேர்ந்து ஓ...வென்று சத்தமாய்க் கூச்சலிடுவோம்.

எல்லா வருடங்களிலும் இந்தக் காற்று மாதம் வருமென்பதில் சந்தோஷம் தான். அப்படியே வந்தாலும், அதை ஒற்றையாய் இருந்து அநுபவிக்க எனக்குத் தெரியாது. கூட என் சகாக்கள் எனக்கு கட்டாய மாய் வேண்டும்.

ஒருநாளும் இல்லாத புதுக்கூத்தாய், அம்மா என்னிடம் ஏதோ வெல்லாம் சொன்னாள்.

ஆம்பிளைப் பிள்ளைகளுடன் தொட்டுத் தொட்டுப் பேசக்கூடாதாம். கூச்சம் இல்லாமல் போயிடுமாம். இப்படி இன்னும் நிறைய்......ய.......

அந்த வருடக் காற்று மாதத்தில் எனக்கு விஷப் பரீட்சை. வெளியே போய் ஆம்பளை மாதிரி ஆடக்கூடாதாம். அடங்கி வீட்டோட இருக்க ணுமாம்.

இந்தக் கருமம் பிடிச்ச அறிவுரையில் எனக்குத் துளியேனும் விருப்ப மில்லை, களவாய்ப் போயும் விளையாட எத்தனித்தேன். ''ஒனக்கு இப்பவே ஆம்புள புள்ளகளோட ஆட்டமா.....''ன்னு அம்மா திட்டிவிட்டாள். அந்த வார்த்தைகள் எனக்குப் பிடிக்கவில்லை. என்னவோ போலிருந்தது.

நானாகவே வெளியில் சென்று விளையாடுவதை நிறுத்திக் கொண்டேன்.

என்னை ''வெளாட வரமாட்டியான்னு'' அடிக்கடி கோப்பிக்கொட்டை கேட்பான். நானும் இல்லாத பொல்லாத காரணங்களைச் சொல்லி மழுப்பி விடுவேன்.

ஆனாலும், காற்று மாதங்களில் தனியாகவேனும் உலாவுவதை நான் நிறுத்திக் கொள்ளவில்லை.

என்னையொத்த பொம்பிளைப் பிள்ளைகளெல்லாம், சமைத்து, பிள்ளை வளர்த்து, கொழுந்தெடுத்துக் கொண்டு இருக்கும் போது, அவர்களுடன் எதையென்று விளையாடுவது?

நாளாக ஆக ஆளுக்காள் கலியாணம் முடித்துப் போய் விட்டார்கள். எனக்கும் கலியாணம் பண்ணுனுமாம். வீட்டில் ஒரே அதுதான் பேச்சு.

''இப்பத்தான் எனக்குப் பதினாறு வயது. இப்பவே கல்யாணமா?'' என்றதற்கு,

''ஒனக்கென்ன தெரியும்? நாங்க வயித்துல நெருப்பக் கட்டிக்கிட்டுத் திரியிறோம்....''ன்னு சொல்றாங்க.

போகட்டும். ஏதாவது செய்து தொலைக்கட்டும்னு விட்டுவிட்டேன்.

யாரோ பக்கத்துத் தோட்டக்காரனாம். ஸ்டோர் வேலை செய்யிறவ னாம். பொண்ணு பார்க்க வீட்டுக்கே வந்து, பொண்ண ரொம்பவே பிடிச்சிட்டுதுன்னு செட்டிபிக்கேட் வேற.......

அவன் வலது காலில் இரண்டாவது விரல் சொத்தை நகமாய் இருந்தது. அது மட்டுமே என் ஞாபகத்தில் நிற்க, கல்யாண ஏற்பாடுகள் நடக்கலாயின.

கல்யாணமும்.........

ஒரு புது ஊரில் எனக்குப் புதுப்புது அநுபவங்கள். நான் ஒரு புதுப் பொண்ணாய்......

இரண்டே கிழமைகள் தான். பெரியவர்கள் கூடி ஏதேதோ பேச, என்னை மீண்டும் ஊருக்கே கூட்டிச் செல்கிறார்கள்.

அது ஆடி மாதமாம். தம்பதிகள் சேர்ந்திருக்கக் கூடாதாம்.

எனக்குத் தெரியும். இதுதான் எங்கள் காற்று மாதம் என்று. இப்படியொரு சந்தர்ப்பத்தை நான் எதிர்பார்க்கவே இல்லை.

பழையபடியே தினமும் பலமான காற்று. மரமுறிவுகள்.... பாதை அலங்கோலங்கள்......

என் நண்பர்களுக்கு மறைமுகமாய்த் தூதனுப்புகிறேன். நானும் பழைய சொப்பிங் பேக்குகளைச் சேர்த்துக் கொள்ளுகிறேன்.

சாப்பாட்டு நேரத்திற்குப் பின், அம்மா வேலைக்குக் கிளம்புகிறாள். ஒரு நூல் கட்டையும் தேடிக் கொண்டு, வெள்ளைமண் சந்திக்கு யாருக்கும் தெரியாமல் ஓடுகிறேன்.

# மஞ்சள் நீராட்டல்

"ஏண்டா தொரைக்கு தண்ணி ஊத்தின?"

"அடிக்காதீங்கப்பா இனிமே ஊத்தமாட்டேன்"

"இனிமே என்னடா இனிமே..... ராஸ்கல்!"

சுப்பிரமணி பல்லைக் கடித்துக் கொண்டு மகனை அடிக்கப் பாய்ந்தான்.

"என்னங்க சின்னப்புள்ள ஏதோ தெரியாம பண்ணிட்டான் விடுங்க"

நாராங்கலை மகனை இழுத்துத் தன் மடிக்குள் புதைத்தபடி அவனுக்காய்ப் பரிந்துரைத்தாள். அவளுக்குப் பெயர் லட்சுமி. ஆனாலும் அவள் நாராங்கலை என்ற தோட்டத்திலிருந்து கலியாணம் முடித்து வந்தபடியால் அவளது பெயரும் நாராங்கலையானது.

"எல்லாம் ஒன்னால தான். அவனுக்கு செல்லம் குடுத்து குடுத்து இப்ப எங்க போய் நிக்குதுன்னு பாத்தியா?"

"சரி இப்ப என்னத்துக்குக் குதிக்கிறீங்க.....? தொர வர சொன்னா போய் என்னான்னு கேக்க வேண்டியது தானே"

சுப்பிரமணி தனக்குள் ஏதோ முணுமுணுத்தபடி கொடியில் காய்ந்த சட்டையைப் போட்டுக் கொண்டே துரை பங்களாவிற்குப் போக ஆயத்தமானான். அவனுக்குத் தெரியும் தன் மகன் செய்தது பிழை

யில்லையென்று. இருந்தாலும் பெரிய இடமாயிற்றே! மனம் திக்திக் கென்று அடித்துக் கொண்டது. ஏதேதோ யோசித்தபடியே குறுக்குப் பாதையில் ஏறி நடக்கலானான்.

நேற்றுத் தான் கோயில் திருவிழாவின் கடைசித் தினம். ஊரே சந்தோஷத்தில் திக்குமுக்காடிக் கொண்டிருந்தது. கோயில் ஸ்பீக்கரில் வேறு பெருஞ் சத்தமாய் பாட்டுக்கள் போய்க் கொண்டிருக்க, இரண்டு வருடம் மூடியிருந்த கோயிலை எப்படி எப்படியோ முயற்சித்து, புதுப்பித்துக் கும்பாபிஷேகம் செய்வதென்றால் சும்மாவா.....? கடைசி தினமன்று சட்டிக்கிரகம் எடுத்ததும் மஞ்சள் நீராடுவது வழக்கம். மாமன் மச்சான் உறவுடையவர்கள் ஒருவருக்கொருவர் மஞ்சள் நீர் ஊற்றி விளையாடு வார்கள். இந்தக் கொண்டாட்டத்தின் போது கோபித்தவர்கள் கூடச் சேர்ந்து கொள்ளும் சம்பவங்களுமுண்டு.

அன்றைக்கு யார், யாருக்குத் தண்ணீர் ஊற்றினாலும் எதையும் கதைக்க இயலாது. சுப்பிரமணியும் ஒரு பழைய சட்டையுடன் தான் டவுனுக்குப் போனான். எதிர்பார்த்தது போலவே ஸ்டோர் லயத்துச் சிறுசுகள் எல்லாம் கூடிக் குளிப்பாட்டியே விட்டார்கள். எனவே திரும்பவும் வீட்டுக்கே வரலானான் சுப்பிரமணி.

அன்று தான் யாருமே எதிர்பாராத அந்தச் சம்பவமும் நடந்தி ருக்கிறது.

சுப்பிரமணியின் கடைசி மகன் சங்கர் எல்லோர் மீதும் தண்ணீர் ஊற்றி ஊற்றி விளையாடின்டிருக்கான். கையில் தண்ணீருடன் ரோட்டில் நின்று கொண்டிருந்த போது, அந்த வழியாக வந்த தோட்டத் துரையின் ஜீப்பிற்குள்ளும் ஒரே ஊற்றாய் ஊற்றி விட்டானாம்! அவன் போறாத காலம், ஜீப்பிற்குள் பெரிய கண்டாக்கு வேறு இருந்து தொலைந்திருக்கிறார். துரையை... சரி ஒரு வழியில் சமாளித்து விடலாம். இந்தப் பெரிய கண்டாக்கு இருக்கிறாரே, சரியான மூஞ்சூறு! அவரே கூடத் துரையிடம் மூட்டிவிட்டாலும் விடுவார்.

துரை தன்னை ஏன் கூப்பிட்டனுப்பினார் எனச் சுப்பிரமணியால் தீர்மானித்துக் கொள்ள முடியவில்லை. அவர்களைச் சொல்லியும் குற்றமில்லை. வெள்ளையும் சொள்ளையுமா உடுத்தி எங்கு போனார் களோ..... எதற்குப் போனார்களோ? பங்களா வாசலில் பெரிய

நாயொன்று சங்கிலியால் கட்டப்பட்டு, அந்த நாய் தன்னை விடுவிக்க அங்குமிங்குமாய் திமிறிக் கொண்டிருந்தது. சுப்பிரமணி பின்வாசல் வழியாக மெதுவக உள்ளே நுழைந்தான்.

“சுருக்கா போ..... சுருக்காப் போ...... தொர உள்ளுக்குத் தான் இருக்காரு”

சமையல் செய்து கொண்டிருந்த அப்பு, நக்கலாய்ச் சிரித்தபடியே கூறினான். ஒருவேளை தான் ஏச்சுப்படப் போவதை இவன் எதிர்பார்க் கிறானோ? என்னவோ.....?

“ஐயா கூப்பிட்டு அனுப்பிச்சிங்களாம்.....”

சுப்பிரமணி கையைக் கட்டிக் கொண்டு, சற்றே குனிந்தபடி சுவரோரமாய் நின்றான்.

“ஆ.....! சுப்பிரமணியா...... ஒங்க மவன் செஞ்ச காரியந் தெரியுமா?” துரை அத்தனை கோபமாய் இருக்கவில்லை. சும்மாதான் கேட்டார். சுப்பிரமணி குழைந்து கொண்டே சொன்னான்.

“மன்னிச்சிருங்க தொர, ஏதோ தெரியாம செஞ்சிபுட்டான். செம்மையா ரெண்டு சாத்திட்டுதான் வந்தேனுங்க”

“சரி சரி இனி அடிக்க வானாம். கணக்கபுள்ளட பைல் எல்லாம் நனஞ்சிரிச்சி அதனாலைதான் அவருக்கு மிச்சங் கோவம். ஒங்களுக்கு ரெண்டு நாளைக்கு வேல நிப்பாட்டி இருக்கு. இனி கவனமாக இருக்க செய்யுங்க”

சுப்பிரமணி பதறிப் போனான்.

“ஐயோ சாமி ரெண்டு நாளைக்கு வேல இல்லாட்டி கஷ்டமுங்க. வேணுமுன்னா கணக்கபுள்ளக்கிட்டயும் மன்னிப்பு கேக்குறேன். வேல குடுக்க சொல்லுங்க தொர......”

“இனி ஏதுங் செய்ய முடியாது சுப்பிரமணி. நீங்க போங்க.”

‘நிச்சயமா இது பெரிய கண்டாக்கின் வேலையாய்த் தான் இருக்கும். பாவி மனுஷன். இந்தத் துரைக்கு இருக்கும் இரக்கம் கூடக் கண்டாக்கு பயலுக்கு, இல்லையே. பூசை விழாக்கள் பற்றித் தெரிந்த தமிழனாய் இருந்தும், ஒரு பிஞ்சு குழந்தையை மன்னிக்க முடியாத அரக்கன்.

சண்டாளன்......... சண்டாளன்......' சுப்பிரமணிக்குக் கோபம், வெறுப்பு, ஏமாற்றம் எல்லாம் சேர்ந்து பெரிய கண்டாக்கை நினைக்கவே அருவருப்பாய் இருந்தது. 'முப்பது நாளும் மாஞ்சி பேர் போட்டாலே மாசக்கடைசியில் அஞ்சுக்கும் பத்துக்கும் அல்லாட வேண்டியிருக்கு. இந்த எழவுல ரெண்டு நாளைக்கு வேலையில்லன்னா எப்பிடி.....?' கடுகடுத்தபடியே தன் லயத்தை வந்தடைந்தான்.

இன்னுமே மஞ்சள் நீராட்டம் முடிந்தபாடாயில்லை. வாசலெல்லாம் ஈரம் சொட்டிக் கிடந்தது. எரிச்சலுடனேயே வீட்டுக்குள் கால் வைத்தவனை, யாரோ இருவர் பிடித்துக் கொண்டு அவன் திமிற முன்னமே ஒரு வாளி தண்ணீரால் நனைத்து விட்டார்கள்.

"நேத்துலருந்தே தப்பிச்சுட்டிங்க. இப்ப மாட்டிக்கிட்டீங்கலா.....?" நாரங்கலை யும் விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டிருந்தாள்.

'என்ன மசிரு வெளையாட்டுடா இது நேரங்காலம் தெரியாம.......? மனிசன் நிம்மதியில்லாம அல்லாடுறான். இதுகளுக்கு தண்ணியாம் தண்ணி.' வாயில் வந்த ஊத்தைப் பேச்சை கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டே வீட்டுக்குள் போய்விட்டான் சுப்பிரமணி.

திடீரென்று வெளியே கும்மாளமும் கூத்துமாய் எல்லோரும் சேர்ந்து ஹோ வென சிரிக்கிறார்கள். தொங்கல் வீட்டுப் பாமாவைத் துரத்தித் துரத்தித் தண்ணீர் ஊற்ற முயற்சித்துக் கொண்டிருப்பது தெரிகிறது. அதற் கிடையில் கோடிப் பக்கமும் யாருக்கோ தண்ணீர் ஊற்றிவிட்டார்கள் போல... ஏனோ சுப்பிரமணிக்குக் கோபம் தணிந்து சிரிப்பு வருகிறது. தானும் இந்த விளையாட்டில் கலந்து கொள்ள வேண்டும் போல ஓர் உணர்வு.....

'யாருடா அவன், பைத்தியக்காரன்! வேல நிப்பாட்டிட்டா....... போனா போகுது..... கோடி குடுத்தாலும் இந்த சந்தோஷம் கிடைக்குமா.......?'

சுப்பிரமணியின் மனசு லேசாகிப் போகிறது.

குசினிப் பக்கப் பெரல் தண்ணீரை ஒரு வாளியில் ஏந்தியவனாய்ப் பூனை நடை நடந்து மெதுவாய்...... மெதுவாய்..... போய் அப்படியே நாரங்கலை மீது தண்ணீரை ஊற்ற முயற்சிக்கிறான். நாரங்கலை கத்திக் கொண்டு ஓட, அந்த லயமே ஆரவாரித்துச் சத்தமாய் சிரிக்கிறது.

# அலைகளுடன் ஒரு சிறகு....

கையும் ஓடாமல் காலும் ஓடாமல் ஒரே பதற்றம். என்ன செய்வ தென்று ஒன்றுமே புரியவில்லை. எல்லாம் என் சோம்பேறித் தனத்தால் வந்த வினை. ஏதா வது செய்தாக வேண்டுமே......!

தனராஜ் சேருக்கு ஒரு போன் போடலாமா? அது தான் சரியென்று பட்டது.

என் நேரமோ என்னவோ? அவரது மொபைலின் தொடர்பு துண்டிக்கப்பட்டு விட்டதாம்.

சரி களத்தில் இறங்கியாயிற்று.... இனியென்ன....? விளையாட வேண்டியது தான்.

படிக்க வேண்டிய ரியூட்களை எடுத்து அடுக்குகிறேன். ஆண்ட வனே! இவ்வள வையும் ஒரே நாளில் படித்து என்னவென்று பரீட்சை எழுதிவிட முடியும்.....? பிறகு படிக்கலாம் என்று தள்ளிப் போட்டுத் தள் ளிப் போட்டு எல்லாவற்றையும் ஒன்றாகக் கட்டியழ வேண்டியதா யிற்றே....

ஒரு ஆறு மாதத்திற்கு முதலில் என்றால் அக்கடாவென ஒரு மூலையில் அமர்ந்து விடிய விடியப் படித்திருப்பேன். நல்ல மார்க்கும் வாங்கியிருப்பேன். யாரை யென்று குற்றம் சொல்வது? வயது எனக்குச் சதி செய்து திருமண வலைக்குள் சிக்க வைத்துவிட்டது. முயற்சித்தா

லும் புறந்தள்ள முடியாமல் சில பொறுப்புக் கள் மாணவியென்ற உணர்வை மறைக்கும் மனைவியின் கடமைகள்.....

கடிகார முகத்தைப் பார்க்கிறேன். மணி நான்கைக் காட்டப் பதற்றம் என்னைப் பற்றிக் கொள்கிறது. எப்படி முயற்சித்தும் பாடம் மனதில் பதிவ தாயில்லை. கட்டாயமாய் வாசித்தும் கூட முடியவேயில்லை. மேலோட் டமாய் ஒரு தடவை தட்டிப் பார்க்கலாம் என்றால் பாடத்தின் கட்டாயக் கேள்விகள் பயமுறுத் தும் விதமாக......

மணி ஆறாகப் போகிறது. வீடு பெருக்க வேண்டும். விளக்கு வைக்க வேண்டும். சாப்பாடு.... கடவுளே! தேங்காய் வேறு வாங்க வேண்டுமே! இந்தப் பதற்றத்தில் மறந்தே போயிருக்கிறேன். அவசர அவசரமாய்க் கடைக்கு ஓடி.... சாமான் வாங்கி.... சமையல் செய்து அப்பாடா....! நான் கெட்டிக்காரி தான். எட்டு மணிக்குள் எல்லாம் முடிந்தாயிற்றே..... அவர் வர இன்னும் ஒரு மணி நேரமாவது ஆகும். அதற்குள் கொஞ்சம் படித்து விடலாமே.

''தாலி கட்டிக்கிட்டா படிக்கேலாதுன்னு யாரு சொன்னது....?''

அம்மாவின் கம்பீரக் குரல் ஞாபகத்திற்கு வந்து வந்து போவதைத் தவிர்க்க இயலாமல் போயிற்று. ஒருவேளை அவளுக்கு இந்த அனுபவம் இல்லையென்ப தால் சொல்லியிருப்பாளோ?

வெளியில் இருந்து பார்க்கும் போது எல்லாமே சாதாரணமாய்த்தான் தெரிகிறது. ஒவ்வொன்றையும் அனுபவிக்கையில் தான் ஆயிரம் சிக்கல்களும் மன உளைச்சல்களும்.

நேரம் தெரியாமல் டெலிபோன் வேறு அலறித் தொலைக்கிறது.

''ஹலோ.....''

''நான் தானம்மா......... இடையில் வந்துட்டு இருக்கேன்.........''

என் அண்ணனின் குரல். உள்ளம் ஆனந்தக் கூத்தாடுகிறது. ஆனாலும்.... இன்றுதானா அவர் வர வேண்டும்?

என்னைச் சுதாகரித்துக் கொண்டு தொடர்கிறேன்.

''சரிண்ணா என்ன செய்து வைக்கணும்?''

''ஏதாவது....... பயங்கரப் பசியில இருக்கேன்''

விசேஷமாய் ஏதேனும் செய்தாக வேண்டுமே.....! பாடங்களையும் பயத்தையும் ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்ட நான் மீண்டும் சமையலில்....

என்னையறியாமல் என் கைகளில் நடுக்கம். திடீர் திடீரென வியர்வை வேறு...... நாளை பரீட்சையில் என்ன செய்யப் போகிறேனோ என்ற பதற்றம். ஒவ்வொரு முறையும் முதலாவதாய் வர எண்ணும் நான் இந்தத் தடவை தோற்று விடுவேன் என்ற பயம். என் மேற்படிப்புப் பாதியில் நின்று விடுமோ என்ற அவஸ்தை.

யாரிடமும் வெளிக்காட்டவும் முடியவில்லை. ''சும்மா இருக்கும் போது படிக்க வேண்டியது தானே.....?'' எனும் ஒற்றை வார்த்தையில் என் உணர்வுகளின் அர்த் தம் சிதறிப் போய்விடுகிறது.

வீடு, படிப்பு, தொழில் என்று மூன்றையும் ஒன்றாகப் போட்டுச் சொதப்பி விடுவேனோ...? ஒரே நேரத்தில் எல்லாம் செய்வது யதார்த்தத்திற்கு முரண்பாடான விடயம் தான் போல.... போகட்டும். முயற்சிக்க வேண்டியது தான்.

வித்தியாசமாய் எல்லாம் செய்தால் என்னவென்று தோன்றுகிறது. தோசையைப் போடும் போது ஒரு நன்னூல் சூத்திரமும், மறுபக்கம் திரும்பும் போது ஒரு விளக்கமுமாய்த் தோசைகளுடன் பாடமும் சேர்ந்தே விறுவிறுப்பாக வேலை நடக்கிறது. பாத்திரம் கழுவுகையில் பாதி வினாக்களுக்கு விடை தேடியபடியே...... அழுத்தித் தேய்த்துத் பாத்திரத்தையும் மினுக்கியாயிற்று.

இது கூட நல்லதொரு வழியாய்த்தான் படுகிறது. கேட் திறக்கப்படும் சத்தம், அண்ணாவும் அவரும் சேர்ந்தே வருகிறார்கள்.

வீட்டுக் கதை, ஊர்க் கதை, பக்கத்து வீட்டுப் பாட்டியம்மாவின் ஊத்தைப் பேச்சுக் கதையென்று அண்ணா சுவாரசியமாகக் கதை சொல்கிறான். என் கணவருக்கும் சோப், டவல், தண்ணீர் என்று என்

வேலைகள் தொடர்ந்தபடியே....... மனதிற்குள் ஞம் ஒரு திரை ஓடியபடியே......

அண்ணனுக்கு என்னில் ஏதோ வித்தியாசம் தெரிந்திருக்க வேண்டும்.

“நீ சந்தோஷமா இல்லையே.....?”

“இல்ல..... நாளைக்கு எக்ஸாம்.....?”

என்னைப் படிக்கச் சொல்லிவிட்டு மச்சானும் மச்சானுமாய்த் தொடர்கிறார்கள்.

எல்லாம் ஒதுக்கிக் கழுவிப் படுக்கை விரித்துப் பெருமூச்சு விடும் போது அப்படியிப்படியென்று மணி பதினொான்று. இன்னும் ஏழு மணி நேரமாவது இல்லையே. தலை சுற்றுகிறது. இனி எப்படிப் படிப்பது? உடற் சோர்வு, உள்ளப் பயம். கூடவே தூக்கத்தின் வரவு. ஒண்ணுமே புரியவில்லை. முடியாமலும் படிக்க எத்தனிக்கி றேன் அழுகை முட்டிக் கொண்டு வருகிறது.

வழமை போலவே என் கணவர் ரூமிற்குள் வருகிறார். என் கண்ணீரைக் கண்டிருக்க வேண்டும். காரணம் கேட்கிறார். “எக் ஸாம்” என்கிறேன்.

“சோ வட்...?”

என் பயமும் தவிப்பும் அவருக்குப் புரிய வாய்ப்பில்லைத் தானே?

“டேக் இட் ஈஸி” என்கிறார்.

நான் திறமைசாலியாம். என்னால் முடியுமென்று ஆறுதல் சொல்கிறார். என்னைப் படிக்கச் சொல்லிவிட்டுக் கட்டிலில் சரிகிறார்.

எனக்கு ஓ.....வென்று கத்தியழ வேண்டும் போல் தோன்றுகிறது. அடக்கிக் கொள்கிறேன்..... ஏதோ ஒரு விதமான வெறி என்னை அசாதாரணமாக நடத்துகிறது. அழுது கொண்டே படிக்கிறேன். நின்றபடி.... நடந்தபடி.... அமர்ந்த படி.... கால்கள் நீட்டி..... மடக்கி

எப்படியெல்லாமோ.... என்னால் முடியவில்லை. என்னையறியாமலேயே கண்கள் மூட விளைகின்றன. எனக்குள் ஒருவித சலிப்பு. படிப்பென்ன படிப்பு? மண்ணாங்கட்டி. என் கணவர் புரண்டு புரண்டு விதம் விதமாகத் தூங்குவதைச் சகிக்க முடியாத என் தூக்க உணர்வு என்னை உந்துகிறது.

புத்தகத்தை ஒரு புறம் போடுகிறேன். என் பயத்தையும் மூட்டை கட்டிவிட்டு லைட்டை அணைக்கிறேன்.

என் கணவரின் மார்பிற்குள் சுருண்டு படுக்க எத்தனிக்கையில், தூக்கத்துட னேயே அவர் என்னை அணைத்துக் கொள்கிறார்.

நிச்சயமாய் எனக்குத் தெரியும். இன்று ஒரு கனவு வரும், அதில் நான் முதல் மாணவியாய்ப் பாராட்டப்பட்டுக் கொண்டிருப்பேன்.

# குளியல்

"**டோ**பி கானுக்கு குளிக்கப் போனாலென்ன....?"

"ரொம்ப தூரமே.....?"

"நிம்மதியா குளிக்கலாமில்ல....."

"என்னவோ போ.... ஒலகத்துலயே நீ மட்டுந்தான் குளிக்கிற மாதிரி......."

லலிதா சலித்துக் கொண்டாள். நான் மௌனமாகச் சிரித்துக் கொண்டேன்.

எனக்குத் தெரியும். என் உணர்வுகளை அவளுக்குப் புரிய வைக்க முடியா தென்று. ஐந்து நிமிட நேரக் காக்கைக் குளியல்காரி அவள்.

அவள் சொன்னது போல் உலகத்தில் எல்லோருமே குளிப்பதென் னவோ உண்மையாயிருக்கலாம். ஆனால் எப்படி அந்தக் குளியல் நடக்கிறது என்பது தான் விஷேசமே........!

கடமையே என்று சிலரும், அழுக்காய் இருக்க ஒப்பாத மனதுடன் சிலருமாய் ஆளுக்காள் ஆயிரம் காரணங்களுடன் தான் குளிக்கி றார்கள்.

கடமையே என்று சிலரும், அழுக்காய் இருக்க ஒவ்வாத மனதுடன்

சிலருமாய் ஆளுக்காள் ஆயிரம் காரணங்களுடன் தான் குளிக்கி றார்கள்.

எனக்கென்றால் அப்படி முடியவில்லை. குளிப்பது ஒரு தவம் செய் வதைப் போல நின்று நிதானித்து அமைதியாய்ச் செய்ய வேண்டிய ஒன்று.

எமக்குச் சந்தோஷம் தரும் உணர்வுகளுள் குளியல் தரும் புத்துணர்விற்கு தான் ஆயிரம் மார்க் போடலாம்.

ஆறாகட்டும், பீலியாகட்டும், கிணறாகட்டும் குளியல் அறையாய்க் கூட ஆகி விட்டுப் போகட்டும் எதுவானாலும் தண்ணீரில் தானே குளிக்கப் போகிறோம்.

சில்லென்று உச்சந்தலையில் இறங்கி அப்படியே முகத்தில் வழிந்து உடலெல்லாம் பரவி..... மேனியின் ஒவ்வொரு பாகத்தையும் கூசாமல் தொட்டுவிட் டுக் கால்களின் வழியே போய்விடும் அந்த நீரை விட நம்முடன் நெருக்கமாய் வேறு யார்தான் இருந்துவிட முடியும்?

ஒவ்வொருவரும் வகைவகையாய்க் குளிக்கிறார்கள்.

கிணற்றடியில் போய் உட்கார்ந்தால் சிலநேரம் வேடிக்கையாகக் கூட இருக்கும்.

யோகேசக்கா வேலை விட்டதும் நேரே கிணற்றடிக்குத் தான் வருவாள். தலைவேட்டியையும் இடுப்பில் கட்டியிருக்கும் ரப்பர் சீட்டையும் அவசர அவசரமாய்க் கழட்டி மரத்தடியில் வைத்துவிட்டு, கட்டியிருந்த பாவாடையை உயர்த்தி மாரளவில் கட்டிக் கொண்டு வேகவேகமாய் நீரை அள்ளி ஊற்றிக் கொள்வாள். பித்த வெடிப்பு முற்றிப் போய் வரண்டு பிளந்து கிடக்கும் கால், பின் பாதத்தை ஒரு பெரிய கல்லில் வரட்டு வரட்டென்று தேய்த்துக் கொண்டு வாயில் 'ஸ்ஸூ..... ஸ்ஸூ......' எனச் சத்தமிட்டபடியே தண்ணீரை ஊற்றிக் கொள்வாள்.

ஒருவேளை தேயிலை மலையின் உராய்வுகளும், சிராய்ப்புக்களும் மேனியில் நீர்பட்டதும் எரிகிறதோ.... என்னவோ.....!

கேட்கத் தோன்றும் என்றாலும் நான் இதுவரை அதுபற்றி அவளிடம் கேட்டதில்லை.

மேல்வீட்டு பிலாக்கொல அக்காவின் குளியல் தான் எனக்கு விசித்திரமாய் இருந்தது.

விழும் ஊற்று நீரில் குனிந்து கொண்டே, தலையை மட்டும் ஒரு ஐந்து நிமிட நேரமாவது கழுவிக் கொண்டே இருப்பாள். இறுதியாய் ஓர் இரண்டு வாளி தண்ணீரை உடம்பில் ஊற்றிக் கொண்டு குளியலை முடித்து விடுவாள்.

மணிவேல் சவற்காரம் என்ற நாமத்தையே பாவிக்காத சாணிப் பிணம். செங்கல்லைத் தட்டி அந்தத் தூளில் பல்தேய்த்தபடியே குளிப்பான்.

அடுத்தவர் குளியலை இரசிப்பது அத்தனை நல்லதல்லத் தான். எனினும் கூட...... எந்நேரமும் கிணற்றடியில் இருப்பதால் எனக்கு முனியடித்து விட்டதாய்ச் சிலருக்கு சந்தேகம்.

எனக்கு விளங்காமல் சொல்லிக் கொள்வார்கள்.

ஒரு முறை சூரியன் மறையும் அந்திப் பொழுதில் கிணற்றடியில் கிடக்கும் பெரிய பாறையில் காலைக் கீழே தொங்கவிட்டபடி அமர்ந்து கொண்டேன்.

மேலே பார்க்கத் தோன்றியது. வானம் நிஷப்தமாய்..... பாக்கு மரம் காற்றில் லேசாய் அசைந்தபடி........ ஊற்றுத் தண்ணீர் தரையில் விழும் தொடரொலி.

கிறங்கிப் போனேன். அப்படியே படுத்துக் கொண்டு பார்த்தேன்.

நான் மிகச் சிறியவளாய்...... வானமும் உலகமும் பிரமாண்டமாய்.... மெதுவாகப் பாரதியார் கவிதையொன்றை முணுமுணுக்கிறேன்.

யாரோ என் ரம்மியமான அந்தச் சூழலை இரைச்சல் போட்டுக் குழப் புவதாய் பட்டது. அம்மா தும்புத்தடிக் கம்புடன் நின்று கொண்டிருந்தாள்.

''எம்புள்ளைய விட்டு போயிரு... எம்புள்ளய விட்டு போயிரு...'' என்ற படியே தும்புத்தடியால் தலையில் 'ஞக்கு ஞக்'கென்று நாலு போடு போட்டாள்.

அழுகையும் சிரிப்பும் சேர்ந்து வந்தது.

அம்மாவை முறைத்து விட்டுப் போய் விட்டேன்.

எல்லாமே ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் தானோ......

ஒருநாள் அப்படிதான் தனியாக குளிக்க வந்திருந்தேன். யாருமே இல்லாமல் கிணற்றடி அழகாய் மௌனமாய் இருந்தது. கிணற்றில் நீர் நிறைந்து வழிந்தது. குனியாமலேயே அள்ளிக் குளிக்கலாம்.

பெரிய சந்தோசம் எனக்கு. அவசரமாய் ஆடை களைந்து, ஒரு கறுப்பு நிற ஒற்றைப் பாவாடையில் மேனி மூடி என் களைப்பெல்லாம் வழிந்தோட நீரை அள்ளி அள்ளிக் கண்கள் மூடித் தலையில் ஊற்றிப் பரவசப்படுகிறேன்....!

சுற்றியும் மரங்கள்....! அதுவொரு அழகான வெளி. யாரென்றாலும் அங்கு வரலாம், போகலாம். குளிப்பதைப் பார்க்கலாம். ஆனால் அது எங்களுக்குக் கணக்கில்லை. வெட்டவெளியில் ஆண்களும் பெண்களுமாய் அடித்துப் பிடித்துக் கொண்டு குளிப்பதில் கொஞ்சம் சந்தோஷமும் கிடைக்கிறது. மறைவாய் குளித்துத் தான் எங்களுக்குப் பழக்கமில்லை.

குளித்து முடித்து உடைமாற்றும் பொழுதுதான் எங்களை மறைக்கச் சில நேரங்களில் தடுமாறுவோம். என்றாலும் இப்பொழுது எல்லாமே பழகியாயிற்று.

என் குளியல் நீண்ட நேரமாய் நடக்கிறது. சோப் போட்டுத் தேய்த்து, கால்கள் உரசி, நக இடுக்கின் அழுக்கை அகற்றி....

சாவகாசமாய் அமைதியாய்க் குளித்து முடித்துத் துவட்டுகிறேன்.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை யாரும் வருவதாய்த் தென்படவில்லை. பய மின்றி என்னை ஒளிக்காமல் ஒவ்வொரு ஆடையாய்ப் போட்டு முடித்து தலையில் கட்டியிருந்த டவலை அவிழ்த்தபடி தற்செயலாய் மேலே பார்க்கிறேன்.

ஒரு நிமிடம் மூர்ச்சையாகிப் போனது என் உணர்வுகள்.

கள்ளு மரத்தில் இருந்து என்னைப் பார்த்து சிரித்தபடியே, ராசு பயல், இறங்குகிறான்.

ஆக....... இவ்வளவு நேரமும்.......!!

எனக்கு பயங்கரக் கோப வெறி.......

என்னால் என்ன செய்து விட முடியும்? உடல் கூசிப் போகிறது. தலை குனிந்து கொள்கிறேன்.

நான் எப்படியெல்லாம் குளித்தேனென்று ஒரு தடவை மீட்டிப் பார்க்கையில் என்னால் சகிக்கவே முடியவில்லை.

கோபம் அழுகையாய் வெடிக்கிறது. அண்ணாவிடம் சொன்னால் சண்டை வருமென்று பயந்து அமைதியாகி விட்டேன்.

அதுதான் நான் சந்தோஷமாய் நிம்மதியாய் குளித்த கடைசிக் குளியல்.

நீண்ட நாட்களுக்குப் பின் அப்படியொரு ஆனந்தக் குளியலுக்கு மனசு ஏங்குகிறது.

டோபி கானில் தான் இந்நேரத்திற்கு யாரும் இருக்கமாட்டார்கள். லலிதாவின் பதிலை எதிர்பாராமல் டோபிகானை நோக்கி வேகமாய் ஓடுகிறேன்.

# சுங்கா

அப்போதென்றால் எனக்கும் கூடச் சுங்காவென்றால் என்னவென்று தெரியாது. ஆனால், எல்லோருமே அடிக்கடி அந்தப் பெயரைப் பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

அதுவொரு வித்தியாசமான விளையாட்டு. அந்த விளையாட்டுக்குக் கஜு பாய்தல் என்று பெயர். நான் நினைக்கவேயில்லை, அந்த விளையாட்டுக்குள் இத்தகையதோர் இன்பம் இருக்குமென்று. எங்களுக் கேற்றாற் போலவே, அந்த மைதானத்தின் இரு தொங்கலிலும் எதிர் எதிர் திசையில் இரண்டு பெரிய மரங்கள். இரு குழுக்களாகப் பிரிந்து ஒரு மரத்தைத் தளமாகக் கொள்வோம். நானென்றால் புஷ்பராணி பக்கம் போவதற்குத் தான் விருப்பம். விளையாட்டு ஆரம்பிப்பதற்கு முன்னமேயே நான் ரகசியமாய்ச் சொல்லிவிடுவேன். குழு பிரிக்கும் போது "முதலாவதாய்ச் சொல்லும் பெயர் நானாக இருப்பேன் என்னைக் கேட்டு எடு" என்று.

ஒரு தடவை இதை எப்படியோ கோகில் கண்டு பிடித்துவிட்டான். வழமை போலவே நானும் பொன்னியும் தான் பிரிந்தோம். நான் மல்லிகைப் பூ, பொன்னி கனகாம்பரப் பூ.

"உத்தி...... உத்தி"

கோகில் தான் "தோல்...... தோல்....." என்றான்.

‘‘மல்லிகைப் பூ வேணுமா? கனகாம்பரப் பூ வேணுமா?’’

கதைத்து வைத்தது போலவே, மல்லிகைப் பூவை முதலாவதாய்ச் சொல்லி புஷ்பராணியின் முகத்தைப் பார்த்தேன். டக்கென்று கோகில் முந்திக் கொண்டு மல்லிகைப்பூவைக் கேட்டுவிட்டான். அப்புறம் என்ன.....? எங்கள் திருட்டுத் தனமும் அம்பலமாகிப் போயிற்று.

விளையாட்டின் படி, ஒரு குழுவில் இருந்து மரத்தைத் தொட்டு விட்டு வருபவர் மற்றக் குழுவில் இருந்து வருபவரை அடித்து அவுட் ஆக்கலாம். அதே நேரம், அடிபடும் அணியில் இன்னொருவர் மரத்தைத் தொட்டு விட்டு வந்து மற்ற அணியிலிருந்து வருபவரை அடிக்க முடியும். இப்படி மாறி மாறி அடித்து, அடுத்த அணியின் மரத்தைத் தெரியாமல் தொட்டுவிட்டால் ஜெயம் தான். இங்கே தான், சுங்காவும் உருவாகிறான்.

இரு அணிகளுக்கும் சம எண்ணிக்கையான ஆட்கள் தேவை தானே.....? சில நேரங்களில் ஓர் ஆள் குறைந்து விடும். அப்போது குறையும் அந்த ஆளிற்குப் பதிலாக மரத்தடியில் ஒரு கம்பை ஒடித்து வைத்து விடுவோம். அது ஒரு ஆளிற்குச் சமன். அந்தக் கம்பின் பெயர் தான் சுங்கா. முதலாவதாய் அவுட்டாகும் நபர் சுங்காவிற்குப் பதிலாகக் கம்பை வீசிவிட்டு விளையாடலாம். அதற்குப் பின்னென்றால் சுங்காவை யாருமே மதிப்பதில்லை.

அது என்ன கருமமோ ஒவ்வொரு தடவை விளையாடும் போதும் சுங்கா கட்டாயம் இடம்பிடித்து விடுகிறது. புஷ்பராணி பலே கெட்டிக்காரி! அப்படியிப்படி என்று எல்லோருக்கும் தண்ணி காட்டிவிட்டு, எப்படியாவது மரத்தைத் தொட்டுவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பாள்.

சுங்கா விளையாட்டில் இருந்ததென்றால் எந்தச் சாமர்த்தியமும் வேலைக்குதவாது. மரத்தடியில் ஆள் இருந்தால், ஏமாற்றி மரத்தைத் தொட்டு விடலாம். சுங்கா இருந்தால்......!

இன்றும் சுங்காவுடன் தான் விளையாட்டை ஆரம்பித்தோம். சீனாப்பயல் தொடர்ந்து மூன்று நாட்களாய் விளையாட வரவில்லை. அவனது அம்மா வெளிநாட்டில் இருந்து வந்திருக்கிறாளாம். பாவம்...... அவ்னைச் சொல்லியும் குற்றமில்லை. பிறந்ததிலிருந்தே தாயன்பைத் தொலைவில் தேடும் அபாக்கியசாலி அவன்.

எனக்குத் தெரிந்தவரையில் அவனது அம்மா மூன்று வருடத்திற்கு ஒருமுறை தான் வருவாள். வந்தாலும் ஒரு மாதத்திற்கு மேல் தங்குவதே இல்லை. என்னாலென்றால் அம்மாவின்றி இருக்க முடியாது. அம்மாதான் தலை சீவுவாள்..... பேன் பார்ப்பாள், பழையசோறை கறிதாச்சியில் பிரட்டி, உருண்டை பிடித்து உள்ளங்கையில் தருவாள்.

அந்த வகையில் சீனாப்பயல் உண்மையிலேயே பாவம்தான். ஒரு தடவை சீனாப்பயலிடம் எரிச்சலுடன் கேட்டேன்.

"ஏன்டா! உங்கம்மா எப்ப வருவாங்க.....?"

"ச்சு....." என்றான்.

நான் அவனைப் பார்க்காமல் கல்லங்கா ஆடிக் கொண்டிருந்தேன். நான் தூக்கிப் போடும் கற்களைப் பார்த்தபடி அவனாகவே தொடர்ந்தான்.

"அடுத்த மாசம் வருவாங்களாம்"

"நீதான் வளர்ந்திட்டியே.....! இனிப் போகவேணான்னு சொல்லு....."

"அது முடியாது"

"ஏன் முடியாது?"

அவனுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. கண்களைக் கசக்கியபடி குனிந்துக் கொண்டான்.

எனக்குப் பாவமாகப் போய்விட்டது. என் சட்டையால் அவன் கண்களைத் துடைத்தபடியே மீண்டும் கேட்டேன்.

"ஏன்டா முடியாது.....?"

"எங்கப்பா திரும்பத் திரும்ப அனுப்புறாருடி....."

எங்கள் வீட்டிலும் இந்தக் கதை அடிபட்டதாய் ஞாபகம். அம்மா என்னை வாய் பார்க்க வேண்டாமென்று ஏசி அனுப்பியதால், மிச்சக் கதை தெரியவில்லை.

ஏதோ சீனாப் பயலின் அப்பா சரியில்லையாம். நிறையப் பொம்பிளைகளது தொடர்பு இருக்காம். இப்போது வேலைக்கும் போகாமல் ஒரே குடியாம், என்றெல்லாம் ஏதேதோ கதைகள்.

இதையெல்லாம் சீனாவிடம் கேட்க ஏதோ மாதிரி இருந்தது. தெரியாதது போலவே கேட்டேன்.

"அது தான் வீடு கட்டிட்டீங்களே.... இனியென்ன.....?"

"எனக்குத் தெரியலடி..... ஆனா அம்மா பாவம்னு மட்டும் தெரியுது"

அதற்குப் பிறகு நானும் சீனாவும் இந்த விடயம் பற்றிப் பேசிக் கொண்டதேயில்லை. அவனாக எதுவும் சொன்னதுமில்லை.

சீனாவின் அம்மாவை அழகென்று சொல்லிவிட முடியாது. கட்டையாய்க் குண்டாய் இருப்பாள். நிறமும் எடுப்பாக இல்லை. கறுப்பென்றால் அப்படியொரு கறுப்பு. ஆனாலும் அவளது சிரிப்பு இருக்கிறதே......! கோடி ரூபா கொடுக்கலாம். வாய் நிறையச் சிரித்து எல்லோரையும் வரவேற்பாள்.

கலியாணம் முடித்து ஒருவருடம் தானாம். சீனா பிறந்தவுடன் வெளிநாடு போக ஆரம்பித்தவள். பத்துப் பன்னிரண்டு வருடங்களாய் முடிவில்லாமல் உழைக்கிறாள். சீனாவின் அப்பாவையும் குறை சொல்ல முடியாது. வீட்டைத் திருத்தி, நல்ல வடிவாய் யன்னல் எல்லாம் கூடப் போட்டு...... வீடு நல்லாய்த்தான் இருக்கு. போதாக்குறைக்கு ப்ரிட்ஜ், போன், பேன் என்று வசதிகள் வேறு. என்னதான் பைப் போட்டு வீட்டிற்குள்ளேயே தண்ணீர் எடுத்தாலும், சீனா எங்களுடன் தான் டோபி கானுக்குக் குளிக்க வருவான்.

இந்த ஒரு கிழமையாய் அவன் குளிக்க வரவுமில்லை, விளையாட வரவும் இல்லை. அவனைப் பார்க்க வேண்டும் போலவே இருந்தது. பொன்னிப் புள்ளையையும் கூட்டிக் கொண்டு அந்தப் பக்கமாகப் போனேன்.

சீனா வீடு மூடித்தான் இருந்தது. எங்கே போய்விடப் போகிறான்! குசினிப் பக்கமாகப் போனோம், உள்ளே பெரிய சண்டை போல, ஒரே சத்தமாக இருந்தது.

நானும் பொன்னியும் வாசற்படியிலேயே உட்கார்ந்து கொண்டோம்.

"இன்னும் ஒரே ஒரு தடவை போனால் போதும். நம்ம கடனெல்லாம் அடச்சிறலாம்"

“வேணாங்க......... இனி நான் போறதா இல்ல”

“ஏண்டி! ஒருக்கா சொன்னா கேட்கமாட்ட......?”

“முடியாது...... முடியாது...... முடியாது...... என் புள்ளய தனியா விட இனியும் முடியாது......”

டமார் என்று ஏதோ விழும் சத்தம் கேட்கிறது.

‘‘புள்ள நல்லா இருக்கனுன்னா, நீ திரும்பவும் போகத்தான் வேணும்’’

சீனாவின் அப்பா கறார் குரலில் சொல்கிறார்.

‘‘தெரியுமே.....! நான் இல்லாட்டி உங்களுக்கு வசதி..... அப்படிதானே?’’

சீனாவின் அம்மா தலையில் அடித்துக் கொண்டு அழுவது கேட்கிறது. இனியும் சீனாப்பயலைப் பார்க்க வேண்டுமென்று எனக்குத் தோன்றவில்லை. வந்த வழியே திரும்பி மீண்டும் விளையாடப் போகிறோம்.

அங்கே சீனாப் பயல் கஜூ விளையாடுவதற்காய் அணி பிரித்துக் கொண்டிருந்தான்.

“அடேய்! நீ இங்க இருக்கியா....? நாங்க உன்ன தேடி.....”

நான் சொல்லி முடிக்க முன்னமேயே அவன் இடைமறித்து......

“ஆ.... வந்துட்டியா? அடேய் இனி சுங்கா தேவப்படதுடா” என்றபடி அந்தக் கம்பைத் தூரமாக வீச எத்தனிக்கிறான்.

(அமரர் **செம்பியன் செல்வன்**-
ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டியில்
ஆறுதல் பரிசு பெற்ற கதை- 2007)

## மல்லிகைப் பந்தல் வெளியிட்டுள்ள நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம் : டொமினிக் ஜீவாவின் வாழ்க்கை வரலாறு (இரண்டாம் பதிப்பு) | 250/= |
| 2. | எழுதப்பட்ட அத்தியாயங்கள் : சாந்தன் | 140/= |
| 3. | கார்ட்டூன் ஓவிய உலகில் நான் : சிரித்திரன் சுந்தர் | 175/= |
| 4. | மண்ணின் மலர்கள் (13 யாழ் - பல்கலைக்கழக மாணவ - மாணவியரது சிறுகதைகள்) | 110/= |
| 5. | கிழக்கிலங்கைக் கிராமியம் (கட்டுரை) : ரமீஸ் அப்துல்லாஹ் | 100/= |
| 6. | முப்பெரும் தலைநகரங்களில் 30 நாட்கள் : டொமினிக் ஜீவா(பிரயாணக் கட்டுரை) | 110/= |
| 7. | முனியப்பதாசன் கதைகள் (சிறுகதை) : முனியப்பதாசன் | 150/= |
| 8. | ஈழத்திலிருந்து ஓர் இலக்கியக் குரல் : டொமினிக் ஜீவா | 135/= |
| 9. | இப்படியும் ஒருவன் (சிறுகதை) : மா. பாலசிங்கம் | 150/= |
| 10. | அட்டைப் படங்க | 175/= |
| 11. | சேலை(சிறுகதை)முல்லையூரான் | 150/= |
| 12. | மல்லிகை சிறுகதைகள் : செங்கை ஆழியான் ((முதலாம் தொகுதி) | 275/= |
| 13. | மல்லிகைச் சிறுகதைகள் (இரண்டாம் தொகுதி) : செங்கை ஆழியான் | 350/= |
| 14. | நிலக்கிளி (நாவல்) : பாலமனோகரன் | 140/= |
| 15. | அநுபவ முத்திரைகள் : டொமினிக் ஜீவா | 180/= |
| 16. | நெஞ்சில் நிலைத்திருக்கும் சில இதழ்கள் | 150/= |
| 17 | டொமினிக் ஜீவா கருத்துக் கோவை (கட்டுரை) | 80/= |
| 18. | பட்டம் மறுதலிப்பும் பல்வேறு சர்ச்சைகளும் (கட்டுரை) | 100/= |
| 19. | முன்னுரைகள் சில பதிப்புரைகள் : டொமினிக் ஜீவா | 120/= |
| 20. | தரை மீன்கள் (சிறுகதை) : ச. முருகானந்தன் | 150/= |
| 21. | கூடில்லாத நத்தைகளும் ஓடில்லாத ஆமைகளும் (சிறுகதைகள்): செங்கை ஆழியான் | 175/= |
| 22. | நாம் பயணித்த புகைவண்டி (சிறுகதை) : ப.ஆப்டீன் | 150/= |
| 23. | அப்புறமென்ன (கவிதை) : குறிஞ்சி இளந்தென்றல் | 120/= |
| 24. | 90களில் மல்லிகைச் சிறுகதைகள் : மல்லிகாதேவி நாராயணன் | 125/= |
| 25. | ஒரு டாக்டரின் டயரியில் இருந்து.... : டாக்டர் எம். கே. முருகானந்தன் | 140/= |
| 26. | சிங்களச் சிறுகதைகள் - 25 : தொகுத்தவர் செங்கை ஆழியான் | 150/= |
| 27. | டொமினிக் ஜீவா சிறுகதைகள் - 50 இரண்டாம் பதிப்பு | 350/= |
| 28. | Undrawn Portrait for Unwritten Poetry - டொமினிக் ஜீவா சுயவரலாறு (ஆங்கிலம்) | 200/= |
| 29. | தலைப் பூக்கள் (மல்லிகைத் தலையங்கள்) | 120/= |
| 30. | அச்சுத்தாளின் ஊடாக ஓர் அநுபவப் பயணம் | 200/= |
| 31. | மல்லிகை ஜீவா மனப் பதிவுகள் - திக்குவல்லை கமால் | 150/= |
| 32. | மல்லிகை முகங்கள் : டொமினிக் ஜீவா | 150/= |
| 33. | பத்ரே பிரசூத்திய - சிங்களச் சிறுகதைகள் - டொமினிக் ஜீவா | 120/= |
| 34. | எங்கள் நினைவுகளில் கைலாசபதி : தொகுத்தவர் - டொமினிக் ஜீவா | 90/= |
| 35. | நினைவின் அலைகள் : எஸ். வீ. தம்பையா | 60/= |
| 36. | முன் முகங்கள் (53 மல்லிகை அட்டைப்படக் குறிப்புகள்) | 200/= |

# பிரமிளா பிரதீபன்



மாபெரும் வரலாற்றுத் திருப்பங்களும், புரட்சிகளும் சமூக மாற்றங்களும் சென்ற நூற்றாண்டில் தான் நடந்து முடிந்தவை என்பதை நாம் அனைவரும் நன்கறிவோம். இதே நூற்றாண்டில் தான் படுதோல்விகளும், ஏமாற்றங்களும் மனித குலம் எதிர்கொண்டது. அதே சமயம் தொடர்ச்சியான வாசிப்புப் பழக்கம் உள்ளவர்களுக்கும் ஆழ்ந்து சிந்திப்பவர்களுக்கும் தொடுவானத்தில் நம்பிக்கை தரும் ஒளிக் கீற்றாக இலத்தின் அமெரிக்காவும், நேபாளமும் திகழ்கின்றன.

மலையக மக்கள் அன்றாடம் எதிர்கொள்ளும் நெருக்கடிகள், குறிப்பாகப் பெண்களுக்கு எதிராக நிகழும் வன்முறைகள், அநீதிகள் பிரமிளாவின் கதைகளின் உள்ளடக்கங்களாக விரிகின்றன. இவரது தொகுப்பில் சபலம், மறைவைத் தேடி, இளிச்சான், பாக்குப்பட்டை போன்ற கதைகள் யதார்த்தமான மலையகத்தைக் கண்முன் நிறுத்துகின்றன.

மலையகத்தின் உயிர் மூச்சாகத் திகழும் மொழியும், பெண்களுக்கே உரித்தான தனித்துவமான மொழி நடையையும் இவர் கதைகளில் லாவகமாகக் கையாண்டிருப்பது இத்தொகுப்பில் வெளிப்பட்டு நிற்கின்றது.

இளம் தலைமுறையைச் சேர்ந்த பல்வேறுபட்ட எழுத்தாளர்களைப் பதுளை தந்துள்ளது. அந்த வகையில் பிரமிளாவின் அநுபவச் செறிவும், கதை சொல்வதில் உள்ள நேர்த்தியும் இத்தொகுப்பின் மீது அனைவரது கவனத்தையும் ஈர்க்கின்றன.

**சி. காண்டீபன்**
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
04.05.2010

மல்லிகைப் பந்தல்

ISBN : 978-955-8250-46-4